586

சக்தி

மாத வெளியீடு

பின்லந்தில் ஒரு பேப்பர் மில்



பின்லந்து தேசத்தில் வல்கியா கோஸ்கி என்னுமிடத்திலுள்ள ஒரு பேப்பர் மில்

போட்டோ ஸ்ரீ எ. கே.

EVERY PRINTING ORDER

UNCOVERS a great deal of detail work. Whether this detail work becomes an irksome burden to yourself or is assumed by your printer depends largely on your choice of printing organization.

Here we assure the complete responsibility for our customer's printing. The detail of proof-reading is taken over by our own organization. The paper, color, typography, margins, and all the other numerous features of your printing that sometimes please or vex you — they are part of OUR job. When your order is placed with us you don't have to do a part of the work yourself.

★

SHAKTI PRESS LIMITED

52, ARMENIAN STREET, MADRAS

பொருளடக்கம்

சக்தி பள்ளியெழுச்சி	சுவாமி சுத்தானந்த பாரதியார் ...	18
இராமோபதேசம்	" திருஞானம் " ..	19
காலத்திற் கேற்ற கல்வி	தலையங்கம் ...	19
அகத்தியர் பேச்சு	" முருகன் " ...	195
தமிழ் வசன இலக்கியத்தின் வரலாறு	ஸ்ரீ பி. கோதண்டராமன், எம், ஏ., பி. எல். ...	199
தரிசு நிலம்	" ராஜாராம் " ...	203
பாரத சக்தி மஹாகாவியம்	சுவாமி சுத்தானந்த பாரதியார் ...	205
கைலாச நிகண்டு சூளாமணி	இராவ் சாகிப் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல். ...	209
பின்லந்தில் ஒரு தமிழன்	ஸ்ரீ ஏ. கே. செட்டியார் ...	212
பெண்கள் மூலம் சுயராஜ்யம்	காந்தியடிகள் ...	216
பாப்பா இலக்கணம்	... ...	217
சூரியன்	" தினகரன் " ...	220
தார்	ஸ்ரீ ல. காமேச்வர சர்மா, எம். ஏ. ...	223
ஏழை முருகன்	" வீராசாமி " ...	227
இனி நாம் செய்ய வேண்டியது யாது ?	கவுண்ட் லியோ டால்ஸ்டாய் ...	235

"சக்தி"

மாத வெளியீடு

சந்தா விகிதம்

உள் நாடு

வருடச் சந்தா	....	ரூ. 3 8 0
6 மாதம்	....	„ 2 0 0
தனிப்பிரதி	....	„ 0 4 0

	பர்மா	மலேயா
வருடச் சந்தா	ரூ. 4 0 0	ரூ. 5 0 0
6 மாதம்	„ 2 4 0	„ 2 12 0
தனிப்பிரதி	„ 0 5 0	„ 0 6 0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விளம்பர விகிதம்

அட்டை

2-வது பக்கம்	....	ரூ. 20
3 „	....	„ 20
4 „	....	„ 30

உட் பக்கங்கள்

1 பக்கம்	....	ரூ. 15
½ „	....	„ 7-8

மற்ற விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "சக்தி", 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

ஸண்டே டைம்ஸ் பிராஸஸ் ஸ்டூடியோ

லைன் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள்
நவீன முறைகளில்
செய்து தரப்படும்

வியாபாரிகளுக்கு சகாய
மாகவும் துரிதமாகவும்
சேவைகள் செய்யும்.

விவரங்களுக்கு:

மானேஜர், "**ஸண்டே டைம்ஸ்**" சென்னை.

போன்: 2678.

பர்மாவுக்கு
"சக்தி" யின் பிரதிநிதி

"சக்தி" மாத வெளியீட்டுக்கு சவுட்டாக்கா ஸ்ரீ. கு. முத்தையா அவர்களை சந்தா சேர்க்கவும் விளம்பரம் சேர்க்கவும், ஏஜெண்டுகள் நியமிக்கவும் நியமித்திருக்கிறோம்.

மானேஜர் "சக்தி"

விவரம் வெண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதுங்கள்:—

Mr. K. MUTHIAH,
KYAUKTAGA,
Pegu Dist., Burma.

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் க — இதழ் ரு   பிரமாதி — மார்கழி

சக்தி பள்ளியெழுச்சி

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

விண்முகங் கனிந்தது ; விடிந்தது காலை
வீங்கிருள் அகன்றது ; தூங்கின குமுதம்.
தண்கடல் அருணத் தணற் கடலானது.
தடங்கண் விழித்தன தாமரை யெல்லாம்.
மண்முகம் பைம்பொன் மலர்முக மாகிட
மங்கலச் செங்கதிர் எழுந்தது வானில்.
எம்முகம் பார்த்தருள் புரிவதற் கெண்ணி
எழுந்தருள் ஓம்சுத்த சக்தியெந் தாயே. க

ஆர்வ மெனும்சேவல் கூவுதன் அருளை
'அம்மம்மா' என்றுன்னை அழைக்குதெம் அன்பே.
கார்வரக் காணும் பசும்பயிர் போலுன்
கருணையைக் காணத் துடிக்குதெம் வாழ்வே.
போர்தரு மாயப் புலன்க ளடங்கப்
புந்தியில் உன்னொளி பொங்கி விளங்க
ஏர்பெறும் திருமுகங் காட்டியெம் முள்ளே
எழுந்திரு ஓம்சுத்த சக்தியெந் தாயே! உ

புள்ளினம், வண்டினம் பூமணச் சோலை
பொங்கிசை யாலுன்னைப் போற்றின மகிழ்ந்தே
துள்ளின கன்றினம் தாய்மடி யுண்டே,
தொண்டருன் பெருமையைத் துதித்தனர் கூடி.
விள்ளரும் ஆனந்தத் தேனரு வியைப்போல்,
வேகமாய் வந்தெங்கள் தாகத்தைத் தீராய்
எள்ளரு ஞானப் பொலிவெமக் கருளி
எழுந்தருள் ஓம்சுத்த சக்தியெந் தாயே! ௩

பொருட்குலம் ஓங்குக வுன்பணி போற்ற;
பொய்ச்சாதி மதங்களின் போராட்டம் ஒழிக.
அருட்குலம் உன்னருள் ஆட்சியில் வாழ்க.
அமரத் தன்மைதரும் ஆனந்தச் சுடரே!
தெருட்குலத் தீரரும் வீரரும் ஓங்கி
தெய்வ சமுதாயம் செழிக்கவிந் நாட்டில்.
இருட்குலத் தீமைகள் இன்றோடும் பொன்ற
எழுந்தருள் ஓம்சுத்த சக்தியெந் தாயே! ௪

அந்தா தாரகை ஐக்கிய மாகும்
அருணக் கிரணம்போல் அறிவொளி வீசி,
பந்த தொந்தவினை பாறிட மாற்றிப்
பரம சிவானந்தம் பாலித் தருளாய்.
சிந்தையி னித்திடுந் திவ்விய ரசமே
திறமைக ளீந்திடும் சிற்சக்திக் கனலே
எந்தெந்த திசையிலும் இலகவுன் முகமே
எழுந்தருள் ஓம்சுத்த சக்தியெந் தாயே! ரு

இராமோபதேசம்

(திருஞானம்)

51. பத்துலட்சம் சந்ததிகளுக்கப்பாலும் ஒரு விதை ஆதிவிதையைப்போலவே அளவிலாத் திண்மையுற்றிருக்கிறது.

52. நம்முள்ளே யுள்ள எல்லையற்ற ஆன்மாவின் அளவில்லாச் சக்தி மாறாது, அழியாது. எல்லையற்றது! எல்லையற்றது எப்படியழியும்? அது ஒருநாளும் அழியாது.

53. நீ உன்னை உடல் என்கிறாய். அது மடமை. நீ உடலில்லை. நீ அகண்ட சக்தி. நீ தெய்விகம். நீ நிலைபெற்ற, மாறாத, நிர்விகாரப் பொருள். அதுவே நீ. அதை யறி. நீயே உலகெலாம் இருக்கக் காண்பாய்.

54. அகண்டமாக ஒரு ராமனே உடல்கள் அனைத்திலும் பிரதிபலிக்கிறான். கண்ணாடி வீட்டிற்புகுந்த நாய்போல மூடர் இங்கே வருகின்றனர். உனது நினைப்பை மாற்று. 'நாய்போலல்ல, நாயகன்போல் கடவுளைப்போல் வாழ்! நீயே உலகிற் கிறைவனாவாய்'.

55. மனிதனின் சுபாவம் கடவுள். கடவுள் மனிதனின் ஆன்மாவாக இல்லாவிடின், உலகில் தீர்க்கதரிசிகளும், முனிவரும் அவதரிக்கவே முடியாது.

56. உலகமெல்லாம் விண்ணே. கடவுள் ஒரு போதும் ஏமாறமாட்டார்.

57. நான் கடவுள் என்னாமை ஒரு பாபம்.

58. நீ ஏற்கெனவே கடவுளாயிருக்கிறாய் என்பது வேதாந்தம் சொல்லும் நிதர்சனமான உண்மை. நீ கடவுளன்றி வேறில்லை. உனது கடவுட்டன்மை முயன்றடைய நிற்பதன்று. அது ஏற்கெனவே உள்ளது. அதை நீ அறிந் துணர வேண்டியதே மிச்சம்.

59. ஈவதே இன்பம், இரப்பதன்று, கேட்பதன்று, என்னும் உண்மையை அறிய வேதாந்தம் உன்னைத் தூண்டுகிறது.

60. வேதாந்தத்தின்படி, தனிச்சொத்துரிமை பாபம், ஆன்மவிரோதம்.

61. அனுபவ வேதாந்தமாவ தென்ன? வேகம், முன்னேறும் உழைப்பு; சும்மாயிருக்கும் சோம்பலன்று. சளைப்பும் சலிப்புமின்றி உழைப்பை ரசித்தல். ஐயப்பிணி யற்ற மனச்சாந்தி, உலைத்தலன்று; ஒழுங்குறுத்தல், மாமூல் வழக்கமன்று; காலத்திற்கேற்ற சீர்திருத்தம். அலங்காரப்பேச்சன்று, உண்மையான திண்மையான உணர்ச்சி. கட்டுக்கதையன்று, நிஜத்தின் கவிதை. காலஞ்சென்ற நூலாசிரியர்களின் சம்மதம் அன்று; உண்மை நிகழ்ச்சிகளின் நியாயம். வெறும் சத்தற்ற மேற்கோள்களன்று, வாழும் ஆன்மசித்தி—இவையே அனுபவவேதாந்தமாம்.

62. அச்சிட்டு, பூச்சி தொளைக்கும்படி பீரோக்களில் அடுக்கிய புத்தகவேதாந்தம் பயனில்லை. அதை நீ வாழவேண்டும்.

63. வேதாந்தம் உனது குளிரைப்போக்காவிட்டால், உன்னைக்களிப்புறுத்தாவிட்டால், உன் பந்தச்சுமையை நீக்காவிட்டால் அதை எற்றித் தள்ளு.

64. வேதாந்தத்தின்படி பச்சாதாபம் ஒரு துர்ப்பலமாகும்.

65. பொதுஜனங்களின் பைபிள் வேதாந்தம். அதனாலேதான் அது அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. அதன் அத்வைதத்தைப்போற்றாத தத்துவம் உலகிலில்லை, உண்மையேயான வேதாந்தக் கொள்கையைச் சம்மதித்து, அதன் அபிவிருத்திக்காகப் பாடுபடாத விஞ்ஞான மில்லை. அதனாலேதான் படித்த இந்துவுக்கு வேதாந்தம் நன்றாகப்படுகிறது.

66. வேதாந்த தத்துவத்தை வாழ்வதே சிறந்த பிரசாரமுறையாம். அதனின்வேறு சிறந்த வழியில்லை.

67. நம்மிருவருக்கும் மேலான அதிசயமான அபேத உணர்ச்சி கொண்டாலேதான் உன்னை நீ அறிவாய். அதுவே ஆன்மவுணர்ச்சி. அதையே வேதாந்தம் உபதேசிக்கிறது.

68. நீ எதையாவது அறிய, அடைய விரும்பினால் நிழலைவேட்டையாடாதே. உனது தலையைத் தொடு, நிழலைத்தொடுவாய். உன்னுட்செல்! இறையறி. பிறகு விண்மீன்களும் உன்கைவேலையென்றறிவாய். அன்பும், கவர்ச்சியும் உள்ள பொருள்களெல்லாம் உன் சாயலென்றறிவாய்.

69. சுவர்க்கம் உன்னுள் உள்ளது வானகம், இன்பவீடு உன்னுள் உள்ளது. எனினும் நீ தெருப்பொருள்களில் மகிழ்ச்சி விரும்பித் திரிகிறாய். புறத்தே, புறத்தே, விஷயங்களில் இன்பத்தை நாடுகிறாய்....வெட்கம்!

70. ஊனுக்கடிமையாகி, உலகிற்கும் இறைவனாயிருக்க முடியாது.

ஓம், ஓம், ஓம்!

காலத்திற் கேற்ற கல்வி

அழகும் மணமும் மலருள் உள்ளன; ஒளியால் மலர்ந்து அவை விளங்குகின்றன. அறிவும் ஆற்றலும் குழந்தையுள் உள்ளன; அவற்றைத் தூண்டுவதே கல்விப் பயிற்சியாகும். குழந்தை ஒரு சைதன்ய வடிவம். அதற்கு வாழ்க்கைத் தொழில் நடத்த ஊனுடல் உள்ளது; வெளியுலகை அறிய ஐம்புலன்கள் உள்ளன; உள்ளுலகை அறிய அந்தக்கரணங்கள் உள்ளன. நல்லது பொல்லதைப் பகுத்தறிந்து நடக்கப் புத்தியுள்ளது. தனது தெய்வத் தன்மையை அறிய உள்ளம் உள்ளது, ஆன்மவுணர்ச்சியுள்ளது. இவையனைத்தையும் தூண்டி வளர்ப்பவனே ஆசிரியனாவான். அவற்றை வளர்க்கும் சாதனங்களைத் தாராளமாக வழங்குவதே பள்ளிக்கூடமாம். அரசாங்கத்திற்கு அடிமைகளைத் தயாரிப்பதல்ல; அடிமைத்தளைகளை அறுத்தெறியும் தீரரை ஆக்குவதே கல்வி; பலசரக்குப் போல் புத்தகங்களைக் கொண்டு ஐந்து மணி நேரம் கதறி வயிறு வளர்ப்பவன் ஆசானல்லன். வருங்கால வீரப்புலவரை ஆக்குவோனே ஆசான். ஆட்டுமந்தை மாதிரிக் குழந்தைகளை அடைத்துவைத்து நூலறிவைத் திணிக்கும் இடமன்று; இயற்புலமையைத் தூண்டிக் குழந்தையை நிபுணனாக்கும் நிலயமே கலாசாலையாம்.

இக் காலம், வாழ்க்கைப் போராட்டம் வரவர வலுக்கிறது; அறிவு விசாலிக்கிறது. எந்தத் துறையிலும் போட்டி அதிகமாகிறது. புதுப் புது யந்திரங்கள் தோன்றி இடத்தையும் காலத்தையும் வெல்லுகின்றன. இப்போது உடலாலும் அறிவாலும் உழைத்தே உண்ண வேண்டும். மூளையில் புத்தக மூட்டையேற்றினால் போதாது; வயிறு வளர்க்க ஒரு தொழில் வேண்டும். தெய்வம் விட்டபடி விடட்டும் என்றிருக்க முடியாது; அடுத்தவன் நம்மை வீழ்த்தி முன்னேறுவான். வாழ்வை வீரன்போல் வென்று ஆள வேண்டும்; சோர்வை நோய்போல் வெறுத்துத் துணிவுகொண்டு முயலவேண்டும். அறிவு, கலை, ஆற்றல், ஒழுக்கம், தொழில், திறமை—ஆகிய ஐந்தையும் நிறைவாக வளர்த்து நாட்டில் அருட்புலவரையும், அசகாய சூரரையும், கலா நிபுணரையும், பல பீமர்களையும், ஆத்மஞானிகளையும் ஒருங்கே வளர்ப்பதே நிறைவான கல்வியாகும். நமது நாடு போலி இங்கிலாந்தாகவோ போலி ஜப்பானாகவோ ஆகக்கூடாது. நமது பாரத தேசத்திற்குரிய அத்யாத்ம சக்தியைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். நமது தாயின் அருட் செல்வத்தை மேன்மேலும் பெருக்க வேண்டும். அத்துடன் மேனாடு பெருமை கொள்ளும் பொருட் செல்வத்தையும் அமோகமாக வளர்க்க வேண்டும். அருள் பொருள், அகம் புறம் ஆகிய இரண்டிலும் நிறைவோங்கும் கல்விப் பயிற்சியே இனி நமது நாட்டை உய்விப்பதாம்.

இப்போது நமது நாட்டில் நல்ல கல்வியைத் தர முயலும் நிலயங்கள் சிலவுள்ளன. **தயானந்தர் ஆங்கில வேதக் கல்லூரி**, சிரத்தானந்தர் கண்ட காங்கிரி குருகுலம் இரண்டிலும் பிரமசாரிகளுக்கு வேத ஞானமும் தற்காலத்திற்குரிய லௌகிகஞானமும் அளிக்கின்றனர். **சாந்திநிகேதன**த்தில் கவி தாகூர் ஒரு விசுவவித்யாலயம் நடத்துகிறார். அதில் இருபாலாரும் சுயேச்சையாக அறிவும் கலையும் அவரவர் இயல்பிற்கேற்ற தொழிலும் பயிலுகின்றனர். அதில் படித்த மாணவர் சர்க்கார் பரீக்ஷைகளுக்குச் செல்லுகின்றனர். காசி சர்வகலாசாலை நாட்டிற்குரிய அருட் செல்வத்தையும், காலத்திற்கேற்ற பொருட் செல்வத்தையும் புகட்டும் பெரிய அறிவு நிலயம். மேனாட்டு முறைப்படி அங்கே மாணவர் பல தொழில்களும் கலைகளும் பயின்று பட்டம் பெறுகின்றனர். காசி சர்வ கலாசாலையை நம் நாட்டு ஆக்ஸ்போர்ட் என்னலாம். அலிகார் இஸ்லாமியக் கல்லூரி இஸ்லாமிய நாகரிக வளர்ச்சிக்கும் நவநாகரிகத்திற்கும் ஏற்ற கல்வி பயிற்றுகிறது. அடையாற்று பெஸண்ட் கலாசாலை இருபாலாருக்கும் தற்காலத்தில் உயர்ந்ததெனச் சொல்லும் மேனாட்டு முறைப்படியே கல்வி யளிக்கிறது. சென்னை சர்வகலாசாலை, அண்ணாமலை சர்வகலாசாலை இவையெல்லாம் முற்றிலும் அரசாங்கத்தார் வகுத்த முறையைத் தழுவியே பட்டதாரிகளைப் படைக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்து அனுபவம் பெற்ற மஹாத்மா இப்போது புதிய கல்வி முறை வகுத்திருக்கிறார். அதுவே வார்தாக் கல்வி முறையாம். ஒரு தொழிலைக் கொண்டு கல்வி புகட்டுவதே அதன் தத்துவம். அதனால் மாணவன் உழைத்துப் படிக்கிறான்; தானும் உடனுழைத்து ஆசிரியன் அதன் பயனைக் கொண்டு பிழைக்கிறான். அதனால் கல்விச் செலவு குறைவு;

சுயேச்சையாகப் பிழைக்கவும் வழியுண்டாகும். நூற்றல், நெய்தல், ஏருழுதல், காய்கனித் தோட்டம் வளர்த்தல் முதலிய தொழில்களைக் கற்கும்போதே பேச்சு, எழுத்து, கணக்கு, கலை, பூகோளம், சரித்திரம், தாவரம், ரசாயனம், பௌதிகம் முதலியவற்றில் மாணவன் பயிற்சி பெறுவான். பேச, எழுதப் படிக்க, கணக்குப் போட, உலகை அறியவேண்டிய படிப்பும், பிழைக்க ஒரு தொழிலும் வார்தாக் கல்வியால் மாணவருக்கு உண்டாகும். இக் கல்விமுறை அமெரிக்காவில் நடக்கிறது. எத்தனையோ மாணவர் அங்கே தொழில் செய்துகொண்டு படிக்கின்றனர்.

மேற்சொன்ன கல்வி முறைகளெல்லாம் அறிவு, தொழில், உடலுறுதி, கலை ஆகிய நான்கையும் தத்தம் போக்கில் வளர்க்க முயலுகின்றன. ஆனால் காலத்தை வென்றோங்கும் நிபுணரை நாம் தயாரிக்க வேண்டும். குழந்தையிடம் உள்ள புலமையைத் தூண்டி அதைக் கொண்டு அறிவாற்றல்களை நிறைவாக்க வேண்டும். அதற்கு முதன்மையாக வேண்டியது அந்தக்கரணப் பயிற்சியாகும். குழந்தைகளின் புலன்களையும் ஆறாவது புலனாகிய மனத்தையும் நன்றாகப் பயிற்ற வேண்டும். மனத் திட்பத்தால் வினைத் திட்பமுண்டாகும். பிறகு எந்தத் துறையிலும், மாணவன் நிபுணனாக வியலும். அதற்கேற்ற கல்வி முறையைக் காண்போம்.

கல்வியை ஐந்து வகையாக வழங்கலாம் :— (1) பொதுக் கல்வி (2) குழந்தைக் கல்வி (3) சிறுவர் கல்வி (4) இளைஞர் கல்வி (5) அநுபவக் கல்வி.

(1) **பொதுக் கல்வி** :—நம் நாட்டில் பல கோடி மக்கள் மடமையிருளில் வருந்துகிறார்கள், வறுமைப் பிணியில் வாடுகிறார்கள்; உடல் நலங்குன்றி நடைப்பிணங்களாகக் காண்கின்றனர்; தீய பழக்கங்களால் கெடுகின்றனர். கடன் சுமையேறிக் கவலைப்படுகின்றனர். இவர்களுக்கு எண், எழுத்தறிவு, பிழைப்பிற்கேற்ற தொழிலறிவு, சிக்கனம், தூயவாழ்க்கை, அறநெறி—இவற்றை எளிதாகவும் இயல்பாகவும் புகட்ட வேண்டும். இப் பணிக்கு உயர்கலை மாணவர், பொது ஊழியர், ஆசார், மருத்துவர், படித்த பெண்கள், பாடுவோர், நடிகர்—இவர்கள் முன்வரவேண்டும். படித்த பெண்கள் தமது தெருக்களில் உள்ள பெண்களை ஒரு வீட்டில் கூட்டி, ஒழிந்த நேரங்களில் எழுத்தறிவு புகட்டலாம்; நல்ல பொருளைப் பற்றியும் பெரியார் வரலாறுகளைப் பற்றியும் பேசலாம்., பாட்டாளிகளுக்குக் காலை வேலை தொடங்குமுன் அல்லது மாலை வேலை முடிந்தபின் கல்வி புகட்டலாம். மாலை 5½-மணிக்கெல்லாம் தொழிலாளர் கட்டுப்பாடாக ஓய்வு பெறவேண்டும். அவர்களுள் ஒரு பஜனைகோஷ்டி இருக்க வேண்டும். பக்தி, அன்பு, சமரஸம், அறநெறி, கல்விப் பயன், சுகாதாரம் இவற்றைக் குறித்து எளிய இனிய பாடல்களைப் பாடிக்கொண்டே, அவர்கள் தெருத்தெருவாகச் சுற்றவேண்டும். பஜனையைப் பொதுத்தொண்டரும், ஆசிரியரும் நடத்த வேண்டும். பாட்டிற்குக் கூட்டம் வரும். எல்லாரையும் ஒரு சவுக்கத்திற் கூட்டி சுமார் 6-மணிக்கு மணியடித்துக் கல்வி தொடங்க வேண்டும். ஊர் விளக்கடியில் கரும்பலகை போட்டு எழுத்துக்களை எழுதிக்காட்ட வேண்டும். மணலிலாவது, கற்பலகையிலாவது பொது ஜனங்கள் எழுதிப் பழகவேண்டும். எண், எழுத்து, சொல், சொற்றொடர், சிறு கதைகள், பயனுள்ள பாடல்கள் அறிவை வளர்க்கும் பேச்சுக்கள் இவற்றால் முறையே எடுத்த புத்தகம் படிக்கும் திறமை வளர்க்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், ஊர்த் தெருவிலும் பயனுள்ள புத்தகசாலையிருக்கவேண்டும். சுமார் 200 வீடுகளுக்கு ஒரு புத்தகசாலை வீதம் இருக்க வேண்டும். அதுவே வாசகசாலையுமாகும். எளிய நடையில் நாட்டறிவு, உலகறிவு, விஞ்ஞானம், வீட்டொழுங்கு, பொருளாதாரம், சிக்கனம், அரசியல், சன்மார்க்கம், வீரர் வரலாறு, தாவரம், விவசாயம், கைத்தொழில் மாடு வளர்த்தல் முதலிய பொருள்களைப்பற்றி 32 பக்கத்திற்குமேற் போகாத ஒரு அணு நூல்கள் ஏராளமாக வெளிவந்து கிராமப் புத்தகசாலையில் இருக்க வேண்டும். வாழ்வை உயர்த்தும் பாடல்களும் வேண்டும். அவற்றை ஜனங்கள் படித்துப் பெரும்பயனடைவர்.

தக்க வைத்தியர்களைக் கொண்டு வாராவாரம் சுகாதாரப் பிரசாரம் செய்யவேண்டும். பொதுத் தொண்டர் தெருத்தெருவாகச் சென்று சுத்தமாக வாழும் வழியைச் சொல்ல வேண்டும். கிராமாதிகாரிகள் இவ்வகையில் துணைசெய்ய வேண்டும். மாதம் ஒருமுறை பெரியார் வரலாறுகளை நாடகமாக நடத்திச் சன்மார்க்கத்தை விளக்கலாம். நாடகம் ஆயிரம் சொற்பொழிவினும் சிறந்த பயனைத்தரும். விளக்குப் படங்களைக் கொண்டும் தொண்டர் நல்ல விஷயங்களைப் போதிக்கலாம். நல்ல முறையில் தெருக்கூத்துகள், கதை புராணங்கள், கோயில் வழிபாடுகள், பஜனைகள், கோலாட்டங்கள், குதித்துப் பாடல்கள் இவையெல்லாம் பொதுஜனக்

கல்விக்குத் துணையாகும். ஒவ்வொரு தெருவிலும் உடற் பயிற்சிக்காக இடமிருக்க வேண்டும். குஸ்தி, சிலம்பம், கசரத், பஸ்கி, கிளித்தட்டு, பலீன் சடுகுடு, இவையெல்லாம் நல்ல உடற் பயிற்சிகளாகும்.

(2) **குழந்தைக் கல்வி** :—5-வயது முதல் 10-வயது வரையில், குழந்தைக் கல்வி நடக்கும். ஐரோப்பா அமெரிக்காவில் 3-வயது முதல் 6-வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு இனிய பயிற்சி யளிக்கின்றனர். அதற்கு ஃப்ரோபெல், மோந்தஸாரி போன்ற மேனாட்டறிஞர் ஏராளமான செலவில் விளையாட்டு முறையமைத்திருக்கின்றனர். ஆனால் செலவதிகம்; அவ்வளவு செலவை நம் ஏழைநாடு தாங்காது; மேலும் நமது குழந்தைகளுக்கு நம் நாகரிகத்திற்கேற்ற பயிற்சி தரவேண்டும். 5-வயது வரையில் குழந்தைகள் தாய்மார் கவனத்தில் இருக்க வேண்டும். தாயே குழந்தையின் முதலாசிரியர். தாய்மாருக்குக் குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பயிற்றவேண்டும். 5-வயதில் சுமாராகப் பேசவும், பேச்சறியவும் குழந்தைகளுக்குத் தெரியும். குழந்தைப் பள்ளிக்கூடங்கள் தோட்டங்களில் அமையவேண்டும். பிராணிகளைப் பிரியமுடன் வளர்த்தல், பயிர்க்குழி போடல், எருவைத்தல், நீர்மொண்டு விடுதல், பூப்பறித்தல், கனிபறித்தல், விதவிதமான செடிகொடிகளையும் மலர்களையும் அறிதல், பூவலங்காரம், மண் செப்புகள் செய்தல், செப்பு வைத்தாடல், பந்து விளையாட்டு, மணல் விளையாட்டு, அட்டையாலும் கட்டையாலும் வீடுகட்டல், காயிதப் பூக்கள் செய்தல், உவர்மண் போட்டுத் துணி வெளுத்தல், இஸ்திரி போடுதல், வீடுகட்டி மெழுகுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், இலை தைத்தல், காயிதப்பை செய்தல், துணி தைத்தல், சொக்காய்க்குத் துணி வெட்டல், மணலில் எழுதல், புளியவிதையால் எழுத்துச் செய்தல், எண் கற்றல், பூக்களை எண்ணிப் பறித்தல், எண்ணித் தொகுத்தல், பலநிறப் பூக்களைக் கொண்டு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணக்குகளைச் சொல்லித்தரல், இராமாயணம், பாரதம், ஸ்காந்தம், பெரியபுராணம் முதலிய பழங்கதைகளினின்றும், பாரத வீரர் வரலாற்றினின்றும் உணர்ச்சியுள்ள சம்பவங்களைச் சொல்லி அவற்றையே நாடக ரூபமாகப் பயிற்றி விளையாடச்செய்தல், அம்பு கட்டல், அம்புவிடல், தேர் கட்டல், வண்டி கட்டல், ஆடுமாடுகளைப் பட்சமுடன் வளர்த்தல்—முதலியவற்றால் ஏழு வயதிற்குள் குழந்தைக்கு நல்ல பயிற்சிதரலாம். ஏழாம் வயதில் ஒழுங்காக அரிச்சுவடி, எண்சுவடி, ஓலையெழுத்து (ஓலை யெழுதினால் கையெழுத்து மணி மணியாக இருக்கும். அதை அவசியம் நம்மவர் இன்று பயிலவேண்டும்.), காயித எழுத்து, நீதிப்பாடங்கள், சிறுகதைகள், உள்ளூர் அறிவு, தோட்டக்கலை, நூற்றல், பொம்மை செய்தல், சிற்றாள் வேலை, தொழிற் கல்வி மாணவருக்கு உதவல், இயற்கைப்பொருள்களை ஆராய்தல், பசுபட்சி வாழ்க்கையைக் காணல், சிற்றேவல்கள் செய்தல் முதலியவற்றால் நல்ல பயிற்சி தரலாம். அதன் பிறகு படிப்படியாக மாணவன் பக்குவத்திற் கேற்றபடி எளிய நடைக் கதைகள், வரலாறுகள், பாடல்கள், ஔவை நூல்கள், கதைப் பாட்டுகள், நீதிச் சதகங்கள், ஓதுகணக்கு, சிறுகுழி பெருகுழி, முகத்தலளவை, எடுத்தலளவைகள், வீட்டுக் கணக்குகள், உடலுறுதி நூல், நல்லொழுக்கம், பயிர்வேலை, மலர், கனிவிளைவு, நெசவு, பானை வனைதல், பொம்மை செய்தல், பலகையறுத்தல், சூளை வைத்தல் முதலியவற்றால் திறமையான பயிற்சி பெறலாம். பத்து வயதிற்குள் ஒரு பயனுள்ள தொழில், நூற்றல், கைப்பழக்கம், எடுத்த வேலையை இனிது முடிக்கும் திறமை, தூயவாழ்க்கை, நன்னெறி யொழுக்கம், தாய்மொழியைத் தெளிவாகப் பேச, எழுத, படிக்கத் திறமை, வீட்டுக் கணக்கு, குறிப்புப் பேரேடு வைத்தல், கடைக் கணக்கு, கடித மெழுதல், நாட்டு வரலாறு, பஞ்சாங்கம் பார்த்தல், ஜில்லா பூகோளம், மாகாண பூகோளம், இனிய நீதிப் பாடல்கள், நாட்டன்பு, சன்மார்க்கம்—இவையும் இன்னும் பலவகை யறிவும் எளிதாக, இயல்பாகச் சிறுவருக்கெய்தும். சன்மார்க்க ஞானம் பெரும்பாலும் பஜனைப் பாடல்களாலும், தினசரி ஒழுக்கத்தாலும் எய்தும். சாதிமத வேறுபாடே பள்ளிக்கூடத்தில் தலைகாட்டக் கூடாது. எல்லாரும் ஒரு குலம் என்னும் உணர்ச்சி மாணவர் மனத்தில் ஊறிப்போக வேண்டும். இருபாலாரும் ஒன்றாகவே படிக்கலாம்.

(3) **சிறுவர் கல்வி** :—11-முதல் 15-வயது வரையிலுள்ள பையன்களுக்கு இக் கல்வியாம். தமிழில் இலக்கண இலக்கியப் பயிற்சி முற்கால தற்காலநாவலர், பாவலர், அருட்கவிகளின்வாக்குகளின் பயிற்சி, தமிழர் வரலாறு, பாரதநாட்டு வரலாறு, இதிகாசப் பயிற்சி, கதை சொல்லல், கட்டுரை எழுதல், பத்திரிகை படித்தல், தற்காலம் பயிலும் கணித சாத்திரம், பீஜகணிதம், க்ஷேத்ரகணிதம், நிலக்கணக்கு, பூகோள சாத்திரம், பூத வேதி தாவரங்கள், உடலறிவு, இலகு வைத்தியம், காயம் கட்டுதல், நோயாளியைப் பாதுகாத்தல், சாதாரணப் பயிற்சி, பேச, படிக்க

எழுத இந்துஸ்தானிப் பயிற்சி, வியாபார முறைக்கும், உலக நடையறிவுக்குப் போதிய ஆங்கிலப் பயிற்சி, ஒரு குறித்த தொழிலில் புலமை, அதை லாபகரமாக நடத்தும் வல்லமை, பொதுநலத் திறமை, குழந்தைகளுக்குக் கற்பித்தல், கிராம சேவை, தேச சேவை—ஆகிய துறைகளில் இருபாலாரும் 15-வயதில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

(4) **இளைஞர் கல்வி** :—இக்கல்வி 16 முதல் 18 வரையில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிகழும். பெண்களுக்கு சமயல், வீட்டு நிர்வாகம், உடற்கூறு வைத்தியம், பிள்ளைப்பேறு, குழந்தை வளர்த்தல், போதனை முறை, சங்கீதம், நடனம், சித்திரம், அணிவேலைகள், தோட்ட வேலை, சிற்பம், சன்மார்க்க சாத்திரம் முதலியவற்றில் நிறைவான பயிற்சி தரப்படும். அவரவர் தமது தொழிலுக்கேற்ற இலக்கிய இலக்கணங்களெல்லாம் மாசறக் கற்பர்.

ஆண்களுக்கு வீட்டையும் நாட்டையும் நிர்வகிக்கும் வீரத்திறமையே பயிற்சியாம். யந்திரத் தொழில், நெசவு, காயித உற்பத்தி, மரத் தொழில், இரும்புத் தொழில், பஞ்சலோக வேலைகள், ஓட்டுத் தொழில், நவீன யந்திரவாகனத் தொழில், புதுமுறை விவசாயம், தோட்டத் தொழில், ஆலைத் தொழில், மின்சார வேலைகள், ரேடியோப் பயிற்சி, ஆங்கிலத்திலும் இந்தியிலும் நல்ல பயிற்சி, தமிழ்ப் புலமை, வியாபார தந்திரம், கணக்கு வேலை, பூத வேதி தாவர பிராணி நூல்களிலும், பூகோளத்திலும் ஆழ்ந்த பயிற்சி, பிரயாண அனுபவம், பத்திரிகைத் தொழில், நூலெழுதும் திறமை, கவித்திறமை, நாடகக் கலை, வைத்தியம், சிற்பம், உபாத்திமை முதலிய தொழில்கள், இராணுவப் பயிற்சி, பகைவனை எதிர்த்து வெல்லும் திறமை, ஆத்யாத்ம சாத்திரப் பயிற்சி, இராஜயோகசித்தி—இவற்றில் 20-வயதுக்காளை நிறைவுற்றுத் தீரனாக நிற்பான். அத்துடன் ஓய்வு நாட்களில் பல தலங்களுக்குச் சென்று உலகை நேரே கண்டு லௌகிக ஞானம் பெறுவான்.

(5) **அனுபவக் கல்வி** :—20-முதல் 22-வரையில் இளைஞர் தாம் கற்றவழி நின்று, சமுதாயப் பணி செய்து அனுபவம் பெறுதல். அப்போது, ஒரு வாலிபன் வைத்தியப் புலவனானால் ஒரு பெரிய வைத்தியரிடம் அமர்ந்து நோயாளரைக் குணப்படுத்தி அனுபவம் பெறுவான். எஞ்சினியரானால் ஒரு பெரிய எஞ்சினியருடன் இருந்து நகரமைப்பில் உதவுவான். இக்காலம் ஒவ்வொரு மாணவனும் தினம் 2-மணி நேரம் கட்டாயமாக இராணுவப் பயிற்சி செய்யவேண்டும். இவ்வாறு பயிலும் மாணவரே ஊரைக் காக்கவேண்டும். கப்பற் புலவனானால், ஒரு கப்பலில் அமர்ந்து உலகைச் சுற்றியறிந்து அத் தொழிலில் நிபுணனாக வேண்டும். ஒருவன் சரித்திரப் புலவனானால் நாட்டுச் சரிதையை ஆராய்ந்து புதுமுறையில் நூலெழுதி மற்ற மாணவருக்குத் தொண்டு செய்யவேண்டும். பூத வேதிப் புலவனானால் ஆராய்ச்சியால் புதியன காணவேண்டும். அல்லது சில வாலிபரை அத்துறையில் பயிற்றிக் காட்டவேண்டும். செயலுள்ள வாலிபர் இக்காலம் ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று, யந்திரக் கலையிற் புலமை பெறலாம். காயிதத் தொழில் கற்றவன் இரும்புத் தொழிலாளியைக் கொண்டு அதற்கேற்ற யந்திரத்தை செய்வித்து நிலைநாட்டிக் கூழ் அரைத்துத் தன் ஊருக்குப் போதிய காயிதங்களைச் செய்து பிழைக்க வேண்டும். சன்மார்க்க நூல்களில் தேர்ச்சி பெற்றவர் தகுந்த யோகிகளிடம் அருட் பயிற்சி பெற்றுச் சமுதாயத்திற் சாதிமத வேறுபாடின்றி அறிவும் அறமும் அருளொளியும் பரப்பவேண்டும்.

இதுவே புதிய கல்விமுறை இம் முறையைச் சில இடங்களில் அனுட்டித்துப் பார்த்தே இங்கே எழுதுகிறோம். நமது நாடு மீண்டும் தலைநிமிர வேண்டுமானால், இலக்கியம், நுண்கலை, இயற்கலை, இயந்திரம், தொழில், அரசியல், வாணிபம், போர்க்கலை, போர்க்கருவிக்கலை, வீரம், சன்மார்க்கம், யோகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நிறைவுற்ற பாரத வாலிபச் சிங்கங்களைப் படைக்க வேண்டும். அர்ஜுனனும், சிவாஜியும், ராமதாஸும், வள்ளுவரும், கம்பனும், குருகோவிந்தனும், திருமாணவனும், இராஜராஜனும், செங்குட்டுவனும், ராக்பெல்லரும், எடிசனும், ஒருங்கே சேர்ந்த புதிய வீரத் திருவடிவில் சக்தி பெற்ற வாலிபர்களை உண்டாக்க வேண்டும். அத்தகைய சக்தி வீரராலேயே நம் நாடு விடுதலைபெறும், நம் நாடு உலகில் தலைநிமிரும், உலகிற்கு அறம் வழங்கும் அமர நிலைதரும். அந்நாள் வருக, வருக!

ஓம் சுத்த சக்தி.

கர்ம பூமி

(முருகன்)

தமிழர்களே! எழுந்திருங்கள்; கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள்; காதைக் கொடுத்துக் கேளுங்கள்; உலக நிலைமையை அறியுங்கள்; உங்கள் நிலைமையை உணருங்கள்; ஐரோப்பிய மூளையின் ஊக்கத்தைப் பாருங்கள்; உங்கள் மூளையின் தூக்கத்தை மாற்றுங்கள்.

நான் ஒண்ணும்பசலி எண்ணங்களிலேயே ஆழ்ந்து குகை மனிதனயிருந்தேன் என்னை இந்தக் **கர்ம பூமி**யான ஐரோப்பாவிற்குக் கொண்டு வந்த நண்பனை இப்போது வாழ்த்துகிறேன். எனக்கு ஆங்கிலங் கற்பித்த போதகரைப் போற்றுகிறேன். ஆங்கிலம் உலகை ஆளுகிறது; ஆங்கில நாடு உலகின் இதயமாயிருக்கிறது. இதே தீவு நரிப்புதரா யிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்; இதே பிரித்தானியர் பச்சையூனருந்திப் பிறந்த மேனிக்குத் திரிந்ததை நான் பார்த்திருக்கிறேன். அதேகாலத்தில் நமது தமிழகத்தில் கரிகால் வளவனும், வள்ளுவனும், சங்கப்புலவரும், நெடுஞ்செழியனும் விளங்கியதை யான் அறிவேன். குறளையும், சிலம்புச் செல்வத்தையும், பத்துப் பாடலையும், எட்டுத் தொகையையும் பயப்படாமற் படித்துப் பாருங்கள்; நமது தமிழர் இருந்த நாகரிகச் சிறப்பு விளங்கும். அச் சிறப்புத் தாழ்வானேன்? விழிப்பும் முயற்சியும் இவர்களை உயர்த்தின. சோம்பலும், முரணும் உங்களைத் தாழ்த்தின. உணருங்கள், என்மரபீர், உணருங்கள்! 10,000 ஆண்டுகளாக நாகரிக வாழ்வு வாழ்ந்த தமிழீர் கேண்மின்! சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர் இருந்த இடம் தெரியாது. இன்று இவர் இல்லாத இடம் தெரியாது. ஐரோப்பியரான யவனர் நமது தமிழ் மன்னரின் வாசற்காப்பாளரா யிருந்தனர்; இப்போது நாம் அந்த வேலையை வகிக்கிறோம். அவர்கள் நமது அரியணையை வகிக்கின்றனர். 500 ஆண்டுகளுக்கு முன்பு 'இந்தியா பொன்னும் மணியும் குலுங்கும் நாடு' என்று இவர்கள் நினைத்தனர்; அதற்குப் பாதை தெரியாது விழித்தனர். இந்தியாவைக் கண்டுபிடிப்பதாகச் சென்ற **கொலம்பஸ்** படாதபாடுபட்டு 3-8-1492-ல் அமெரிக்கத் தீவுகளைக் கண்டு அதையே இந்தியத் தீவுகளென நினைத்தான். 1498-ல் **வாஸ்கோதகாமா** என்னும் போர்ச்சுகீசியக் கிழவன் ஆஃப்ரிக்காவைச் சுற்றிக்கொண்டு கொச்சிக்கு வந்து சேர்ந்தான். சில காலம் போர்ச்சுகீசியர் நமது தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றனர்; பெரும் பணம் குவித்தனர். 'நாமும் இந்திய வியாபாரத்தால் பணங் குவிப்போம்' என்று வந்தார்கள் டச்சுக்காரர். அவர்களும் நமது நாட்டிலும் கீழிந்தியத் தீவுகளிலும் குடியேறி அமுல் செலுத்திப் பணம் குவித்தனர். 'இதோ நாங்களும்' என்று பாய் மரக்கப்பலில் ஆங்கிலேயர் புறப்பட்டனர். அது எலிஜபெத் காலம்; கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரால் சில ஆங்கில வியாபாரிகள் இங்கே வந்தனர். அவர்களுக்கு இருக்க இடம் தந்தது நமது சென்னை. பம்பாய் கல்கத்தா இரண்டிலும் அவர்கள் வியாபாரிகளாகவே ஊன்றிக்கொண்டனர்; ஓரிடம் சரக்குவாங்கி வேறிடம் லாபகரமாக விற்றனர். அக்காலம் இந்திய அரசியல் தளர்ச்சியுற்றுப் பல சிக்கலாயிருந்தது. நாட்டு நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிராசுபிடித்தவர், வாளேந்திக் கட்சிப் போர்புரிந்து பிறகு நாடாளத் தலைப்பட்டனர். இவர்களுடன் போட்டிபோடப் பிரெஞ்சுக்காரர் வந்தனர். **ஆனந்தரங்கபிள்ளை** தினசரியைப் பாருங்கள்; அக் காலம் கம்பெனிக்காரரும் பிரெஞ்சுக்காரரும் நம்நாட்டில் அடித்த கொட்டம் புலனாகும். இறுதியில் ஆங்கிலேயர் தந்திரம் பலித்தது; இந்தியா அவர்களுக்கு ஆட்பட்டது. அளப்பரிய இந்தியச் செல்வத்தால் இங்கிலாந்து குபேர நாடானது. நமது தமிழ் நாடு முன்னே ஏராளமான கப்பல் வியாபாரம் செய்தது. நமது துறைமுகங்களில் திமிங்கிலக் கூட்டங்கள்போலக் கப்பல்கள் நின்றன, சென்றன, வந்தன. நமது நாட்டுப் பொருள்கள் உலகெங்கும் ஏற்றுமதியாயின. ஒரு காலம் தமிழரசி கடலரசியா யிருந்தாள்—இப்போதோ....! ஒரு காலம் நமது துறைமுகங்களில் யவனரும் சோனகரும் சரக்குவாங்கிச் செல்லக் காத்திருந்தனர். இப்போதோ....! தமிழர்கப்பல்கள் முன்னே செல்வங் கொண்டுவந்து குவித்தன, இப்போது....? நமது செல்வங்கள் கப்பல் கப்பலாக வெளியே செல்கின்றன. வாணிபச் செல்வத்தைக் கொண்டு ஐரோப்பியர் தொழில்களை ஏராளமாக வளர்த்தனர். தொழில் வளர்ச்சிக்கேற்ற யந்திரங்களைச் செய்தனர்; யந்திரங்களைச் செய்ய பூத-வேதி-கணக்கறிஞரை ஆதரித்தனர். பஞ்ச பூதங்களிலும் மறைந்து கிடக்கும் அற்புத சக்திகளை அவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்தனர். பதினெட்டாம்

நூற்றுண்டில் இங்கிலாந்து ஏழைநாடாயிருந்தது. இரும்பும் நிலக்கரியுமே அதன் செல்வம். பத்தொன்பதாம் நூற்றுண்டில் விஞ்ஞானப் புலவர் எழுந்தனர்; புதுப்புது இயலுண்மைகளை ஆராய்ந்தனர். இருபதாம் நூற்றுண்டில் அவர்கள் உலகையே ஆளுகின்றனர். மரத்திலிருந்து கனி உதிர்வதை நாமும் எத்தனையோ ஆண்டுகளாகப் பார்க்கிறேம்; அதில் ஒரு புதுமையும் நமக்குத் தோன்றுவதில்லை. ஒரு **நியூடனுக்கு** அதேகாட்சி பூமியின் கவர்ச்சித் தன்மையை விளக்குகிறது. அதிலிருந்து ஒரு பெரிய விஞ்ஞான உண்மையைக் கண்டு அதை ஆராய்ச்சியால் வளர்த்து மனித சமுதாயத்திற்குப் பயனுகும் யந்திரங்களைக் கண்டுபிடிக்கின்றனர் ஐரோப்பியர். நாமும் உலைகொதிப்பதைப் பார்க்கிறேம்; சோறுனதும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுத் தூங்குகிறேம். அதே நீர்பொங்கி ஆவி பறப்பதைக் காணும் **ஸ்டீவன்ஸன்** நீராவி யந்திரத்தைக் கண்டுபிடிக்கிறுன். **ஆர்க்கிமிடிஸ்** தொட்டிநிரம்பிய தண்ணீரில் குளிக்க உட்காருகிறுன். உடல் கனத்தால் தண்ணீர் வெளியே வடிகிறது. வடிந்த தண்ணீரின் கனத்தை அளக்கிறுன். அதிலிருந்து ஒரு உண்மை புலனுகிறது. அந்த உண்மையிலிருந்து ஆராய்ச்சி மூளை பெரிய கப்பலைக் கட்டியமைக்கிறது. அக்கப்பல் தொழில் வளர்ந்து, தற்காலத்தில் ஒரு நகரம்போலக் கடலில் செல்லும் நீராவிக் கப்பல்களை உண்டாக்குகின்றது. பறவை பறப்பதின் நுட்பத்தை ஒருவன் அறிகிறுன். காற்றின் தன்மைகளை ஆராய்கிறுன். கணக்குப் போடுகிறுன். ஆராய்ச்சி ஆகாயக் கப்பலில் வந்து முடிகிறது. ஒரு **மார்க்கோனி** தனது மாடியறையில் ஏதோ தனியாக மின்சாரப் பேழைகளை வைத்துக் கம்பிகள் இணைத்து ஆராய்ச்சி செய்கிறுன். ஊண் உறக்க நினைப்புக்கூட இல்லாமல் பலமாக ஆராய்கிறுன். அதன்பலனுக உலகெங்கும் செய்தியனுப்பும் தந்தியைக் கண்டுபிடிக்கிறுன். மற்றொரு விஞ்ஞானி அதற்குமேல் ஆகாச மின்சார அணுக்களை ஆராய்கிறுன். பூதக் கண்ணுடிக்குக்கூடப் புலப்படாத மின்அணுக்கள் அவன் கணக்கில் அகப்படுகின்றன. அதைக்கொண்டு தந்தியில்லாமலே செய்தியனுப்பும் சூழ்ச்சியைக் கண்டுபிடிக்கிறுன். நாமும் வேதகாலம்முதல் ஆகாயம் சப்த தன்மாத்திரை என்றறிவோம். பயன்? ஆகாயத்தின் மூலம் இதோ உலகெங்கும் ஒலியைப் பரப்புகின்றனர். **மாதாம் க்யூரி** என்னும் அறிஞை, குடும்ப வாழ்வில் இருந்துகொண்டே தன் இல்லத்தில் ஆராய்ச்சிக் கருவிகளை வைத்து, இரவும் பகலும் உழைத்து **ரேடியம்** என்னும் அரிய பொருளைக் கண்டுபிடிக்கிறுள். அதைக்கொண்டு உலகில் அற்புதங்கள் செய்கின்றனர். இது **ரேடியோ யுகம்** என்பது உங்களுக்குத் தெரியும். ஒளியும், ஒலியும், மின்சாரமும், மின் அலைகளும், நீராவியும், இரும்பும், நிலக்கரியும் பௌதிக ரசாயனக் கருவிகளும் செய்யும் அற்புதங்களை அளவிடமுடியுமா? கிருதயுகக் கிழவனுகிய நான் சொல்ல வேண்டியதில்லை; இருபதாம் நூற்றுண்டில் வாழும் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்! எந்தத் துறையில் புகுந்து பார்த்தாலும் ஐரோப்பியர் நிகரற்று விளங்குகின்றனர்.

ஐயா, புதிதாக எதுவும் கண்டுபிடிக்காமல் போனுலும் பழைய அறிவைக் காக்கவாவது நமக்குத் தெரிகிறதா பாருங்கள். நமது நூல்களை ஆங்கிலேயர் மொழிபெயர்த்துக் காப்பாற்றியிருக்கிறுர்கள். உதாரணமாக நான் ஏராளமான வைத்திய நூல்களை எழுதினேன்; எனது நண்பரான தன்வந்திரி, சரகர், ஸுஸ்ருதர் முதலியோரும் அரிய நூல்கள் எழுதினர். எனது நூல்களெல்லாம் மறைந்தொழிந்தன. என் பெயரால் சில போலி நூல்கள் வழங்குகின்றன. சித்த-ஆயுர்வேத வைத்தியமுறை நமது நாட்டிற் கேற்றது. ஏன் அந்த முறை அமோகமாக வளர்ந்து உலகெல்லாம் பரவக்கூடாது? நமது வைத்தியரிடம் நோயைச் சொன்னுல், கஷாயம்போடப் பச்சிலைகள் தேடவேண்டும்; ஒரு லேகியம் செய்ய, மாத்திரை, பஸ்மம், சிந்தூரம் செய்ய நம்மவர்செய்யும்ஆர்ப்பாடங்கள் கொஞ்சமன்று. அங்கே நோயைச் சொல்ல வேண்டியதுதான்; மருந்து கைக்கு வந்துவிடும். எவ்வளவு சுத்தமாக மருந்தைச் செய்து ஏற்பாடாக உலகெங்கும் அனுப்புகின்றனர்! அவர்கள் நமது வைத்திய முறையை அறிந்துகொண்டு, அதை ஆராய்ச்சியால் வளர்த்து தக்க நிபுணர் சங்கங்கூடி மருந்து செய்கிறுர்கள். உடல் நூல்களையும், வைத்திய நூல்களையும் படப்பொலிவுடன் தெளிவாக, விரிவாக எழுதுகின்றனர். மருத்துவக் கல்லூரிகள் நிலைநாட்டி அவற்றை மாணவருக்குப் பயிற்றுகின்றனர். அந்த மாணவர் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும்போது தமது மருந்துகளையே வாங்கி ஜனங்களுக்குக் கொடுக்கச் செய்கின்றனர். கலையைக் காசாக்கும் தந்திரம் எப்படியிருக்கிறது பாருங்கள்! நான் பண்டைக்கால வைத்தியன். பல பச்சிலைகளை அறிந்தவன். நாடி சாத்திரம் அறிந்தவன். இருந்தாலும் ஒரு முட்டாள்போலே நான் வியந்து விழித்தேன். எனது நண்பர் முதலில் என்னை ஆங்கில மருத்துவ நிலயத்திற்கே அழைத்துச் சென்றுர். அங்கே பீரோ பீரோவாகப் புத்தகங்கள் அடுக்கப் பெற்றிருந்தன. அவற்

றில் ஒரு தமிழ்ப் புத்தகம்கூட இல்லை; தமிழ் செய்த பாவம்! ஆயுர்வேத நூல் மொழிபெயர்ப்பு மட்டும் இரண்டொன்று ஒரு மூலையில் இருந்தது. மற்ற ஆயிரக்கணக்கான நூல்களும் சஞ்சிகைகளும், படங்களும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் பாஷைகளில் இருந்தன. ஆ! மனித வுடலை அணுவணுவாக ஆராய்ந்து ஒவ்வொரு பாகத்தையும் படம் பிடித்து எளிய இனிய நடையில் வர்ணித் திருக்கின்றனர். ஒவ்வொரு நோய்க்கும் காரணம், குறி, சிகிச்சை இவற்றை எழுதி அச்சிட் டிருக்கிறார்கள். தத்தமக்கு இசைந்த துறையில் புலவர் ஆராய்ச்சி செய்கின்றனர். ஒருவர் கண்ணைமட்டும் ஆராய்கிறார்; மற்றொருவர் மூளையைமட்டும் ஆராய்கிறார்; இன்னொருவர் காதை ஆராய்கிறார். அதன் பயன் நூலாகிறது, மருந்தாகிறது, யந்திரமாகிறது, வியாபார மாகிறது, பணமாகிறது. மருத்துவக் கருவிகளைப் பார்த்தேன். ஆ, எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்! பிறகு மருந்து செய்யுமிடத்தை நோக்கினேன். என் ஆசிரிய விருத்தங்கள் பறந்துபோயின. அங்கே மூலிகைகள் வகை வகையாகக் குவிந்திருக்கின்றன. அவற்றினின்று சுத்தமாக மாத்திரைகளும், சூரணங்களும், திராவகங்களும்செய்து அழகான புட்டிகளில் அடைத்துப் பெயர் அச்சிட்டுக் கப்பலேற்றுகின்றனர். அயல் நாடுகளினின்றே அந்த மூலிகைகள் வருகின்றன. உதாரணமாக மருங்காபுரியிலிருந்து எட்டிக் கொட்டைகள் வருகின்றன. அதைப் பக்குவம்செய்து மூளை மாத்திரை செய்கின்றனர். நமது நாட்டில் எவ்வளவோ அரிய மூலிகைகள் உள்ளன. முற்காலம் மூலிகைத் தோட்டத்திலேயே வைத்தியசாலை இருக்கும்; அங்கேயே மருந்து செய்து நோயாளிகளுக்குத் தந்தனர். அக்காலம் மலையேறியது. ஊருக்கு ஊர் ஆஸ்பத்திரிகளும் ஆங்கிலப் புட்டி மருந்துகளுமா யிருக்கின்றன. இவற்றைத் தவிர உணவு வகைகள் ஏராளமாகச்செய்து அழகான டப்பிகளில் அடைத்து விற்கிறார்கள். ஒருவன் பாலைச் சுண்டக் காய்ச்சி சர்க்கரை சேர்த்து டப்பியில் அடைக்கிறான்; 'கண்டென்ஸ்ட் மில்க்' என்று ஏராளமாக விளம்பரம் செய்து விற்றுப் பணம் அள்ளுகிறான். ஒருவன் மீன் எண்ணெய் (Cod liver oil) விற்று லட்சாதிபதி யாகிறான். மற்றொருவன் ஓவல்டின் விற்றுப் பொருள் குவிக்கிறான். இந்தமாதிரி ஏதாவது ஒன்றைச் சுறுசுறுப்பாகச் செய்து காலத்தை உழைப்பாக்கி உழைப்பை ஊதியமாக்கிப் பிழைக்கின்றனர் ஐரோப்பியர்.

நான் பௌதிக ரசாயனச் சாலைக்குப் போனேன். அங்கே போகர் மாணவர் செய்த ஆராய்ச்சிகளைப் பார்த்தேன். சாத்திர நூல்களைப் பார்த்தேன்; அந்நூலைக் கற்கத் துணையாகும் ஏராளமான கருவிகளைக் கண்டேன், வியந்தேன். நானே மாணவனாகி அவற்றையெல்லாம் ஆர்வமுடன் கற்றேன். பௌதிகம், ரசாயனம், கணக்கு இம் மூன்றிலும் நிபுணர் யந்திரச்சாலையில் செய்யும் வேலைகளைக் கண்டேன். நான் அவர் மாணவனாகிப் புத்தறிவு பெற்றேன். வெறும் இரும்பிற்கு உயிர்கொடுத்து உலகையே வெல்லுகின்றனர் ஐரோப்பியர். அவர்கள் ஆராய்ந்து செய்த யந்திரங்களைக் கண்டேன். என்வியப்பிற்கு எல்லையில்லை. கிழவனாகிய நான் வாலிப வூக்கத்துடன் யந்திர நுட்பம் கற்றேன். ஐரோப்பியர் செய்த ஆராய்ச்சியாலே தான் இன்று இருபதாம் நூற்றாண்டில் புதிய வாழ்க்கை வாழுகிறீர்கள். அச்சுப் பொறியில்லாவிட்டால், அருவிபோலக் காயிதத்தைச் செய்து குவிக்கும் யந்திரம் இல்லாவிட்டால், அறிவு இவ்வளவு பரவி யிருக்காது. நமது ஓலைச்சுவடிகளெல்லாம் காலக்கறையானுக்கு இரையாகி இருக்கும். அக்காலம் இலக்கண இலக்கியங்கள் படிக்க வேண்டுமானால் ஓலை தேடவேண்டும். அங்குமிங்கும் ஓலைச்சுவடி வைத்திருக்கும் புலவர் அடித்தொண்டராகிக் கற்கவேண்டும். இப்போதோ முக்காலணா கார்டு எழுதிப் போட்டால் வேண்டிய புத்தகம் நம்மைத் தேடி வரும். நூற்று நெய்யும் யந்திரத்தைப் பார்த்தேன்; நம் நாட்டிலிருந்தே பருத்தியைக் கொண்டுவருகின்றனர். அதை நூற்று நெய்து அருவிபோல ஆடைகளைக் குவிக்கின்றன யந்திரங்கள். பேல்பேலாக ஆடைகளைச் சுமந்து சென்று, கப்பல்கள், பணமூட்டையுடன் வருகின்றன. நமது நாட்டிலும் ஏராளமான இராட்டினங்களும் மணைகளும், தறிகளும் இருக்கின்றன. நூற்று நெய்யும் தொழிலாளிக்குத் தினம் ஒரு ரூபாயாவது கிடைக்கும்படியான சாதனம் இன்னும் நமக்குத் தெரியவில்லை. நமது தொழிலாளர் இரண்டணாவும் நாலணாவும் பெற்று அதுவும் கிடைக்காமலும் பட்டினி யிருக்கின்றனர். தொழிலும் அதற்கேற்றபடிதான் வற்றிப் போகிறது. என் அருமைக் குழந்தைகளே! உங்களைத் தாழ்வாகச் சொல்லவில்லை. நீங்களும் ஐரோப்பியர்போலப் புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து காலத்திற்கேற்ற முன்னேற்ற மடையவேண்டுமென்றே உங்களைத் தூண்டுகிறேன். என் சந்ததிகளான உங்கள்மேல் வைத்த பாசத்தால் எனக்குத் தோன்றிய நல்லவழியைச் சொல்லுகிறேன். வெள்ளையருக்கு இயன்றது உங்களுக்கும் இயலும். இதோ நமக்கடுத்துள்ள ஜப்பான் முன்னேறி வல்லரசாக விளங்குவதைப் பாருங்கள்.

மனத்திட்பமும் வினைத் திட்பமும் இருந்தால் அரிய செயல்களை நீங்களும் செய்வீர்கள். தாத்தாவின் ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டு; என் மனங்குளிர நீங்கள் உலகில் தலைநிமிர வேண்டும். 'வீரர், தீரர், அறிஞர், புலவர், விஞ்ஞானசித்தர்' என்று புகழ் பெறவேண்டும்! சிங்கம்போல் எழுந்திருங்கள்!

அகத்தியர் திடீரெனப் பேச்சைநிறுத்தி மறைந்தார். என் உள்ளத்தில் உணர்ச்சியலைகள் எழுந்தன. என் சம்ஸாரத்தின் கெடுபிடிக்குப் பயந்து இரண்டுவாய் அள்ளிப் போட்டுக்கொண்டு நான் திண்ணைமூலையில் உட்கார்ந்து தமிழின் கதியைப் பற்றியே சிந்தித்தேன். "ஐயோ தமிழே அனாதையாய்ப் போனாயே!" என்று விம்மி யழுதேன். தமாஷ் ரங்கன் வந்தான். "ஏண்டா பாட்டையா தமிழுக்குப் பிலாக்கணமா பாடுகிறாய்? தனியாக அழுகிறாயே! அப்போதே தெரிந்தால் ரேடியோவில் அழச்சொல்லி யிருப்பேனே; உன் அழுகையைத் தமிழ்நாடெல்லாம் கேட்குமே. '**தமிழுக்குத் தமிழரே அழவேண்டும்**' என்றொரு இயக்கம் ஏற்படுத்துவோமா பாட்டையா" என்று என்னைக் கிச்சுகிச்சு மூட்டினான். "சும்மா இருடா ரங்கா, பகவான் பேச்சு என் தமிழுணர்ச்சியைச் சவுக்கடி தந்து எழுப்பியது!" என்றேன். "ஏண்டா பாட்டையா, உன் பகவான்பேச்சில் இன்று தமாஷே காணோமே; யாரும் சிரிக்கக் காணோம். எல்லாரும் அழவேவேண்டுமென்றுதான் இப்படிப் பேசினாரோ! ஆனால் அல்லோபாத்தியைப் பற்றி நன்றாகச் சொன்னார்" என்று ரங்கன் முடித்தானோ இல்லையோ "What did you say....gutterpathy" (என்ன சொன்னீர்....சாக்கடை வைத்தியர்) என்றொருவர் எனிமா ரப்பரைச் சுழற்றிக்கொண்டு வந்தார். "Nonsense" என்றொருவர் ஸ்டெதாஸ்கோப்புடன் (துடிப்பறி கருவி) டக்டக் என்று தடபுடலாக பூட்ஸை அழுத்தி மிதித்துவந்தார். "யாரை 'நான்சென்ஸ்' என்றாய், உனக்கு பிரசண்ட பேதிமாத்திரை கொடுப்பேன்" என்றொருவர் கல்வக் குழவியைத் தூக்கிக்கொண்டு வந்தார். "உளறாதேயும் என் சூரத்தாவாரைக் கஷாயத்தைக் குடித்துப் பாரும்!" என்று மற்றொருவர் பச்சிலைகளுடன் வந்தார். நால்வரும் என்னைச் சூழ்ந்துகொண்டு "கொண்டா உன் அகஸ்தியரை" என்று மிரட்டினர். சக்தி ஆசிரியர் மூன்று விரலைக்காட்டி ஜாடை பண்ணுகிறார். அதனால் இந்த நால்வர் போரைப்பற்றி அடுத்ததடவை சொல்லுகிறேன்; வேண்டுமட்டும் சிரிப்பீர்கள்.

(202-ம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்வித்துத் தாமும் மகிழ முடியுமென்பதை அவர் ஒருவரே நிதர்சனமாகக் காட்டி யிருக்கிறார். ஸ்படிகம்போன்ற தெளிவு, நிறை, கண்டிதம், அமைவு, வலிமை, சரளம் முதலிய குணங்கள் திகழும் அவரது எளிய நடை நவ எழுத்தாளர்கள் பின் பற்றுவதற்கு உயர்ந்த மாதிரியாகவும் விளங்குகின்றது.

முடிவுரை

தமிழ் மக்களும் இவ்வண்ணமாகக் காலத்திற்கேற்றவாறு புனருஜ்ஜீவனமடைந்து வருகின்றனர். ஆயினும் வெளிநாடுகளின் பாஷாபிவிருத்தியையும், நம் நாட்டிலும், வங்கம், கூர்ஜாம், ஆந்திரம் முதலிய மாகாணங்களில் ஏற்பட்டுவரும் பாஷைகளின் முன்னேற்றத்தையும் கவனித்தால், தமிழ் வசன இலக்கியமும் அதன் பலதிறப்பட்ட வகைகளும் இன்னும் விரும்பத்தக்க வேகத்தையும் ஜீவனையும் பெறவில்லை யென்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இலக்கியத்தின் நோக்கமானது கற்பனாலங்காரங்களையும், அணி நலங்களையும் கவிச்சுவையையும் அளித்து நம்மை மகிழ்வுறுத்தல் மட்டுமன்று. நமது அறிவை நன்கு விசாலப் படுத்துவதும், நாம் காண்பனவற்றையும் கேட்பனவற்றையும் சுவைப்பனவற்றையும் நம்மைச் சுற்றிலும் இயங்கும் சராசரப் பொருள்களின் உண்மையைக் கண்டறிவதும், இலக்கியப் பயிற்சியின் சிறந்த நோக்கங்களாகும். தமிழில் இந்நோக்கங்களைச் சம்பூரணமாக நிறைவேற்றி வைக்கத்தக்க நூல்களும் வெகுவாக இல்லை. பூகோளம், வானசாஸ்திரம், உயிர் தாவர சாஸ்திரங்கள், சடரசாயன சாஸ்திரங்கள், தத்துவ சமூக சாஸ்திரங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கிய விமர்சனம் முதலியவை இன்னும் பெருவாரியாகத் தமிழில் வெளிவரவில்லை. சிற்பம், கம்மியம், ஓவியம், நெசவு, முதலிய வித்தைகளைப் பற்றிய நூல்கள் தற்கால முறையில் வரையப்படவில்லை. இக்குறைகளைத் தீர்ப்பதற்குத் தமிழின் அபிவிருத்திக்காக உழைக்கும் சங்கங்களெல்லாம் ஒன்றுக்கொன்று பாத்தியப்பட்டு ஒத்துழைக்க வேண்டும். இவைகளுக் கெல்லாம் தலைச்சங்கம் என்று ஒன்று இருத்தல் அவசியம். தமிழில் வெளியாகும் நூல்களின் ஏற்றத்தாழ்வுகளை ஆராய்ந்து இச்சங்கமே அங்கீகரிக்க வேண்டும். என்று தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஒரு சங்கம் அமைத்து இலக்கிய வளர்ச்சியை ஒழுங்குபடுத்த முன் வருகின்றனரோ, என்று தமிழ் மக்கள் அனைவரும் ஜாதிமதப் பிணக்குகளின்றி தமிழில் ஆர்வங்கொண்டு அதை எல்லா வழிகளிலும் வளர்க்க முன் வருகின்றனரோ, அன்றே தமிழன்னை புது ஜீவனுடன் பொலிவுற்று இந்நாட்டில் வெற்றிக்கொடி நாட்டுவாள் என்பது உறுதி. அந்நாள் விரைவில் வருக!

முன் இதழ்த் தொடர்ச்சி

தமிழ் வசன இலக்கியத்தின் வரலாறு

(ஸ்ரீ பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல்.)

கத்தோலிக்கப் பாதிரிமார்களின் தமிழ்ப் பணி

பதினாரும் நூற்றாண்டில் தமிழ் வசன இலக்கியம் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தது. அக்காலத்தில் தான் நம் நாட்டில் கிழக்கும் மேற்கும் சந்தித்தன. இச் சந்திப்பின் பயனாக மக்களின் வாழ்வில் ஒரு புதிய மாறுதலேற்பட்டது. காலத்தோடு தானும் வளராது வளமிழந்த நமது பழந்தமிழ் மொழிக்கு ஏற்படக்கூடிய உதவியும் சீர்திருத்தமும் மேனாட்டினரிட மிருந்தே வந்தன. தமிழ் வசன நடைப்பெருக்கமானது அவர்களிடமிருந்து வந்த முதல் உதவியாகும்.

1453-ல் துருக்கியர் கான்ஸ்டாண்டிநோபிலைக் கிரேக்கர்களிடமிருந்து கைப்பற்றினதின் பயனாக ஐரோப்பியர்கள் மத்தியதரைக்கடல் வழியாக இந்தியாவுடன் செய்துவந்த வியாபாரம் தடைபடவே, அவர்கள் இந்தியா செல்ல ஒரு புதிய கடற்பாதையைத் தேட வேண்டியதா யிருந்தது. வாஸ்கோடிகாமாவென்னும் போர்ச்சுகீசியன் 1498-ல் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவை யடைந்து கள்ளிக்கோட்டையில் இறங்கினான். கொச்சி ராஜாவான ஜாமொரின் போர்ச்சுகீசியரை ஆதரிக்கவே, அவர்களது இந்திய வியாபாரமும் ஆதிக்கமும் வலுத்தன. அவர்கள் கொச்சியில் ஒரு கோட்டையைக் கட்டினர். 1520-ல் பீஜாபூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றினர். இப் போர்ச்சுகீசிய வர்த்தகர்களுடன் போர்ச்சுகீசிய ஜெஸுட் பாதிரிமார்களும் தமிழ்நாட்டுக்கு வந்தனர். போர்ச்சுகீசியருக்குப் பின் ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் வந்து தென்னிந்தியக் கடலோரங்களில் தங்கள் தங்களது வர்த்தகசாலைகளை யமைத்துக்கொண்டும், உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டும், மெல்ல மெல்ல ஆதிக்கம் பெறலாயினர். இவ்வர்த்தகர்களுடனேயும் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்து ஜெஸுட் கத்தோலிக்கப் பாதிரிமார்கள் வந்தனர். இவ்வண்ணம் இந்தியாவுக்கு வந்த இப்பாதிரிமார்களே பதினாரும் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையில் தமிழ் வசன நடையின் அபிவிருத்திக்கும் பண்டைத் தமிழர் சரித்திர ஆராய்ச்சிக்கும் பெரிதும் காரணமாயிருந்தனர். இவர்கள் தங்கள் மதத்தைப் பிரசாரம் செய்வதற்குத் தமிழ்மொழியையும் தமிழ் மக்களையும் நன்கறிய வேண்டியதாயிருந்தது. இவர்கள் பல முக்கியமான இடங்களில் கூட்டம் கூட்டமாகக் குடியேறித் தமிழ் மக்களுடன் கலந்து அவர்களது வழக்க ஒழுக்கங்களை ஆராய்ந்தும் தமிழ் இலக்கியங்களைக் கற்றும் வந்தனர். தங்களது பிரசாரத்திற்கு அனுகூலமாயிருப்பதன் பொருட்டு இவர்களே முதன் முதலாக அச்சுவாகனக் கலையை இந்தியாவுக்குக் கொணர்ந்தனர். கொச்சியில் ஜெஸுட் பாதிரிகளின் கோஷ்டியைச் சேர்ந்த **ஜோஆன் கோன்ஸ்லாவ்** என்பவர் 1577-ல் தமிழ் அச்சுவார்ப்புகளைச் செய்து 1579-ல் 'கிறித்தவ மதக் கோட்பாடுகள்' என்னுமோர் சிறுநூலை அச்சுவாகனமேற்றி வெளியிட்டார். நாளடைவில் நூல்கள் அச்சிடப்பட்டன. இலக்கிய அபிவிருத்திக்கும், விசேஷமாகத் தமிழ் வசனநடை பாவி அபிவிருத்தியடைவதற்கும், அச்சுவாகனம் செய்த பேருதவி அளவிடற்பாலதன்று,

பதினேழாம் நூற்றாண்டில் **ராபெர்ட் நோபிலிபஸ்** என்னும் பாதிரி **தத்துவபோத சுவாமி** என்னும் மறுபெயருடன் கிறித்தவமத சம்பிரதாயக் காண்டம், ஆத்மநிரியாணம், தூஷணதிகாரம் என்னும் வசன நூல்களை இயற்றினார்.

இவ்வண்ணம் தமிழ் வசன நூல்கள் இயற்றித் தமிழுக்குச் சேவைசெய்த ஐரோப்பியப் பாதிரிமார்களுள் **கான்ஸ்டான்ஷியஸ் பெஸ்கி** [1680-1747 இவர் தம்மை **வீரமாமுனிவர்** என அழைத்துக்கொண்டார்] என்பவர் தலைசிறந்து விளங்கினார். இவர் தாயுமான சுவாமிகளின் சமகாலத்தவர். இவர் இத்தாலிய நாட்டிற் பிறந்து, கத்தோலிக்கப் பாதிரியாக இந்தியாவுக்கு வந்து தமிழ், வடமொழி, இந்துஸ்தானி, முதலிய மொழிகளைக் கற்றுத் தமிழிற் சிறந்த புலவராக விளங்கினார். இவர் 1710-முதல் அந்திக்காலம் வரையில் பல நூல்களையும் காவியங்களையும் தமிழகராதிகளையும் எழுதித் தமிழுக்குப் பணிபுரிந்தார். சிந்தாமணியின் நடையைத் தழுவித் தேம்பாவணி என்னும் கிறித்தவ இதிகாசத்தை இயற்றி அதற்கு உரையும் வகுத்தார். தமிழிற் பயிலுவோருக்குச் சகாயமாக நிகண்டுகளை அகராதியாக வகுத்தார். இவர் எழுதிய வசன நூல்களில் வேதியரொழுக்கம் அல்லது உபதேச ரத்னாகரம் (1727), வேதவிளக்கம் (1728), ஞான உணர்த்தல் என்னும் நூல்களும், **அவிவேக பரிபூரண குரு** என்னும் கதைக்கொத்தும் குறிப்பிடத்தக்கவை. பின் சொன்ன நூலே தமிழ் வசனத்தில் முதன்முதலாக வெளிவந்த கதையாகும். 18-ம் நூற்றாண்டின் இறுதி வரையில் நகைச்சுவை விளைவிக்கும் இக்கதையொன்றே சிறுவர்கள் கற்கக்கூடிய வசன நூலாகவிருந்தது.

வீரமாமுனிவருக்குப் பின் **ரேவரேண்டு ட்ரு, ரேவரேண்டு ஸ்கட்டர், ரேவரேண்டு பவர்** முதலிய பாதிரிமார்கள் பண்டைத் தமிழ் நூல்களை வெளியிடப் பெரிதும் முயன்றனர். **லெப்டினெண்டு கர்னல் மக்கன்ஸி** என்பவர் தமது ஓய்வு நேரங்களிற் பண்டை நூல்

களைத் தேடிப் பிடித்து அநேகம் கையெழுத்து நூல்களைச் சேகரித்தார். இவ்வண்ணம் அவர் தேடிப் பிடித்த நூல்கள் கீழ்நாட்டுக் கையெழுத்துப் புத்தகசாலையில் வைக்கப்பட்டு ஆராய்ச்சிக்காரர்களுக்கு அனுகூலமா யிருக்கின்றன. பின்னர் **டாக்டர் போப்பும் டாக்டர் கால்டுவெல்லும்** தமிழரின் புராதன சரித்திரத்தையும் தமிழ்நூல்களையும் ஆராயப் புகுந்தனர். இப் பாதிரிமார்களின் வழியைப் பின்பற்றியே பின்னர் கனகசபை முதலியார், தாமோதரம் பிள்ளை, பி. சுந்தரம் பிள்ளை முதலியோர் நமது பண்டை இலக்கியங்களைக் கொண்டு தமிழ் நாட்டின் புராதன சரித்திர ஆராய்ச்சி செய்து பல கட்டுரைகளை வெளியிட வாரம்பித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வசன இலக்கியத்தின் பெருக்கு

தமிழ்நாட்டில் ஆங்கில அரசாட்சி யேற்பட்டு, ஆங்கிலம் ராஜ பாஷையாகிப் பெருவழக்குற்றுத் தலையெடுக்கவே, தமிழ்மக்கள் லௌகிக பயனைக்கருதித் தமிழைப் பயிலவேண்டிய அவசியம் நீங்கிற்று. தமிழ்மக்களிற் சிலர் நமது பண்டைப் பெருமைகளை யிழந்து ஆங்கிலத்தில் மோகங்கொண்டு தமிழில் பேசுவதும் இழுக்கெனக் கொண்டனர். தமிழபிமானம் தாழ்ந்தது. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கில அரசாட்சியின் கீழ் நூதனமுறையில் ஆங்காங்குப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஏற்படவே, அவைகளுக்கேற்ற பாடபுத்தகங்களும் வசன இலக்கிய நூல்களும் அமைப்பது அவசியமாயிருந்தது. இது விஷயமாக அரசாங்கத்தினர் கல்வி விசாரணை செய்ய வாரம்பித்தனர். இதன் பயனுகத் தமிழிற் சில பாலபாடங்களும், வசன நூல்களும் ஒவ்வொன்ருகத் தலைகாட்ட வாரம்பித்தன. **விசாகப் பெருமாளையர்** 1821-ல் உரை நடையில் இலக்கணச் சுருக்க வினவிடை என்னும் சிறு நூலை இயற்றினர். அதுசமயம் அரசாங்கக் கலாசாலையில் தமிழ் ஆசிரியாக விருந்த **சரவணப் பெருமாளையர்** கல்வியின் பயன் என்ற கட்டுரையும் பாலபோத இலக்கணம் என்னும் சிற்றிலக்கணமும் எழுதி வெளியிட்டார். அவருக்குப் பின் ஆசிரியராகவிருந்த **தாண்டவராய முதலியார்** கதாமஞ்சரியைத் தொகுத்தார். பின் பஞ்சதந்திரத்தை மராத்தி பாஷையிலிருந்து மொழிபெயர்த்து 1825-ல் வெளியிட்டார். சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்த இந்நூல்கள் மாணுக்கர்கள் உரைநடை பயிலுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தன. **மழவை மகாலிங்கையர்** போதவசனம் என்னுமொரு நூலை இயற்றினர். **ஆதிமூல முதலியார்** கதாசிந்தாமணியை எழுதினர். **திருச்சிற்றம்பல தேசிகர்** ராமாயணம் முழுவதையும் வசனமாக எழுதினர். மதுரை **கந்தசாமிப் புலவர்** தேவன்ன பட்டாச்சாரியர் எழுதிய ஸ்மிருதி சந்திரிகையில் விவகார காண்டத்தில் கூறப்பட்ட விஷயங்களைத் தமிழ்ப்படுத்தி "விவகார சங்கிரகம்" என்னும் பெயருடன் 1826-ல் வெளியிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் தமிழ் வசனம் உரம்பெற்று ஓங்க வாரம்பித்தது. 1857-ல் ஸ்தாபிக்கப்பட்ட சென்னைச் சர்வகலாசாலையில் ஆங்கிலத்திற்கே முதல் ஸ்தானம் அளிக்கப்பட்டபோதிலும் தமிழ் மறந்துவிடப்பட வில்லை. சர்வகலாசாலைப் பரீட்சையில் தேறிய மாணவர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் ஒருமிக்கப் படித்துவந்ததால், இரண்டு பாஷைகளையும் ஒப்பிட்டு நோக்கவும், தம்மொழியிலில்லாது ஆங்கிலத்திலுள்ள விசேஷங்களைத் தமிழில் அமைத்துச் சீர்திருத்தம் செய்யவும் ஆற்றல் பெற்றனர். மெல்ல மெல்ல வசனநடை மலிந்துகிடக்கும் ஆங்கில நூல்களைத் தமிழிலும் அமைக்கத் தலைப்பட்டனர்.

நிற்க, **வீராசாமி செட்டியார்**, அவ்வப்போது தினசரிப் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து **விநோதரச மஞ்சரி** என்னும் நூலை வெளியிட்டார். இதில் ஆஸ்திக நாஸ்திக வாதங்களும், பெண்களின் கற்பு, நன்றி, முதலிய கட்டுரைகளும், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், ஏகம்பவாணர், முதலியவர்களின் சரித்திரம், வரலாறுகள், குறிப்புகள் முதலியவும் காணப்பட்டன. இந்நூல் வசனநடையை உறுதிப்படுத்தியது. ராமநாதபுரம் **ப. வெ. முகம்மது இப்ராகிம்** விக்கிரமாதித்தன் கதையை எழுதினர். தமிழாசிரியரான ஸ்ரீநிவாசாச்சாரியார் உத்தர ராமாயண வசனம், கதாசங்கிரகம் என்னும் நூல்களை வெளியிட்டார். அவரது நூல்களில் வடமொழித் தொடர்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. **இராமலிங்க சுவாமிகள்** (1823-'74) எளிய நடையில் எழுதப்பட்ட தமது அருட்பாவினுலும், மனுமுறை கண்ட வாசகம், ஜீவ காருண்ய ஒழுக்கம், இவைபோன்ற சிறு வசன நூல்களாலும் தமிழுக்குப் புத்துயிரளித்தார். இவரது மாணுக்கரும் ராஜதானிக் கலாசாலைத் தமிழாசிரியருமான **தொழுவூர் வேலாயுத முதலியார்**, வேளாண் மரபியல், திருவெண்காட்டடிகள் சரித்திரம், பெரிய புராண வசனம், மார்க்கண்டேய புராண வசனம், முதலிய நூல்களை வெளியிட்டார். இவருக்குப் பிறகு தமிழாசிரியரா யிருந்த **கிருஷ்ணமாச்சாரியார்** அரிச்சந்திர கதையை எழுதினர். **துரைசாமி மூப்பனர்** அயோத்யாநகர மான்மியம், ஜானகி பரிணயம், பிரசன்னராகவம் முதலிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்; வில்லிபாரதச் சுருக்கம் என்னும் நூலையும் எழுதினர். இவரது ராம பத்ரீயம் என்னும் நூலிற் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய கட்டுரைகளில், குறள், பிரபந்தம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாவலரின் கட்டுரை நடை

வசன இலக்கியத்தில் அக்காலத்தில்மற்றெல்லோரையும் விட மேன்மையுற்று விளங்கினவர் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல**ரேயாவர். அவர்(1822-'79) இராமலிங்க சுவாமிகள், திருவாவடுதுறை மகாவித்வனுயிருந்து பல பேர்களுக்குப் பாடஞ்சொல்லிப் புகழ்பெற்ற திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, இவர்களின் சமகாலத்தவர். இருபத்துமூன்று வயதிற்குள், தமிழ், சம்ஸ்கிருத, ஆங்கில மொழிகளிலுள்ள முக்கியமான நூல்களைக் கற்று முடித்தார். அதுசமயம் நாடெங்கும் கிறித்தவ சமயம் பரவிவந்ததைக் கண்டு, சைவசமயத்தைக் கிறித்

தவப் பாதிரிமார்களின் தாக்குதல்களிலிருந்து காப்பதின் பொருட்டுச் சைவாகமங்களைப் பற்றியும் சமய குரவர்களைப் பற்றியும் பொதுமக்களுக்குச் சொற்பொழிவுகள் நடத்தினர். அவரது சொற்பொழிவின் ஆற்றலைக் கண்ட திருவாவடுதுறை யாதீனத்தார் அவருக்கு நாவலர் என்னும் பட்டம் வழங்கினர். சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடம் ஸ்தாபித்துக் கிறித்தவ மதத்தைக் கண்டிக்கும் கட்டுரைகளையும் சைவ வினாவிடைகளையும் மற்றும் இதர நூல்களையும் வெளியிட்டார். ஆங்காங்குப் பாடசாலைகளை யேற்படுத்திப் பாலபாடங்களை எழுதினார். ஏட்டுப் பிரதிகளிலுள்ள பழைய நூல்களையெல்லாம் பரிசோதித்துப் பிழையற அச்சிட்டார். பழைய நூல்களை ஆதாரமாகக் கொண்டு, பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கோயிற் புராண வசனம், சிதம்பர மான்மிய வசனம், இலங்கை பூமிசாஸ்திரம், கந்தபுராண வசனம் (ஒரு பகுதி) முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். மேற்சொன்ன வசன நூல்களால் நாவலர் தமிழுக்குப் பெரிய தொண்டு செய்தாராயினும், அவரது பெருமையும் வன்மையும் கட்டுரை வரைவதினாலேயாம். இதுபற்றியே அவரை வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் "வசன நடை கைவந்த வல்லாளர்" என்றார்.

நாவலருக்கு முன் கட்டுரை எழுதுவது பெரும்பாலும் வழக்கத்திலில்லை. பாவினால் எழுதுவதே வழக்கமாயிருந்தது. கடிதங்கள்கூடப் பாவினாலேயே எழுதப்பட்டன. சேம சமாசாரங்களை விசாரிக்கும் கடிதங்களிலும் கனவான்கள் சிலேடையிட்டெழுதினர். உரைநடையில் ஒரோர் சமயம் எழுதநேரிடினும் பொருள் மயக்கம் தரும் கடுஞ்சொற்களும் வடசொற்களும் மலிந்தும், தமிழ்ச்சொல் அருகியும், இணக்கப் புணர்ச்சிகள் செறிந்தும், படிப்போர்க்குப் பொருள் படாவண்ணம் எழுதுவது வழக்கமாயிருந்தது. இதன் காரணமாகப் புலவர்கள் எழுதிய நூல்கள் கற்றறிந்த புலவர்க்கே யன்றி மற்றவர்களுக்குப் பயன்படாதிருந்தன. நாவலரின் கட்டுரைகள் அத்தகையனவல்ல. அவை பொது மக்களுக்குச் சமய அறிவு ஊட்டவே எழுதப்பட்டனவாதலால், யாவர்க்கும் எளிதில் விளங்கக்கூடிய தெள்ளிய முறையில், பெரும்பாலும் செந்தமிழ்ச்சொல் நிறைந்த செவ்விய உரைநடையையுடையவாயிருந்தன. பொருட்டெளிவே நாவலரின் முக்கியமான நோக்கம். இதன் பொருட்டே மேனாட்டார் கையாண்டுவரும் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி முதலிய குறியீடுகளை முதன் முதலாக அவரே தமிழில் கையாளத் தொடங்கினார். நாவலர் வடமொழியை அலட்சியம் செய்யவுமில்லை. அவர் தமது கட்டுரைகளில் யாவர்க்கும் விளங்கக்கூடிய வடசொற்களையும், தமிழுருவத்தோடு தொன்றுதொட்டு வந்த சொற்களையும் கையாண்டிருக்கிறார். தமிழ் அச்சொற்களோடு கலந்து அழகுபெற்றிருப்பதை அவரது நூல்களில் கண்கூடாகக் காண்கிறோம்.

நாவலரைப் பின்பற்றியவர்கள்

நாவலரைப் பின்பற்றிப் பல கட்டுரைகளையும் வசன நூல்களையும் இயற்றினவர்களுள் **வி. கோ. சூரிய நாரயண சாஸ்திரியாரையும், தி. செல்வகேசவராய முதலியாரையும்** குறிப்பிடவேண்டும். சூரியநாராயண சாஸ்திரியார் (1870-1903) பி. ஏ. பரீட்சையில் தமிழ் மொழியில் ராஜதானியிலேயே முதன்மையாகத் தேர்ச்சி பெற்று, 25 வயதிலேயே கிறித்தவ கலாசாலையின் தலைமைத் தமிழ்ப் பண்டிதரானார். இவர் மாணவராயிருந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் அதுசமயம் மிகச் சிறப்புடன் வெளிவந்து கொண்டிருந்த **விவேக சிந்தாமணி** என்னும் பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதி வந்தார். பின்னர் அவரும் மு. சு. **பூரணலிங்கம் பிள்ளை**யும் சேர்ந்து நடத்தின ஞானபோதினி என்னும் மாதப் பத்திரிகையில் **மதிவாணன்** என்னும் கதையை எழுதவாரம்பித்தார். ஆனால் அது முற்றுப் பெறுவதற்குள் காலஞ்சென்றார். இவ்விரு பத்திரிகைகளிலும் அவர் எழுதிவந்த தமிழ்ப்புலவர் சரித்திரமும், தமிழ் வியாசங்கள், தமிழ் மொழியின் வரலாறு, மணிய சிவனார் சரித்திரம் என்னும் வசன நூல்களும், கலாவதி, ரூபாவதி என்னும் வசனமும் செய்யுளும் கலந்த நாடகங்களுமே அவர் வசன இலக்கியத்திற்குச் செய்த சேவையாகும்.

தி. செல்வகேசவராய முதலியார் எம். ஏ. சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் பச்சையப்பன் கலாசாலையில் தமிழாசிரியராகவிருந்து மாணவர்களிடையே தமிழபிமானத்தை வளர்த்தும், கண்ணகி, ரானடே, அக்பர், தமிழ் வியாசங்கள், கம்பநாட்டார் 'தமிழ்' (1906) முதலிய வசன நூல்களை எழுதி வெளியிட்டுத் தமிழ்ப் பணி புரிந்தார்.

மூன்று நவீனங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நாவலருக்குப் பின் தமிழ் வசன இலக்கியத்திற்குப் புதிய உயிரையும் புதியபோக்கையும் தந்த நூல்கள் மூன்று; முதலாவது குருஸ்வாமி சர்மா எழுதிய **'பிரேம கலாவதீயம்'** இரண்டாவது, வேதநாயகம் பிள்ளை எழுதிய **'பிரதாப முதலியார் சரித்திரம்'**(1872); மூன்றாவது பி. ஆர். ராஜம் அய்யர் எழுதிய **'கமலாம்பாள் சரித்திரம்'** (1892). பிரேமகலாவதீயம் நவீனத்தின் ரகத்தைச் சேர்ந்ததாயினும், தற்கால மதிப்பில் அது நாவலாகாது. ஆனால் அதில் சில அழகான சித்திரங்கள் காணப்படுவதாலும், அதுவே தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தோன்றினமையாலும் அதற்கு இலக்கியச் சரித்திரத்தில் ஒரு மதிப்புண்டு. பிரதாபமுதலியார் சரித்திரத்திற்குத் தற்கால நாவலுக்குரிய பல அம்சங்கள் இல்லையாயினும், தமிழ் நாட்டு வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகையால் அதற்கும் தமிழ் வசன இலக்கியத்தில் ஒரு கௌரவமான ஸ்தானமுண்டு. கமலாம்பாள் சரித்திரமொன்றே நாவல் என்று பூரணமாகச் சொல்லக்கூடிய நவீனமாகத் திகழ்கின்றது.

பிரதாப முதலியார் சரித்திரத்தின் ஆசிரியரான **வேதநாயகம் பிள்ளை** (1824-1889) திருச்சிராப்பள்ளிக்கடுத்த வெள்ளான்குளத்தூரில் வேளாளர்

மரபில் கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பத்தில் பிறந்தார். 1848-ல் சதர் அமீன் கோர்ட்டில் ரிகார்டு கீப்பராகவிருந்து படிப்படியாக ஏறி, வக்கீல் பரீட்சையில் தேறி, 1859-ல் மயூரம் ஜில்லா முனிசீபானார். பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், பெண் கல்வி, முதலியவையே அவர் எழுதிய முக்கியமான வசன நூல்கள். பொது ஜனங்கள் படித்து அறிவை விருத்தி செய்யக்கூடிய வசன நூல்கள் இல்லாத காலத்தில், மக்கள் பேசும் நடையில் மக்களின் மனோபாவங்களைச் சித்திரித்து, அறம், கல்வி, தமிழபிமானம், கற்பு முதலிய விஷயங்களைக் கதைகளின் மூலமாகப் போதித்த பெருமை அவருக்கே உரியது.

ராஜம் அய்யர் (1872-98) மதுரை ஜில்லாவில் வத்தலகுண்டு கிராமத்தில் பிறந்து சென்னைக் கிறித்தவக் கலாசாலையில் கல்வி பயின்றார். இவர் சிறுவயதிலேயே தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் இம்மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றார். இவர் தமது இருபத்தொன்றாம் வயதில் சட்டக்கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கையில் விவேகசிந்தாமணி என்னும் மாதப் பத்திரிகையில் "கமலாம்பாள் சரித்திரம்" என்னும் தொடர்கதையை ஆரம்பித்தார். இதில் ஒரு தென்னிந்திய நடுத்தர பிராம்மணக் குடும்பத்தின் சுவாரஸ்யமான வாழ்க்கைக் கதையை கம்பீரமும், சரளமும், தெளிவும் வாய்ந்த நடையிலும், சாதாரணமாக மக்கள் பேசும் பாஷையிலும், நுண்ணிய கருத்துக்கள் விளங்கவும், உணர்ச்சியும் நகைச்சுவையும் ததும்பவும் சித்திரிக்கிறார். கதையின் அமைப்பிலும, கதாபாத்திரங்களின் ஜீவகளையிலும் உயர்கருத்துக்களிலும் மேன்மையுற்று விளங்கும் அவரது கமலாம்பாள் சரித்திரம் இன்றும் ஒரு இணையற்ற உயர்தர நாவலாகத் திகழ்கிறது.

நவீன அவாக்களையும் ஆதர்சங்களையும் சொல்ல மாட்டாது தவித்த தமிழனுக்குச் சொல்லித்தந்து, உறங்கிக்கிடந்த மக்களை விழிக்கச் செய்துவந்த மகான் **சி. சுப்பிரமண்ய பாரதியாரே**யாவர். பாரதியார் (1882-1921) தமிழ்க் கவிதைக்கு ஒரு புதிய ஜீவனைக் கொடுத்ததைப் போலவே, தமிழ் வசனத்திற்கும் ஒரு புத்துயிரளித்தார். அவர் எழுதிய ஞானரதம், சந்திரிகையின் கதை, நவரத்தினக் கதைகள், கதைக் கொத்து, மாதர், சமூகம், தத்துவம், கலை என்னும் விஷயமாக எழுதப்பட்ட கட்டுரைகள், கீதைக்கு எழுதிய முன்னுரை, பதஞ்சலி யோகசூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, முதலிய வசன நூல்கள், தெளிவான, உறுதியான தமிழ்நடையில் எழுதப்பட்டவையாயும், நகைச்சுவையும் நாட்டன்பும் ஆத்மஞானமும் மிளிர்ந்து, பண்டிதர் பாமரர் அனைவரும் சுவைக்கத் தக்கவையாயும் விளங்குகின்றன.

சமீபகாலத்தில் தமிழ்மொழிக்கு ஒரு புதிய உயிர்ச் சக்தியையும் ஜீவகளையையும் கம்பீரத்தையும் கொடுத்த புண்ணிய புருஷர்களுள் **வ. வே. சு. அய்யரும்** ஒருவர். இவர் (1880-1925) மேனாட்டு இலக்கிய வகையில் ஒன்றாகவிருந்து இன்று சிறப்புடன் விளங்கி வரும் சிறு கதையைச் சிறப்புடன் கையாண்டு தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு புதிய வழியைக் காட்டியிருக்கிறார். இவரது மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகளில் தமிழர்களின் வீரம், வள்ளன்மை, காதல், தற்கால சாமான்ய வாழ்க்கை, முதலியவைகளைச் சித்திரித்துக் காட்டுகின்றன. பிறமொழிச் சொற்களும் திசைச்சொற்களும் ஆங்காங்குக் காணப்படினும், நடையில் எளிமையும் கம்பீரமும் கலந்திருக்கின்றன. அய்யாவர்கள் பல அரிய கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அவர் நடத்திவந்த 'பாலபாரதி' என்னும் அருமையான செந்தமிழ்ப் பத்திரிகை ஒரு வருஷகாலம் நடந்தது.

தமிழ்த் தாதாவும் தமிழ் வசனமும்

தமிழ்நாடு செய்த தவப்பயனாக, பண்டிதர்களாலும் பாமரர்களாலும் போற்றப்பட்டு இன்னும் தமிழ்த் தொண்டு புரிந்துவரும் பழம் புலவர்பெருமான் ஒருவர் மலைபோல் ஓங்கி நிற்கிறார். அவர்தான் தமிழ்த் தாதாவென அன்புடன் தமிழ் மக்களனைவராலும் அழைக்கப்படும் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையர். இளம் வயதில் திருவாடுதுறை ஆதீனத்து மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சுமார் ஐந்து வருஷகாலம் பாடம் கேட்டு, கும்பகோணம் கலாசாலையிலும் சென்னை ராஜதானிக் கலாசாலையிலும் 39 வருஷங்கள் (1880-1919) தமிழாசிரியராக இருந்து, இவ்விதம் சேவை செய்து கொண்டிருக்கையிலேயே தமிழ்ப் பழங்காப்பியங்களின் ஏட்டுப் பிரதிகளை ஆங்காங்கு அலைந்து தேடிக் கண்டுபிடித்துப் பிழையறத் தற்கால ஆராய்ச்சி முறையில் பதிப்பித்துத் தமிழன்னையின் பண்டைச் சீரையும், சிறப்பையும் உலகுக்கு எடுத்துக்காட்டின இம்மகான், புலவர் குழாங்களில் போற்றப்படும் வெறும் புலவரா யிருந்துவிடாமல் தமிழ்ப் பொதுமக்களின் உள்ளத்திலும் குடிகொண்டிருப்பதின் காரணம், அவர் தமது பாண்டித்தியத்தை வெளிக்காட்டாமல் பாமரரும் சுவைத்து அனுபவிக்கவல்ல எளிய செந்தமிழ் நடையிற் பல அருமையான கட்டுரைகளை எழுதி வருவதே யாகும். அவர் பழந்தமிழ் நூல்களின் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவதற்கு எடுத்துக்கொண்ட சிரமங்களையும், அச்சமயங்களில் நேர்ந்த பல அனுபவங்களையும் கதையாகச் சொல்லும் நினைவுக் கட்டுரைகளும், தமது வாழ்க்கையில் நேரில் கண்டறிந்த குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் முதலியோர்களின் வரலாறுகளும், "சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்" என்னும் தலைப்பெயருடன் 1927-ல் சர்வகலா சாலையில் செய்த அருமையான சொற்பொழிவுகளும் (இச்சொற்பொழிவுகள் சர்வகலா சாலையாரால் நூலாகவெளியிடப்பட்டிருக்கின்றன) இன்னும் பல விலைமதிப்பிட முடியாத ஆராய்ச்சிக் கட்டுரைகளும், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் ஜீவிய சரித்திரமும், தமிழ்வசன இலக்கியத்திற்கு அவர் செய்து வரும் பேருதவியாகும். மாபெரும் பண்டிதர்களும் படாடோபமின்றிப் பாமரர்களுடன் ஒட்டிச்சென்று, அவர்களைக் கைவிடாது பற்றிக்கொண்டு, திருத்தி, அவர்களை

(198-ம் பக்கம் பார்க்க)

தரிசு நிலம்

"ராஜாராம்"

இருபதாவது நூற்றாண்டில் வெளிவந்த ஆங்கிலக் காவ்யங்களுள் மிகவும் கியாதி பெற்றது ஸ்ரீ டி. எஸ். இலியட் (T. S. Eliot) இயற்றிய **தரிசு நிலம்** (*The Waste Land*). இக் காவ்யம் ஐந்து பாகங்கள் கொண்டது; ஆனால் மொத்தம் 433 வரிகள் தான். இக் காவ்யத்தின் நோக்கத்தையும் விசேஷார்த்தங்களையும் பற்றி பத்தி பத்தியாகவும் பருத்த புஸ்தகங்களாகவும் மேல் நாட்டுக் காவ்ய மீமாம்ஸ நிபுணர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஸ்ரீ இலியட் அமெரிக்கா தேசத்தவர். ஆனால் இப்போது முக்கிய ஆங்கில ஆசிரியர்களி லொருவராய் விளங்குகிறார். இவர் முதலில் பிரசுரித்தது **புருப்ரோக்கின் காதற் பாட்டு** (*The Love Song of J. Alfred Prufrock*) என்பது எல்லாக் காதற் பாட்டுக்களிலும் விசித்திரமானது. புருப்ரோக் ரோமியோ போன்ற சின்னஞ்சிறு பையனல்லர்; வயதில் முதிர்ந்தவர்; உடம்பு குறுகியவர்; வழுக்கைத்தலை படைத்தவர்; காடு வா வா என்கிறது, வீடு போ போ என்கிறது. அவர் தன் காதலியைப் பார்த்துச் சொல்லும் சொற்கள் ஆசையற்றதாயும், அலுப்பே தரும்புவதாகவு மிருக்கின்றன. அவர் உபயோகிக்கும் உபமான உபமேயங்கள் கூட அப்படியே ஆமணக்கெண்ணெய் போலத்தான். வயதில் முதிர்ந்து, எமனுக்கெப்போதும் பயந்தொழுகி நடு நடுக்கும் நோயாளி போன்றவர் நம் ஆல்ப்ரெட் புருப்ரோக். என்ன "காதல் பாட்டு" வேண்டியிருக்கிறது? இது பாட்டா, கேலிக் கூத்தா? ஸ்ரீ இலியட் கவியா, பைத்தியமா, வீண் வம்பனா?

புருஷனை இப்படி விகாரப் படுத்திக் காண்பித்து விட்டு, ஸ்ரீ இலியட் **சீமாட்டியின் சித்திரம்** (*Portrait of a Lady*) என்ற காவ்யத்தில், வயதான அழகழிந்த பெண்ணை வர்ணித்திருக்கிறார். ஜூலியட் போல் ஜொலித்த காலமெல்லாம் போகவே, இப்போது நம் சீமாட்டியை ஏரெடுத்துப் பார்ப்பாருமில்லை; அவளிடம் அன்புடனும் ஆர்வமுடனும் பேசுவோருமில்லை. ஆனபோதிலும், அவள் பவுடர் பூச்சு மூலம் தன்னை அலங்கரித்துக் கொண்டு கிளிபோல் கூவுகிறாள்; குரங்குபோல் பேத்துகிறாள்; கரடிபோல் நடனமாடுகிறாள். இதுவும் வாழ்க்கையோ! இதை யலங்கரிப்பதும் கவியின் திறமையோ? ஸ்ரீ இலியட் கவியா, சாக்கடை இன்ஸ்பெக்டரா?

இம்மாதிரி அநேக பாட்டுக்கள் ஸ்ரீ இலியட் 1914-ம் வருஷம் முதல் வெளியிட்டுக் கொண்டு வந்தார். ஏன் இப்படி அசிங்கத்தையே வர்ணிக்க வேண்டும்? ஏன் வீணாக நம் சமூகக் குப்பைத் தொட்டிகளைக் கிளற வேண்டும்? இப்படிச் செய்வதில் ஸ்ரீ இலியட்டின் நோக்கம் தானென்ன? இவர் அழுகுண்ணி வேதாந்தியா, என்ன? இப்படியெல்லாம் ஆங்கிலக் காவ்ய விமர்சகர்கள் கேட்க ஆரம்பித்தார்கள்.

இக் கேள்விகளுக்குப் பதில்தான் 1922-ல் வெளிவந்த **தரிசு நிலம்**. பெருமாள் போய் பெரிய பெருமாள் வந்த கதைதான். இக் காவ்யத்தை முதலிற் படித்தவர்களுக்குத் தலைகால் தெரியவில்லை. ஆங்கிலத்தில் பெரும்பாதி எழுதியிருந்த போதிலும், மற்ற பாஷைக் கலப்பு அதிகம். ஸம்ஸ்கிருதம் கூட கொஞ்சம் காணலாம். மேலும், அநேக இடங்களில், தான் சொல்ல வேண்டிய விஷயங்களைத் தானே சொல்லாமல் இதர கவிகளிடமிருந்து பொறுக்கிய வார்த்தைகளால் காட்டியிருக்கிறார். காவ்யத்திற்குப் பின்னால் குறிப்புக்கள்; வெவ்வேறு புஸ்தகங்களுக்குப் பக்க, வரி, புள்ளி விவரங்கள். இவைகளையெல்லாம் முதலில் கரைத்துக் குடிக்காவிட்டால் **தரிசு நிலம்** படிப்பது, படித்து அதன் அர்த்தம் காண்பது அசாத்தியமே.

தரிசு நிலம் பதிப்பித்து 16 வருஷங்களாயினும், ஸ்ரீ இலியட்டைப்பற்றிப் பல புஸ்தகங்கள் வெளிவந்தும், இக் காவ்யத்தின் உள்ளர்த்தம் தான் இன்னும் தெரியவில்லை. 'தரிசு நிலம்' என்பது எதைக் குறிப்பிடுவது? இக்காவ்யத்தில் நடக்கும் கார்யாதிகள் ஒன்றுக்கொன்று தகவலற்று இருப்பதின் நோக்கமென்ன? ப்ருஹதாரண்யக உபநிஷத்திலிருக்கும் 'தா, தத்தா, தம்யதா, தயாத்வம், ஓம் சாந்தி சாந்தி சாந்தி' என்னும் பதங்களை **தரிசு நிலத்தில்** பொருத்தியிருப்பதின் காரணமென்ன?

தரிசு நிலம் படித்த மேதாவிகள் அதைப்பற்றி ஒரு புழுதி கிளப்பி யிருக்கிறார்கள். "அது ஒரு எலிக்கூண்டு," என்கிறார் ஒருவர்; "ஆத்மாவின் கந்தல் கந்தை," என்கிறார் அடுத்தவர்; "அசிங்கப் பிதற்றுதல்" என்கிறார் இன்னுமொருவர்; "பெருத்த மோசடி," என்கிறார் மற்றொருவர். வேறு சிலர், **தரிசு நிலம்** இருபதாவது நூற்றாண்டின் காவ்ய சிகரமென்கிறார்கள். நம்மைப் போலுள்ள சிறியோர் இவ்வாதத்திலிருந்து என்ன கண்டு கொள்ளுவது?

தரிசு நிலம் வாசித்தால் ஏதோ ஒரு உணர்ச்சி உடம்பில் பூரிப்பது உண்மை தான். ஸ்ரீ இலியட் எவ்விஷயத்தைப் பற்றியோ மிகவும் கலக்கமும், வியப்பும், கோபமும், ஆவலும் கொண்டிருப்பது வெளிப்படை. ஆனால் அது எது என்றுதான் தெரியவில்லை.

ஒருவேளை **தரிசு நிலம்** நம் நாகரிகத்தையே காட்டுவதாக விருக்கலாம். வெளிப்பார்வைக்கு நம் நவ நாகரிகம்—மேல் நாட்டாரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட நாகரிகம்—கண் கவரக் கூடியதாகப் புலப்படலாம். ஸினிமாக்கள், ஆகாயக் கப்பல்கள், ரேடியோக்கள், ஆகாயத்தை நெருங்கும் உப்பரிகைகள்,—மற்றென்ன வேண்டும்? நம் நாகரீகத்தின் உண்மை, உலகமெல்லாம் ஜெயித்துத் தன் ஆத்மாவைக் கைவிட்டது போலத் தான். பெண்ணெல்லாம் அழகு தான், கண் தான் பொட்டை. ஹிட்லர், ப்ராங்கோ, முஸோலினி, அராகி முதலியோர் கையாளும் உலகத்தில் அசல் நாகரிகம் தலைகாட்டவும் முடியுமோ? போதாக்குறைக்கு, எங்கு பார்த்தாலும் கர்ப்பத் தடைக் கருவிகள், பொய்ப்பற்கள், சீட்டுக் கட்டுகள்; ஆகாயத்திலிருந்து சொறிவது வெடி குண்டுகள், பயிரையழிக்க உயிரையழிக்க பாஷாணங்கள்,—ஆனால் பேசுவது, எழுதுவது மஹா வேதாந்தம்!

மனிதர்கள் ஆடுமாடுபோல் மதியற்று, காம வெறியுண்டு, தங்களைக் கெடுத்துக் கொள்கிறார்கள். ஸ்ரீ இலியட் லில் அம்மாவை நமக்கு அறிமுகப்படுத்துகிறார்; இந்த அம்மாவுக்கு வயது முப்பது; ஆனால் ஏற்கனவே ஐந்து பிள்ளைகள். (இது இந்தியருக்கு அற்புதமில்லை!) முகம் வாடி, கன்னமொட்டி, உடம்பு ஓய்ந்து தத்தளிக்கும் லில் தன் கணவன் தன்னை இப்போது கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை என்று துயரப்படுகிறாள்.

வேறு காட்சி. ஒரு டைப் அடிக்கும் பெண் மணி தன் விடுதியில் உலாவிக் கொண்டிருக்கிறாள். அவளைக் காண ஒரு முதலாளியின் குமாஸ்தா வருகிறான். உண்மைக் காதலில்லை, அதிக ஆவலில்லை; மதியீனமும், மிருகத் தன்மையும் தான். கற்பிழந்த பெண்கள் முற்காலங்களில் தற்கொலை புரிந்து கொண்டிருந்திருக்கலாம். தற்காலம் அவ்வளவு விபரீத காரியம் நடப்பதில்லை. குமாஸ்தா வெளிச்சென்ற பிறகு, அப்பெண் கலைந்த தலைமயிரைத் தடவிக்கொடுத்து விட்டு, தன் கிராமபோனை முடுக்குகிறாள். ஸங்கீதமும் கேட்கிறாள். (இவ்வளவும் நடப்பது பட்டப்பகலில்!)

இப்படியே **தரிசு நிலத்**திலடங்கிய காட்சிகளைத்தும் வாசிக்க வாசிக்க, வாசித்ததை நினைக்க நினைக்க அருவருப்பு மிகும். நம்மெண்ணங்களிலும், நடத்தைகளிலும், சமூகங்களிலும் சாம்ராஜ்யங்களிலும், ஆங்காங்கு ஒளிந்து கிடக்கும் அழுக்கனைத்தையும் திரட்டியெடுத்துத் **தரிசு நிலம்** அழுக்குப்பெருக, அழகு கெட்டது; கள்ளி எழும்ப, பயிர் தொலைந்தது. நீர்வளமும் நிலவளமும் பொருந்திய நாடு பாலைவனமாகியது. சிவபெருமான் திரும்பவும் ஆகாயத்திலிருந்து கங்கையைக் கொண்டு வந்தால், இத்தரிசு நிலத்தைப் பயிரிட்டு எங்கும் ரம்யமாகச் செய்யலாம். ஆனால், ஆகாய கங்கைக்குப் பதில் பாஷாண குண்டுகளல்லவோ விழுகின்றன!

இது போலவே, **தரிசு நிலம்** வாசிக்குங்கால், அதைப்பற்றி நினைக்குங்கால், அநேக எண்ணங்கள் மனதில் எழும். அதின் உள்ளர்த்தம் எதாகிலும் சரி; எல்லாம் அனர்த்தமாகிலும் சரி. அது வாசிப்பவர்கள் மேதாவித்தனத்தை இடித்து, தற்கால நிலைமையை ஆராய்ந்தறியத் தூண்டுவது நிச்சயம். இக்காவ்யம் ஒரே குழப்பம் போலத் தானிருக்கிறது. ஆனால், காவ்ய சிற்பத்தின் கடமை நம்முலக இயல்பை ஆராய்ந்து, அதன் பிம்பத்தைக் காட்டுவது தானே? நம் நாகரிகத்தில் ஏதாவது அழகோ, அரவிந்தமோ, அமைதியோ காணமுடியுமோ? ஆயிரம் குரங்குகளின் கூச்சலில் எவ்வளவு சங்கீதமிருக்குமோ, அதுபோலவே நம் நாகரிகத்தின் அர்த்தமும் அழகற்ற தோற்றமும், அமைதியில்லா அல்லலும், அன்பில்லா வாழ்க்கையும், உயிரில்லா உடம்பும், பயிரில்லா நிலமும்! இப்படியே தன்னாத்மாவையொழித்த நாகரிகத்தின் கோரத்தைக் காட்டவே தன் **தரிசு நிலத்**தையும் ஏக குழப்பமாக ஸ்ரீ இலியட் அமைத்திருக்கிறார். ஆனால், அது பெரும் பைத்தியத்தின் புலப்பமல்ல; உலகத்தின் புண்களையும், மனித வாழ்க்கையின் அருவருப்புக்களையும் கண்டு மனம் கொதித்து, தன் உதிரத்தையே கொண்டு வரைந்த காவ்யமே.

தரிசு நிலத்தின் சாராம்சத்தை ஸ்ரீ இலியட் 1927-ல் பிரசுரித்த **பொள்ளல் மனிதர்** (The Hollow Men) என்னும் சிறிய பாட்டில் தெளிவாக, மறக்கமுடியாத சொற்களில் கூறியிருக்கிறார். "இதுவே உலக முடிவு: மணியல்ல, மண்ணே!" இதைப்பற்றியும், இன்னும் சென்ற 12 வருஷங்களில் ஸ்ரீ இலியட் இயற்றிய காவ்யங்களையும், நாடகங்களையும், அரிய வியாசங்களையும் பற்றி விவரிக்க இங்கு இடமில்லை.

பாரத சக்தி மஹாகாவியம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

3. அருட்குலப் படலம்

பரதன்

பஞ்ச பூதமும் பாதியு மதியிளங் கதிருந்
துஞ்சி டாக்குண தொந்தமும் வளர்த்திடும் புவியில்
செஞ்செ யல்புரி மானிடத் தேவரும் செழித்தார்;
வெஞ்செ யல்புரி அரக்கரும் பெருத்தனர் விரைந்தே.

அருளிறைவனால் ஆகிய உலகம், பரிணமக்கிரமப்படி செடி, விலங்கு, மக்கள் இனங்களால் பெருகியது. வான், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களும், கதிரவன், சந்திரன் ஆகிய இருசுடர்களும் தாலவுலகை வளர்த்தன. நலம் தீது, இன்பம் துன்பம் ஆகிய இரு விகாரங்களைக் கொண்டே பிரகிருதியின் சத்வ, ராஜச, தாமஸாதி முக்குணங்கள் மாந்தரின் மனத்தையும் புலன்களையும், வாழ்வையும் வளர்த்தன. இக்குண பேதங்களால் மாந்தர் வாழ்க்கை பலவகைப் பட்டது. சத்வகுணமுள்ள மாந்தர் நல்ல செயல்களையே செய்து, நரதேவராக விளங்கினர். ஆசையாணவ அரக்கர் கொடுமையே செய்து உலகம் அஞ்ச விரைவாகப் பெருத்தனர். சஉ

கரவுந் தீமையும், கடுஞ்சினப் போர்களும் விளைக்கும்
அரவும் வேங்கையும் போன்றவெவ் வரக்கரை யெதிர்த்தே,
விரவு வீரமும் தவமுங்கொண் டெளிதினில் வென்றான்
பரத னென்பவன் மனுக்குலப் பரிதியாம் அவனே.

வஞ்சமும், தீமையும், கொடுமையும், பொறாமை கொண்டு கடுஞ்சினத்தால் புரியும் போர்களுமே தொழிலாய் விளைக்கும் அரக்கர் காலகோடி விஷப் பாம்பையும் இரத்த வெறிபிடித்த வேங்கையையும் போல உலகை அழித்தனர். அவரை எதிர்த்தான் பரதன் என்பவன். அவன் நற்குணங்கள் யாவும் பொருந்திய தீரன், அஞ்சா வீரம், வாள்வலியுடன் தபோபலமும் நிறைந்தவன். மாந்தர் குலத்திற்குச் சூரியன்போலே ஒளியும் சக்திக்கனலும் அளிக்கத்தக்கவன். அவனே அரக்கரை எளிதாக வென்றான். சங

அருட்குலம்

திருக் குணத்தினர் அரசெனத் தேர்ந்திசை கூற,
இருட் குலத்தினை இகல்கெட வென்றமெய் வீரன்,
உருக்கொண் டேயறம் ஓங்கிட மீண்டுமிவ் வுலகில்,
அருட் குலத்தினை ஆக்கினன் ; அதன்புக ழிசைப்பாம்.

திவ்யகுண மஹான்கள் பரதனை அரசனாகத் தேர்ந்து புகழ்ந்து வாழ்த்தினர். இருட்குல அரக்கர் பகைகெட வெற்றிபெற்ற சத்திய வீரனாகிய பரதன் உலகில் மீண்டும் தருமம் உருக்கொண்டு செழித்தோங்க அருட்குலம் ஒன்றை உண்டாக்கினான். அதன் புகழை இனிச் சொல்லுவாம். சச

தெய்வக் கற்பகஞ் செழுமலர் கொழுங்கனி தழைத்தே,
வைய கத்தினுக் களித்திடும் வகையினைப் போலே,
துய்ய நல்லருட் குலந்தருஞ் சுடர்பெறு மைந்தர்,
செய்ய வாழ்வினாற் செகத்தினுக் கினியன செய்தார்.

தெய்வத் தன்மை பொருந்தி, எக்காலமும் பசுமையாயிருக்கும் கற்பகமரம் நிறைமலர் குலுங்கி, ரசங் கொழுத்த கனிகள் செழித்து, தனது வளங்களைத் தானே அனுபவிக்காது, கருணையுடன் உலகிற்கே உதவுகிறது. அதுபோலவே பரிசுத்தமான நல்ல அருட்குலம், ஞானவீரச் சுடர்களான மைந்தரைப் பெற்றது. அவர் புண்ணிய நல்லறவாழ்க்கை வாழ்ந்தனர். அவ் வாழ்வினால் உலகிற் கெல்லாம் இனிய நலங்களைச் செய்தனர். ௪௫

இனிய வாய்மையும், வீரமும், எழில்பெறுந் திருவும்,
முனிவர் போற்றிடு ஞானமு, முதற்குண வளமும்,
புனித வாழ்க்கையும், புலமையும், பொதுநலப் பணியும்,
மனித ராகிய தேவரின் மாண்மையா மிவையே!

பிறருக்குத் தீமைசெய்யாமல் இனிமையே செய்யும் சத்திய விரதம், தீயதைக்கடிந்து, நல்லதைப் போற்றும் வீரத்திறமை, திவ்ய தேஜஸ், தர்மத்தின் ஒளிவீசும் செல்வம், தூயதவ முனிவர் போற்றும் ஆத்மஞானம், சர்வாத்ம ஞானம், முதற்குணமான சத்வகுணநிறைவு, அதனால் உண்டாகும் அமைதி, இன்பம், பொறுமை, அன்பு, அருள் முதலிய வளமைகள், பரிசுத்த யோக வாழ்க்கை, அருட்புலமை, நிபுணத்வம், தெள்ளறிவு, தமது திறமைகளைக்கொண்டு பொது ஜனங்களுக்குக் காலம் விரும்பும் சேவை செய்யும் கருணை—இவையே தெய்வத்தன்மை பெற்ற மனிதரின் பெருமைகளாகும். இத்தன்மைகள் யாவும் அருட்குல மைந்தரிடம் பொருந்தி யிருந்தன. ௪௬

புலனை வென்றவர், புவிமிசை அமரராய்ப் பொலிவார்
நிலனை வென்றவர், நீதிநன் னிருபராய்த் திகழ்வார்
இலனை வென்றவர், மலைதரும் இன்பமோங் குவர்தன்
னலனை வென்றவர் பொதுநல நண்பராய் வாழ்வார்.

அருட்குல வீரர் புலன்களை அடக்கி வென்று, உலகில் எப்போதும் நித்தியமான சுத்தான்ம உணர்வில் அமரராக வாழ்வார். நானிலத்தையும் தமது வீரத்திறனால் வென்று, நீதிச்செங்கோல் பிடித்துக் குடிகளுக்கு நன்மையே செய்யும் வேந்தராகப் புகழ் விளங்குவார். அறிவாலும், தொழிற் புலமையாலும், வாணிபத்தாலும் வறுமையை (இலன்=இலம்) வென்று, இல்லறம் அளிக்கும் போகசுகங்களை நுகர்ந்து, லௌகிகவாழ்விலும் சிறந்தோங்குவர். தன்னலத்தை வென்று, பொதுநலமே புரியும் சர்வஜன நேசராக, தொண்டும் இசையும் ஓங்கிப் பொலிவார். ௪௭

நாக ரீகத்திற் சிறந்தனர் நறுங்கலைச் செல்வர்;
வாகை யோங்கிய வலியதிண் புயத்தினர்; நாளும்
ஈகை யின்பமும், சிவந்துலங் கிதயமும் படைத்தார்
பாகி ளந்தமிழ் பயின்றிடும் பண்பின லவரே.

பல நற்கலைச் செல்வரான அருட்குலவீரர், நாகரிகத்திற் சிறந்தனர்; பகைவரை வென்று வாகையோங்கி மலைபோலத் திண்ணிய தோள்படைத்த சூரரானார். தினந்தோறும் உற்றோருக்கு இல்லையெனாது உதவும் ஈகையும், அதனால் வரும் புகழின்பமும் துய்த்தார். இதயத்தில் எப்போதும் இன்பமயமான சிவந்துலங்க நின்றார். இவை யெல்லாம் பாகுபோல் இனிய இளந் தமிழ்ப் பயிற்சியின் பெருமையால் எய்தின. ௪௮

செங்கண் மாலுயிர் காத்திடச் சிறப்புடன் அயனும்
அங்கண் மாநிலத் தாருயி ரணிகளை வகுக்க,
துங்கமாஞ் சக்தி சிவனருட் சுடரினில் வளர்ந்த
மங்கலத் திரு மரபினர் கிளையினை யறிவாம்.

பரதன் நிலைநாட்டிய அருட்குலம் செழித்தோங்கியது. அதன் அறத்தைச் செங்கண்மால் காத்தான். பிரமதேவன் இடமகன்ற உலகில் உயிர்க்குலங்களை அணிவகுத்தான். சக்தியுடன் கூடிய சிவபிரான் தனது அருட்சுடரைப் பரப்பினான். மங்கலமான அருட்குலம் பல கிளைகள் விட்டு வாழ்ந்தது. அவற்றை அறிவாம். ௪௯

நில வுருண்டையைப் போலவே நிலையிலா அரசும்,
பல குலம்பறித் தாண்டிடும் பாக்கியப் பணயம்,
வலியர் கைவழி வழிந்துசெல் வழக்குடை யாட்சி,
பொலிவு மோர்புறஞ் சகடைபோற் போகுமோர் புறமே.

மண்ணுலகம் உருண்டையானது. அது சூரியனைச் சுற்றிச் சென்றுகொண்டே யிருக்கிறது. அதனால் காலநிலையும் நாளுக்குநாள் மாறுகிறது. அதேமாதிரி ஒரு அரசாட்சியும் நிலையில்லாமல் மாறிக்கொண்டே யிருக்கும். பாக்கியம் அல்லது அதிட்டம் அரசையும் செல்வத்தையும் பணயம் வைத்துச் சூதாடுகிறது. காய் எப்படி உருளுமோ அப்படி அரசும் செல்லும். அதைப் பல குலத்தின் படைவலிகொண்டும், சூழ்ச்சிகளாலும் பறித்தாளுவர். உலகாட்சிஒரு பலவான் கைக்குவரும். அவனைவிடப் பலவான் வந்து, அதைப் பறித்தாள்வான். வழிந்து செல்லும் தண்ணீர் மாதிரி வலியர் கைவழியே அரசாட்சி செல்லும். அது ஒரு அரசன் அரியணையிற் பொலிவெய்தும். அவனுக்குப் பிறகு சகடைக் கால்போலே மாறி இன்னொரிடம் செல்லும். அந்த மாதிரியே பாரதன் நாட்டிய ஆட்சியும் காலக்கிரமத்தில் பல மன்னர் கைத்தேறியது. அம் மன்னர் குலத்தை அறிவோம். ௰

வீர மோங்கிய செந்தமிழ் விரிநில வேந்தர்,
ஆரியர், மதி யிரவியர், அங்கியர் சிங்கர்,
மோரியர் பௌத்த கிறித்துவ மூகம்மதி யர்கள்,
மாரதர் இனு மிகப்பலர் வழிவழி புரந்தார்.

ஒருகாலம் பரதகண்டம் முழுதும் குமரிகண்டமும் விரிந்த செந்தமிழ் நிலம், வீரமோங்கியது. அந்நிலத்தைப் புரந்த தமிழ் வேந்தர், பின்னேவந்த ஆரியர், சூரியசந்திர வமிசத்தினர், மௌரியர், குப்தர், பௌத்த மன்னர், இஸ்லாமிய மன்னர், அக்கினிகுல ராஜபுத்திரர், மகாராட்டிரர், சீக்கியசிங்கர், கிறித்தவ மன்னர் ஆகிய இன்னும் பலர் வழிவழியாக, அவரவர் கொடியை நாட்டி இந்நாட்டை ஆண்டனர். ௰௧

சிங்க மோங்கிய நெஞ்சினர், செருபடைத் தலைவர்,
வங்க மோங்கிய வாணிபர், தொழில்வளத் தாலே
தங்க மோங்கிய தருகையர் தமிழ்க்கலை முழங்கும்
சங்க மோங்கிய தென்னவர் மன்னவர் தாமே.

தென்னவராகிய பாண்டியர் சிங்கம்போலத் தைரியம் ஓங்கிய நெஞ்சினர். போர்ப்படைகளை நடத்திப் பகைவரை வெல்லும் வீரத்தலைவர். எல்லாத் துறைகளையும் தமது தேக்குக்கப்பல்களைக் கொண்டு அளக்கும் வாணிபச் செழிப்புடையார். ஆடை, முத்து, பவளம், முதலிய பலவேறு தொழில்களாலே தங்கக்குவை ஓங்கிய தமது செல்வத்தைப் பாத்திரமறிந்து தாராளமாகத் தரும் முகிற்கையர். தமிழ்க்கலைகள் முழங்கும் மூன்று சங்கம் ஓங்கிய நாட்டினர். அறம், அன்பு, கலை, வீரம், வாணிபம், தொழில், செல்வம், படை முதலிய அனைத்தும் வளம்பெற நாடாண்டமையால், அவரே மன்னுயிரைக் காக்கும் மன்னர் என்பதற்கு உதாரணமாவார். இமயப்பிடரில் மீன்கொடி பொறித்த நெடுஞ்செழியன், தலையாலங்கானில் பதினொரு வேந்தரை வென்ற இளஞ் செழியன் முதலியோர் புகழ் பெற்ற பாண்டியர். ௰௨

தண்மை யோங்கிய குடையினர்; தானையிற் சிறந்தார் ;
வண்மை யோங்கிய செல்வர்கள் பொன்னிநல் வளவர்,
திண்மை யோங்கிய புயத்தினர்; சேரநாட் டரசர்
உண்மை யோங்கிய புகழினுக் குடையவ ரிவரே.

கரிகால் வளவன், ராஜராஜன், கங்கைகொண்டான் போன்ற பொன்னிவள நாட்டரசரான சோழர், தண்ணிழல் பரப்பி அன்பும், அருளும், அமைதியும் அளிக்கும் வெண்குடைக்கீழ் குடிகளை ஆண்டனர். படைவலியிலும் சிறந்து, பகையரசரை வென்று பெருநிலம் புரந்தனர். கப்பல் வாணிபத்தாலும், தொழிலாலும் வந்த பெருஞ் செல்வத்தைக் குடிகளின் நன்மைக்கே தாராளமாக வழங்கும் வண்மையோங்கிய தருமவான்

கள். இமயவரம்பன், செங்குட்டுவன் போன்ற சேர, நாட்டரசர், போரில் பகைவரை வீழ்த்தி வாகைபுனையும் திண்ணிய தோளுடையார். பாண்டியர், சோழர், சேரர் ஆகிய இத்தமிழ்நாட்டு மன்னரே உண்மையாகப் புகழுக்கு உரியவராவார். அவர்களிடம் வீரமும், அறமும், திருவும், கலையும் பொருந்தியிருந்தன. மூவேந்தர் வரலாற்றைச் **சிலம்புச் செல்வத்திற்** காண்க. ௫௩

அமரர் உயர்ந்திட நஞ்சினை அமுதென நயந்தே,
எமனை யெற்றி, மன் மதனையும் எரித்தவன் அடியார்,
விமல மாலடி யார்இவர் பாடிய வேதத்
தமர மோங்கிடுந் தண்டமிழ் நாட்டினுக் கிணையோ ?

பரமசிவன், அமரர் பிழைத்திருக்கக் கருணைகொண்டு ஆலகால விஷத்தையுண்டான்; அன்பன் மார்க்கண்டன்மேற் பாசம் வீசிய நமனைக் காலால்எற்றியோட்டினன். தவராஜனாகிய தன்மேலும் பூங்கணை பாய்ச்சிய காமனை நெற்றிக்கண்ணால் எரித்தான். அத்தகைய பரமனடியாரான மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலியோர் பாடிய திருமுறைகளும், பரிசுத்தவானான விஷ்ணுவின் அடியார் பாடிய திருவாய்மொழியும் தமிழ் வேதங்களாம். இவை ஒலிக்கும் நமது செந்தமிழ் நாட்டினுக்கு எந்நாடே இணையாகும்? ௫௪

கடவுள் உள்ளமும், கலைகளுங், கதைகளுங், கவியும்,
கடவு ளாடலைத் தாங்கிய கவின்பெருந் தலமும்,
கடவுட் காதலும் வீரமும், கற்புமோங் கியதாம்
கடவு ளாலய மாகிய கனிதமி ழகமே !

அருள் கனிந்தோங்கும் இத்தமிழகமே உயிர்களின் உள்ளந்தோறும் கடவுள் நடம்புரிவதைக் கண்டது, கடவுட் கலைகளான திருமுறைகளும், புண்ணியக் கதைகளும், அற்புதங்களைச் செய்த அருட்கவிகளும், திருவிளையாடல்களைக் கண்ட திருத்தலங்களும், கடவுட் காதலும், கடவுளை அடையும் வைராக்கியவீரமும், கடவுளையே நாயகனாகக் கொண்ட அடியாரின் அன்புறுதியும், பத்தினியர் கற்பும் ஓங்கியது தெய்வாலயமாக விளங்கும் புண்ணிய நிலயமான இந்தத் தமிழ் நாடேயாகும். ௫௫

(தொடரும்)

கார்த்திகை இதழில் திருத்தம்

தாயே சரணம்—செய்யுள் 5, வரி 5—பார்வைக் குனதழகை

பூகோளம்—முதல் பத்தி, வரி 10—ஒன்பது கிரகங்கள்

.....................................182-ம் பக்கம் (படம்)—Sagittarius

கைலாச நிகண்டு சூளாமணி

(இராவ்சாகிப் ஸ்ரீ S. வையாபுரிப் பிள்ளை பி.ஏ., பி.எல்.)

தெய்வப்பெயர்த் தொகுதி

71. அணங்குசூர் கடவுள் புத்தேள் தேவென
உணர்ந்த பெயரே உம்பர் பொதுப்பெயர்.
72. அரமகளிர் சுரமகளிர் அரம்பைய ரென்ன
அவர்மகளிர் தமக்கு வரும் பொதுப்பெயர்.
73. சூரு மணங்குஞ் சுரமகளிர் பொதுப்பெயர்.
74. நிருத ரிராக்கதர் நிசிசரர் அரக்கர்
தயித்தியர் அவுணர் தானவர் தகுவர்
வானவர் மாற்றலர் மாயா வல்லபர்
யாது தானவ ரெழிற்றிதி புதல்வர்
பிசிதா சனரெனப் பேசிய அனைத்தும்
அசுரர் பெயரென அறைந்தனர் புலவர்.
75. அரிக்குநீர் வார்த்தோன் அசுரர் நாயகன்
அரிக்குமண் கொடுத்தோன் அமரர் புராந்த
[கன்
வயிர போசனன் மாவலி யவுணன்.
76. கரியோன் மாதுலன் கஞ்ச னென்ப.
77. ஆடக மேனியோன் அழியா வரத்தோன்
வானவர் மறலி வான்முழு தாண்டோன்
நரகரி வயிரி நலங்கிளர் அவுணன்
பிருங்கலா தன்பிதா இரணிய னென்ன
அருங்கலை வல்லோ ராய்ந்துரைத் தனரே.
78. கயிலை யெடுத்தோன் கரியொடு பொரு
[தோன்
கும்பகனன் முன்னவன் கூற்றைவென்
[கண்டோன்
இந்திரர் புராந்தகன் இலங்கை யாளி
இறைவரம் பெற்றோன் இருபது கரத்
[தோன்
இராமவயிரி ....
ஒருபது சிரத்தோன் ஒருங்குல காண்
[டோன்
சடாயுவைத் தடிந்தோன் சாம வேதியன்
மூல பலத்தோன் முள்ளெயிற் றண்ணல்
அங்கைவாட் செல்வன் கங்குல் வண்ணன்
தசமுக மன்னன் தாம்பிர மதிலோன்
திரிகூட வெற்பன் நிரையக முடையோன்
இருநிதி கவர்ந்தோன் இறைஞ்சா முடி
[யோன்
அளகா புராரி அசோக வனத்தோன்
புட்பக மூர்தி பூந்தருக் கொய்தோன்
அமரர் பயங்கரன் அசுர ராசன்
மண்டோ தரிபதி மாரீசன் மருமகன்
அனும தகனென் றுய்ந்தவை யெல்லாம்
இனிய பெருஞ்செல்வத் திராவணன் பெய
[ரே.
79. தீர்க்க நித்திரையோன் தேவர் பயங்கரன்
தசமுகற் கிளையோன் தண்டபாணி
கூற்றின்வாய் கீண்டோன் கும்பகனன்
[பெயரே.
80. இராவணன் குமாரன் இந்திர சித்து
மேக நாதன் வேள்வி செய்தோன்
வானர பந்தனன் அதிகாயன் முன்னோன்
என்றுய்ந் திவை இலங்கைப் பதியான்
[பெயராமே.
81. எல்லை பதங்கன் இரவி என்றாழ்
தினமணி யருக்கன் செஞ்சுடர்த் தேரோன்
அனலி கனலி அமரன் மார்த்தாண்டன்
ஆயிரங் கதிரோன் அழலவன் திவாகரன்
வெங்கதிர் திமிராரி வெய்யவன் சூரியன்
அண்ட யோனி ஆதபன் பாற்கரன்
தரணி ஞாயிறு சவிதா வெயிலோன்
விருச்சிகன் பகலோன் மித்திரன் மாலி
ஒளியவன் விசயன் உலோக விளக்கம்
கவிபதி தந்தை கமல வாந்தியன்
முக்கை யம்புடை முதலோன் விரோசனன்
உதயன் அருணன் ஒற்றைத் திகிரியன்
ஆயு வளர்ப்போன் அலரி தீவிரன்
உலக விலோசனன் ஒரேழ் பரியோன்
இராகு போசனன் இனன்இக லசுர
ரந்தகன் குதவரி குணதிசை யுதிப்போன்
இறைவலஞ் சுழல்வோ னென்றிவை ராய்ந்த
அறைபெயர் தாமே யடுகதிர்க் குரித்தே.
82. தீவிரங் கிரணங் கரமென மூன்றும்
காய்கதிர்ப் பெயரெனக் கட்டுரைத் தனரே.
83. வெய்யோன் மண்டலம் விசய மாகும்.
84. தனிக்காற் பொற்றேர் அருக்க னூர்தி.
85. ஆதபங் கோடை யொளிவெயி லென்றாழ்
ஒதிய நான்கு மொருபொரு ளென்ப.
86. காலை யுதயங் கழியுநாள் புலரி
வைகறை விடியல் வைகல் காலமார்தல்
துயிலொழி போது சொல்லிய பிராம்மமென
இயல்வன காலைக் கியன்றதொல் பெயரே.

87. நண்பக லுச்சி நடுப்பகல் உருமம்
என்பமத் தியான மெனவுரைத் தனரே.
88. சந்தி யந்தி சாய மாலை
அத்தமனம் எற்பாடு அவன்படு பொழுதே.
89. சந்திரன் உடுபதி தாராபதி வெண்மதி
சசிபிறை திங்கள் அருச்சிகன் தண்சுடர்
அமுத கிரணன் அம்புலி யாலோன்
இந்து சோமன் இரவோன் வேந்தன்
குமுத சகாயன் குபேரன் இமகரன்
நிலவன் குரங்கன் நெடுங்கடற் பிறந்தோன்
தானவன் இராக்கதிர் தண்ணவன் கலை
[யோன்
சீர்தருக் கிரவலர் செல்வன் களங்கன்
கேது விரோதற் கிளந்துரைத் தவையெலாம்
யாதுமிக் கடவுட் கியன்றவன் பெயரே.
90. சந்திரிகை நிலவு தண்கதிர்ப் பெயரே.
91. வெற்றி யூர்தி விமான மாகும்.
92. சாமம் அல்கு தமசு கங்குல்
யாமம் நத்தம் யாமினி விபாவரி
இரசனி இரவு இராத்திரி அல்லு
நிசிபகல் மாலை நீலம் அந்தகாரம்
திமிரம் நிமிரம் எல்லி துவாந்தம்
எனவரு மென்ப ரிருட்பெயர் தானே.
93. ஆரல் பூமன் அங்காரகன் அங்கி
ஆரழல் வக்கிரன் அவனிசேய் குசன்
மங்கலன் குருதி வக்கிரன் அரத்தன்
அறிவன் தீக்கோள் அருண னென்றும்
செறியும் நாமஞ் செவ்வாய்க் காமே.
94. மதிமகன் கணக்கன் மால்மகன் அருணன்
அறிஞன் மேதை யடுதேர்ப் பாகன்
பச்சை புலவன் பண்டிதன் புந்தி
சிந்தைக் கரியோன் தூதன் சாமனென
வந்தவை புதனுக்கு வகுத்ததொல் பெயரே.
95. அந்தணன் பொன் ஆண்டளப்போன்
[பீதகன்
அரசன் சுரர்குரு ஆடகன் மந்திரி
சீவன் சொற்பதி சிகண்டி பிரகற்பதி
தேவர் மந்திரி யெனச் செப்பிய வனைத்தும்
மேவிய வியாழம் வியன்பெய ராமே.
96. மழைக்கோள் தயித்தியர் மந்திரி சல்லியன்
பார்க்கவன் சுங்கவன் பளிங்கு திங்கள்
ஒள்ளியோன் பிரசுரன் ஒருகணன்
[காப்பியன்
கவிபுகர் சிதனெடு காண னென்பவை
புவிபுகழ் வெள்ளிக்குப் பொருந்தும்
பெயரே.
97. கருங்கொடிச் செல்வன் கரியோன் முட
[வன்
மந்தன் காரி பங்கு மேற்கோள்
சந்திர சாவகன் சவுரி முதுமகன்
கதிர்மகன் நீலன் கீழ்மக னென்ன
எதிர்பவை சனிப்பெய ரென்றுரைத்
தனரே.
98. சொன்ன எழுகோள் தொடுத்தவேழ்
[நாட்கு
மன்னு கிழமையும் வாரமு மாகும்.
99. தயங்கும் இராகுத் தமன்கரும் பாம்பே.
100. சிகியுங் கேதுவுஞ் செம்பாம் பாகும்.
101. யாழே தலைநாள் இரலை புரவி
அற்பசி மருத்துவன் அச்சுவதிக் காமே.
102. கங்குல் கிழவன் காடுமுக் கூட்டு
தாசி பூதந் தாழி யடுப்பு
பேசிய தருமனுள் பெருஞ்சோ றென்
[றிவை
ஆசில் பரணியி னபிதா னம்மே.
103. ஆரல் அங்கி யளகிறல் அறுமீன்
வாணன் நாவிதன் மலியழல் அறுவாய்
அளக்கர் இருவை ஆகுங் கார்த்திகை.
104. பண்டி தேருருள் பார்சக டுற்றல்
ஐமீன் வையம் அயனுள் விமானமென்
றேதிய வெல்லாம் ரோகிணிப் பெயரே.
105. மார்கழி பேராளன் மான்றலை ஐந்திரன்
ஆகு மும்மீன் மதிநாள் நரிப்புறம்
பாலை வெய்யோனெனப் பகரபி தானம்
இல்லைமன் பரவு மிருகசீ ரிடமே.
106. செங்கை யிறையாழ் சிலைசிவன் தினமென
அங்கவை யைந்தும் ஆதிரைப் பெயரே.
107. கழையும் ஆவணமுங் கரும்பும் புணர்தமும்
பிண்டியும் புனிதமும் விண்டுவும் பாலையும்
அதிதி நாளும் அவையொழிந் தெரியும்
பொதியின் மாமுனி புனர்பூச மென்ப.
108. வானவர் குருநாள் வண்டு காற்குளம்
கொடிறு மைததி பாற்குடம் பூசமே.
109. ஆயிலியங் கவ்வையும் அரவி னுளுமாம்.
110. வேட்டுவன் வாய்க்கால் வேள்வி கொடு
[நுகம்
ஆசில முதற்சனி வாய்த்தநெல் ஞமலி
பேசிய பிதிர்க்கள்நாள் பெறுமகப் பெயரே.
111. இடைச்சனி தூற்கை எலிநா விதன்கணை
அடைத்தவர்க் கறுதி நாளாகும் பூரம்.
112. பாற்குனங் கடைச்சனி பங்குனி மாரி
[நாள்
சீர்க்குள நெய்த்தோல் செப்பி உத்திரம்.
113. உத்தமன் நவ்வி யுயர்தருக் களிறு
கைமீன் கவுத்துவன் கன்னி கைவிரல்
கனலி நா ளத்தமெனக் கட்டுரைத் தனரே.
114. அம்பரம் நெய்வான் ஆடை யறுவை
மீன்சுவை நேர்வான் விளங்கிய தச்சன்
நடுநாள் துவட்டா நாட்பெய ரென்னப்
படுமாற் சித்திரைப் பல்பெயர் தாமே.

115. வெறுநுகம் மரக்கால் விளக்கு வீழ்க்கை
எறிபவ னத்தினம் இவையே சோதி.
116. பதுமமும் தீபமும் பகர்வ ரதற்கே.
117. முற்றில் விசாகம் முறம்வை காசி
வெற்றி யனல்நாள் விசாக மாகும்.
118. புற்றுளி பெண்ணை போந்தை பனைதேள்
மித்திர நாளிவை விளம்பில் அனுஷம்.
119. வல்லாரை வேதி வானவர் கோனுள்
தொல்லழல் யாளி துளங்கொளி கேட்டை.
120. குருகுவில் அன்றி கொக்குத் தேட்கடை
ஆனி யசுரர்நாள் ஆங்கவை மூலம்.
121. பொய்கை யுடைகுளம் பூராட மாகும்.
122. வாவியு முற்குளம் வாய்த்தநீர் நாளும்
மேவி யதற்கென விளம்பின ருளரே.
123. காசினி தன்னுள் கடைக்குளம் ஆடி
கூவல் மணிமுடி கூறி லுத்திராடம்.
124. உலக்கை மாயனுள் ஓங்கிய முக்கோல்
துளக்கமில் சிரவணஞ் சோணம் ஓணம்.
125. காக்கைபுட் பறவை கருங்கொடி யாவணி
ஆக்கிய வசுக்கள்நாள் அவிட்ட மாமே.
126. சுண்டன் செக்கு குன்று வருணனுள்
தண்டமிழ் வல்லோர் சதைய மென்ப.
127. நாழி பாத நாள்முற் கொழுங்கோல்
புரட்டை யென்பதும் பூரட்டாதி.
128. அறிவனுள் பிற் கொழுங்கோல் அர [சன்முரசென
உரியபெய ருடைய துத்திரட் டாதி.
129. சூலங் கடைமீன் தோணி மரக்கலம்
நாவா யிரவிநாட் கோளும் இரேபதி.
130. மறிதகர் மேழம் வற்காலி கொச்சை
மேலலே மோத்தை மேட விராசி.
131. இடபம் புல்லம் எருது பாண்டில்
விடைசேக் குண்டை யெனவிளம் பினரே.
132. தாரன மகவைஞன் தண்டு கானயாழ்
பாடவை யிரட்டை பாடவள் சவைமகள்
மேவிய மிதுன மேற்படும் பெயரே.
133. சிங்கப் பெயரே சிங்கப் பெயரே.
134. கன்னிப் பெயரே கன்னிக்கும் பெயரே.
135. கட்டளை நிறைகோல் தூங்கல் வணிகன்
செட்டி நிறுப்பான் துலேதுலாப் பெயரே.
136. துடர்மணி தெறுக்கால் தட்டன் புன்றேள்
விடதான மென்ப விருச்சிகப் பெயரே.
137. தனுவின் பலபெயர் தனுவுக்கு முரித்தே.
138. மான்கலே புல்வாய் வளர்சுறுக் கேதுவென்
றேய்ந்தன மகர இராசிப் பெயரே.
139. கூன்குடங் கலசங் குட்டுவங் கும்பம்
வான்பெருஞ் சாடி வகைகும்ப விராசி.
140. மீன்கயல் கெண்டைசேல் மீனப் [பெயரே.
141. மேட மிடப மிதுன மென்ன
நாடிய வீதியில் நடக்கு மிருகதிர்.
142. மீனுந் துலேயு மேடமுங் கன்னியும்
ஆனவை மேட வீதிக் கமைந்தன.
143. கடகந் தண்டு சீய மேறென
இடப வீதிக் கிசைந்த வென்ப.
144. வளங்கொள்குடம் வில்லு மகரந் தேளென
விளங்கிய மிதுன வீதி தனக்கே.
145. திதியின் கிளவி செப்பிற் பக்கம்.
146. ஒன்றாறு பன்னென் றுடைய பக்கம்
நன்றிகொள் நந்தையென நவிலுவோ [ருளரே.
147. பன்னிரண் டேழிரண் டென்னவரு பக்கம்
பத்திரை யென்ப முத்தமிழ்ப் புலவர்.
148. மூன்று எட்டுப்பன் மூன்றெனும் பக்கம்
ஆன்றவர் சயையென அளந்துரைத் [தனரே.
149. நாலொன் பதுபதி லெலெனும் பக்கம்
கோலிய இனுத்தையெனக் கூறின ருளரே.
150. அஞ்சுபத்துப் பதினஞ்செனும் [பக்கம்
விஞ்சிய பூரணமென விளம் பினருளரே.
151. எல்லே திவாப்பகல் அல்கல் ஆனியம்
திவசம் வைகல் தினமொடு காலிவை
நன்னாட் பெயரெனச் சொன்னோ ருளரே.
152. பொழுதுஞ் செவ்வியும் போதுங் [கொன்னும்
எல்லேயு மமையமு மேல்வையும் வேலேயும்
காலும் பதமும் யாமமுங் காலம்.
153. பிற்றையும் பின்றையும் பின்னேயென [லாகும்.
154. துடியுங் கலேயுந் தொடர்கால நுட்பம்.
155. காமு மாத்திரைக் கணமும் விரைவு.
எண்ணிக் கண்க ளிமைத்தொழில் [போதும்
துன்னிற் கைவிரல் நொடித் தொழில் [போதும்
கண்ணில் மாத்திரை கால நுட்பமே.

(தொடரும்)

பின்லந்தில் ஒரு தமிழன்

(ஸ்ரீ ஏ. கே. செட்டியார்)

ஸ்வீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமிலிருந்து ஒரு அழகிய சிறு கப்பலில் பின்லந்துக்குப் பிரயாணமானேன். இரவு ஏழு மணிக்குக் கப்பல் புறப்பட்டது. கப்பல் நிறையப் பிரயாணிகளிருந்தனர். அவர்கள் பல பாஷைகளில் பேசினார்கள். அவைகளில் ஒன்று கூட எனக்கு விளங்கவில்லை.

கப்பலில் நான் அங்கும் இங்கும் செல்லும் பொழுதெல்லாம் பிரயாணிகள் என்னை உற்று நோக்கினர். இரவு 9 மணிக்குக் கப்பலில் சாப்பிடும் இடத்திற்குச் சென்றேன். அங்கு மத்தியில் ஒரு பெரிய மேஜை இருந்தது. அதில் சுமார் 20 விதமான சூடு இல்லாத உணவு வகைகள் பெரிய பிளேட்டுகளில் பரப்பப்பட்டிருந்தன. பிரயாணிகள் அங்கிருந்த பிளேட்டுகளில் ஒன்று கத்தி, ஃபோர்க் முதலியவைகளை எடுத்துக்கொண்டு மேஜையைப் பிரதட்சிணம் வந்தனர். இக்காட்சி மிகவும் வேடிக்கையாக இருந்தது. பிரதட்சிணம் வரும்பொழுது தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டு தங்களிடத்திற்குச் செல்லுவார்கள். இம்மாதிரி எத்தனை முறை வேண்டுமானாலும் பிரதட்சிணமாக வந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொள்ளலாம். இது மட்டுந்தான் சாப்பாடு என்று நினைக்காதீர்கள். இது முடிந்ததும் வழக்கப்படி பல உணவுகளை வேலைக்காரிகள் பரிமாறுவார்கள்.

இரவு பன்னிரண்டரை மணி. சிறுதீவு ஒன்றில் கப்பல் சில நிமிஷங்கள் தங்கின. இதுதான் நாம் பத்திரிகைகளில் படிக்கும் ஒலண்டு (Oland).

மறுநாள் காலையில் பின்லந்தைச் சேர்ந்தோம். ஆபோ (Abo) எனும் துறைமுகத்தில் இறங்கினோம். பின்லந்திலுள்ள இரண்டாவது பெரிய துறைமுகம் ஆபோதான். இதனை (Turku) தூர்கு என்றும் கூறுவார்கள்.

இங்கிருந்து ஹெல்சிங்கிக்கு ரயிலில் சென்றேன். சுமார் நான்கு மணிநேரம் பிரயாணம். ரயிலில் சாப்பிடுமிடத்தில் ஒரு பெண் எனக்குக் காலை ஆகாரம் கொடுத்தாள். அவளிடம் நான் கப்பலில் கற்றுக்கொண்ட சில (Finnish) பின்னிஷ் வார்த்தைகளைத் தைரியமாக—ஆனால் தப்பும் தவறுமாகக்—கூறினேன். அதற்கவள் தான் பின்னிஷ் பெண் அல்லவென்றும், ஸ்வீடிஷ் பெண் என்றும், கரையோரத்தில் வசிப்பவர்கட்கு (Finnish) பின்னிஷ் பாஷையே தெரியாதென்றும் அரைகுறையான ஆங்கிலத்தில் கூறினாள்.

மைனாரிட்டி பிரச்னை இந்தியா ஒன்றில்தான் அதிகம் என்று நினைத்திருந்தேன். ஆனால் பின்லந்திலும் இப் பிரச்னை மிகப் பெரிதாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது. இந்த மைனாரிட்டி பிரச்னை, பின்னிஷ் மக்கள் சுதந்தரம் பெற்றதை எந்த விதத்திலும் தடுக்கவில்லை.

ரயில் ஹெல்சிங்கியை அடைந்தது. ஸ்டேஷன் மிகச் சுத்தமாகவும், அழகாகவும் இருந்தது. பின்லந்தில் பார்க்கவேண்டிய முக்கியமானவைகளுள் ஹெல்சிங்கி ரயில்வே ஸ்டேஷனின் கட்டிடமும் ஒன்று. இக்கட்டிடத்தின் அமைப்பும் வனப்பும் பின்லந்துக்கே சிறப்பானது. ரயில்வே ஸ்டேஷனில், வெளிநாட்டு யாத்ரீகர்கட்கு உதவி செய்வதாக ஒரு காரியாலயம் இருக்கிறது. அங்குள்ளவர்கள் மிக அன்பாக உபசரித்து உதவிகள் செய்கின்றனர்.

நேராக ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். முன்னரே நான் அறிவிக்காமலிருந்ததால், ஹோட்டல் மானேஜர் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அன்று காலையில் ஒரு ‘கறுப்பு மனிதன்’ தனது ஹோட்டலுக்கு வரக்கூடும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

ஹோட்டல் மானேஜர் என்னை மேன்மாடிக்கு அழைத்துச் சென்று, ஒரு அறையைக் காண்பித்தார். ஹோட்டலுக்குள் நான் நுழைந்த உடனேயே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஹோட்டலில் தங்கியிருந்த பெண்களும், ஹோட்டல் வேலைக்காரப் பெண்களும், ஜன்னல் வழியாகவும், மூலை முடுக்குகளில் நின்றுகொண்டு மறைவாகவும் எனது தரிசனத்திற்குக் காத்துக்கொண்டு நின்றனர். சில வேலைக்காரப் பெண்கள் ஓடி



ஹெல்சிங்கியில் பார்லிமெண்ட் கட்டிடம்



ஹெல்சிங்கியில் போஸ்டாபீஸ் கட்டிடம்

ஒளிந்து கொள்வார்கள். இக்காட்சி மிகவும் ஸ்வாரஸ்யமாக விருந்தது.

ஹோட்டலில் தங்கிய 48 மணி நேரத்திற்குள் நான் பழைய மனிதனுகி விட்டேன். ஆனல் வீதியில் செல்லும் பொழுதெல்லாம் உருண்டை முக பின்னியர்கள் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

ஹெல்சிங்கி மிகவும் அழகான நகரம். இரண்டரைலட்சம் ஜனத்தொகையுள்ள இந்த நகரத்திலே குடிசைகளோ, குட்டிச் சுவர்களோ கிடையாது. உலகத்திலேயே இம்மாதிரியான நகரம் இது ஒன்றுதான் என்று கூறுகின்றனர். எல்லாம் புத்தப்புதிய கட்டிடங்கள். மூன்று முக்கியமான கட்டிடங்களைக் குறிப்பிடலாம். பார்லிமெண்டு, போஸ்டாபீஸ், ரயில்வே ஸ்டேஷன். இதில் பார்லிமெண்டு கட்டிடம் மிக நன்ருக இருக்கிறது. எத்தனையோ தேசங்களிலுள்ள பார்லிமெண்டுக் கட்டிடங்களைவிட, இக் கட்டிடம் கம்பீரமாகவும் வசதியுள்ளதாகவும் இருக்கிறது.

பின்லந்து ஒரு குடியரசு. தலைவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுகிருர். பார்லிமெண்டில் இரண்டு சபைகள் கிடையாது. ஒரே ஒரு சபைதான். இந்தப் பார்லிமெண்டில் தற்பொழுது ஆறுகட்சிக ளிருக்கின்றன. விவசாயிகள் கட்சியும், தொழிலாளர் கட்சியும்தான் முக்கியமானது. ஸ்வீடிஷ் மைனரிட்டிகளின் கட்சியொன்று இருக்கிறது. கன்சர்வேடிவ், லிபரல், சோஷியலிஸ்ட் கட்சிகளும் இருக்கின்றன.

பின்லந்து பல வருடங்களாக ரஷ்யாவின் ஏகாதிபத்தியத்தில் இருந்தது. சுமார் 20 வருடங்களாகத் தான் அது ஒரு சுதந்தர நாடாக இருக்கிறது. பின்னியர்கள் ரஷ்யர்களையும், பொதுஉடைமைக்கொள்கைகளையும் வெறுக்கின்றனர். "உலகத்திலே, ரஷ்யா ஒன்றைத்தவிர மற்றெல்லாத் தேசங்களையும், மற்றெல்லா மக்களையும் நாங்கள் நேசிக்கிருேம். ரஷ்யர்கள் பின்லந்தை விட்டுச் சென்றுவிட்டனர். இந்த நாட்டில் அவர்கள் விட்டுவிட்டுப் போனது இரண்டு ரஷ்ய தேவாலயங்கள்தான்" என்று ஒரு பின்னிஷ் ப்ரொபசர் கூறினர்.

ஸ்காண்டிநேவியா என்று சொல்லப்படுகிற நான்கு நாடுகளில் பின்லந்தும் ஒன்று. ஆனல் மற்ற மூன்று நாட்டினர்களான நார்வீஜியர்கள், ஸ்வீடிஷ்காரர்கள், டேனிஷ்காரர்கள் ஆகியோர் பின்லந்தைப் பூகோள முறைப்படி தான் ஸ்காண்டிநேவிய நாடாகக் கொள்கின்றனர் பின்லந்தைத்தவிர மற்ற மூன்று தேசத்தினர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். பின்னிஷ்காரர்களின் உருவம், பாஷை, பழக்க வழக்கம்எல்லாமே மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுகின்றன. பின்னிஷ்காரர்கள் வெள்ளைக்காரர்கள் அல்லவென்றும் பிரசாரம்செய்யப்படுகிறது. பின்னிஷ்காரர்கள் (Slovak) ஸ்லோவக் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. பின்னிஷ்காரர்கள் நல்லவெள்ளைநிறத்தவர். எல்லோரும் உருண்டை முகத்தினர், செம்பட்டை மயிரினர்.

பின்னிஷ் தேசத்தின் நாணயம் பின்னிஷ் மார்க் என்பது. பவுனுக்கு 227 மார்க்கு. ஒரு ரூபாய்க்குச் சுமார் 17 மார்க்கு. சாமான்களின் விலை யெல்லாம் யாத்ரீகர்கட்கு மலிவு. ஐரோப்பாவிலே யாத்ரீகர்கள் குறைவான செலவிலே பிரயாணம் செய்யக்கூடிய நாடுகளில் பின்லந்தும் ஒன்று.

ஒலிம்பிக் மட்டும் நடக்குமானல், ஏழை நாடான பின்லந்தின் பொருளாதார நிலை சிறிதளவு உயரும். ஒலிம்பிக் என்றபெயரே இப்பொழுது அதிர்ஷ்டமில்லா திருக்கிறது. ஒலிம்பிக் நடத்திய ஜர்மனி சண்டையில் இறங்கி யிருக்கிறது. ஒலிம்பிக்நடத்த ஏற்பாடுசெய்த ஜப்பான், சீனச்சண்டையில் இறங்கிற்று. ஒலிம்பிக் ஏற்பாடுகளை யெல்லாம் முடித்துத் தயாராக இருந்த பின்லந்து இப்பொழுது தனது சுதந்தரத்திற்காகப் போராடுகிறது. இந்த ஒலிம்பிக் இப்பொழுது வேறு எந்த நாட்டிற்குப் போகப் போகிறதோ தெரியவில்லை.

பின்லந்தில் 63 ஆயிரம் ஏரிகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அதே கணக்குப்படிதானே என்னவோ 63 ஆயிரம் மக்கள் உட்காரும்படி வசதியுள்ள ஒலிம்பிக் ஸ்டேடியத்தை அமைத்தனர். இந்த ஸ்டேடியத்தில் ஹெல்சிங்கியிலுள்ள ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் உட்காரலாம்.

மற்ற பல நாடுகளைவிட, பின்லந்துக்கு ஒலிம்பிக் விளையாட்டை நடத்த உரிமையுண்டு. பின்னிஷ் மக்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் தேகப் பயிற்சியில் அளவு கடந்த ஆர்வமுள்ளவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டேடியங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திலுள்ள ஸ்டேடியத்திற்கு வேடிக்கை பார்க்கச் சென்றேன். அப்பொழுது அரைகுறையான ஆங்கிலம் பேசிய ஒரு பின்னிஷ் இளைஞன், என்னை

இந்தியன் என்று தெரிந்துகொண்டு "ஹாக்கி (Hockey) யில் உலகப் புகழ் படைத்தது நீங்கள் தானே. வருகிற ஒலிம்பிக் விளையாட்டிலும் இந்தியா ஹாக்கியில் வெற்றிபெற வேண்டுமென்பது தான் எங்கள் ஆசை" என்று கூறினன். பின்னிஷ்காரர்கள் நன்ருகச் சாப்பிடுவார்கள். தயிர் சாப்பிடுவதிலே அவர்களுக்குப் பிரிய மதிகம். தயிருக்கு பின்னிஷ் பாஷையில் 'வீலி' என்று பெயர். தயிரே ஒரு ஆகாரம் போல, தயிருடன் சர்க்கரை இஞ்சி முதலியவைகளைச் சாப்பிடுவார்கள்.

கோடை காலத்தில் பின்லந்தில் சூரியன் காலையில் ஒரு மணிக்கே உதயமாகிவிடும். இரவு 11-மணிக்குத் தான் அஸ்தமிக்கும். இரவு 12-மணிக்கும் கூட போதுமான வெளிச்சம் இருக்கும். அந்த வெளிச்சத்திலே சில சமயங்களில் புத்தகம் படிக்கலாம்; கடிதமும் எழுதலாம்.

பின்லந்தில் வீதிகளுக்குக் (Kattu) காட்டு என்று பெயர். ஒவ்வொரு இடத்திற்கும் இரண்டு பாஷைகளில் பெயர் இருக்கும். ஒன்று பின்னிஷ் மற்றென்று ஸ்வீடிஷ். ஹெல்சிங்கி என்பது பின்னிஷ். ஹெல்சிஸ் போர்ஸ் என்பது ஸ்வீடிஷ். அதைப்போல (Finland) பின்லாந்து என்று ஸ்வீடிஷ்காரர்கள் கூறுவர். பின்னிஷ்காரர்கள் (SUOMI) ஸ்வோமி என்று தங்கள் நாட்டை அழைக்கின்றுர்கள்.

பின்னிஷ் பாஷை உச்சரிக்க நன்ருக இருக்கும். சில வார்த்தைகளைப் பாருங்கள் :—

வந்தனம் = கீத்தோஸ்
அழகானது = கௌனிஸ்
நமஸ்காரம் = பெய்வா
ஒன்று = யுக்ஸ்
ஹோட்டல் = ஹோத்தேலி

இம்மாதிரி நான் கற்றுக்கொண்ட வார்த்தைகளைத் தப்பும் தவறுமாக உச்சரித்த பொழுது, அவர்கள் பரமானந்தம் அடைந்தனர்.

ஹெல்சிங்கியிலிருந்து வல்கியாகோஸ்கி (VALKEAKOSKI) எனும் இடத்திற்கு ரயிலில் சென்றேன். சுமார் 100 மைல். வல்கியாகோஸ்கி ஒரு சிறு கிராமம். இங்கு ஒரு பெரிய பேப்பர் மில் இருக்கிறது. ஹெல்சிங்கியிலுள்ள ஹோட்டல் மானேஜர் வல்கியாகோஸ்கியிலுள்ள ஒரே ஹோட்டலின் மானேஜரான தனது நண்பனுக்கு எனது வருகையைப்பற்றி டெலிபோன் செய்திருந்தார்.

ரயில் பிரயாணம் சுகமாக இருந்தது. நான் இருந்த கம்பார்ட்மெண்டில் சுமார் இருபது சாரணர்கள் பிரயாணம் செய்தனர். ஒருவன் (Autograph) ஆட்டோகிராப் புத்தகத்தை எடுத்தான். அவ்வளவு தான். அந்தக் கம்பார்ட்மெண்டிலிருந்த அத்தனை பேருக்கும் நான் அவர்கள் புத்தகங்களிலோ அல்லது காகிதங்களிலோ கையெழுத்துப் போடவேண்டி நேர்ந்தது.

வல்கியோகோஸ்கி ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஹோட்டல் மானேஜர் வந்திருந்தார். என்னைக் கண்டதும் புன்முறுவல் பூத்தார். அவர் பேசியது எனக்கு விளங்கவில்லை. நான் பேசியது அவருக்கு விளங்கவில்லை. ஆனல் நாங்களிருவரும் பேசிக்கொண்டே ஹோட்டலுக்குச் சென்ருேம்.

அப்பொழுது மாலை நேரம். வேலையை விட்டு வீட்டுக்குத் திரும்பும் நேரம். என்னைக் கண்டதும் ஹோட்டலைச் சுற்றிக் கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. அடிக்கடி பால்கனிக்கு வந்து காட்சியளித்தேன். என்ருலும் பிரயோஜனப்படவில்லை அன்னியன் ஒருவன் வந்திருக்கும் செய்தி மிக விரைவாகப் பரவிற்று.

நான் தங்கியிருந்த ஹோட்டலில் நான் ஒருவன் தான். மானேஜரும் ஒருவர் தான். அவர் தான் மானேஜர். அவர் தான் பட்லர்; அவர் தான் போர்ட்டர். நான் பேசியது ஒன்றுமே அவருக்கு விளங்கவில்லை. எனவே ஹெல்சிங்கிக்கு டெலிபோன் செய்தேன். எனக்கு என்ன வேண்டுமென்பதை ஹெல்சிங்கி ஹோட்டல் மானேஜர், இந்த வல்கியாகோஸ்கி மானேஜருக்கு பின்னிஷ் பாஷையில் கூறுவார். இப்படியிருந்தது எனது நிலைமை.

மறுநாள் காலை அங்குள்ள பெரிய பேப்பர் மில்லுக்குச் சென்றேன். அங்கு இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்கள் மிக நன்ருக ஆங்கிலம் பேசினர். ஒரு இந்தியன் தங்கள் பேப்பர் மில்லுக்கு வரக்கூடுமென்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லையாம்.

பேப்பர் மில் மிகப் பெரியது. 3,500 பேர் வேலை செய்கிருர்கள். இதனைப் பார்வையிட்டதும் மோட்டார் பஸ்ஸில் சுமார் மூன்று மணி நேரம் வல்கியாகோஸ்கியின் சுற்றுப்புறக் காட்சிகளைக் காண்பித்தனர். பிறகு அவர்களுடைய

(219-ம் பக்கம் பார்க்க)

பெண்கள் மூலம் சுயராஜ்யம்

சட்டமறுப்பிற்கு இன்றியமையாத ஓர் நிபந்தனை ராட்டுச் சுற்றுவதாயிருக்க வேண்டுமெனச் சமீபத்தில் காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறது. அதன் மூலம் பல பெண்கள் தேசசேவை புரியும் அரிய வாய்ப்பைப் பெறுகின்றார்கள். உப்புப் போராட்டம் எத்தனையோ ஆயிரக்கணக்கான பெண்மணிகளை அவர்தம் மறைவிடங்களிலிருந்து இழுத்ததுண்டு; எனவே அதுகாலை ஆடவருக்குச் சமமாகத் தொண்டு புரியும் சந்தர்ப்பத்தை அரிவையர் பெற்றார்கள். பல கிராமப் பெண்கட்கு எக்காலமும் காணமுடியாத கௌரவம் கிடைத்தது. உண்மையாகவே ஏகாதிபத்யப் பிணைப்பிலிருந்து தாய்நாட்டை விடுவிக்கும் ஓர் போராட்டத்தில் நூல் நூற்றலுக்குரிய ஸ்தானத்தை வழங்குவது பெண்கட்கோர் அந்தஸ்தைத் தருவதாகும். நூற்றற்றொழிலில் ஆண்களைவிடப் பெண்கட்கு சில வசதிகளுளதென்பது மறுக்க முடியாத உண்மை.

உலகம் தோன்றிய நாள்தொட்டு ஆடவர் பெண்டிராகிய இரு பாலாருக்கும் தனித்தனி வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. மேனாட்டில் ஆதாம் நெசவு செய்தான்; ஏவாள் நூல் நூற்றாள். அந்த வித்யாசம் இன்றளவும் ஒழிந்தபாடில்லை. தற்காலத்தில் சில ஆடவர் ராட்டுச் சுற்றுகின்றார்களென்றால் அது ஒரு புறநடையேயாகும். 1920-21ல் நான் பாஞ்சால மாகாணத்தவரிடம் நூல் நூற்குமாறு வேண்டிக்கொண்ட போது அவர்கள், புருஷர் நூல் நூற்பது கௌரவக் குறைவென்றும், அது பெண்கட்கே உரிய தொழிலென்றும் விடைதந்தனர். ஆனால் இந்நாளையில் எந்தப் புருஷனும் நூற்பதை ஓர் கேவலத்தொழில் என்று கருதுவதில்லை. எத்தனையோ ஆயிரவர் தியாகமென எண்ணி ராட்டுச் சுற்றுவதை அறிவேன். அவ்வாறு ஆடவர் கையில் ராட்டுப் புகுந்ததனால் தான் அதற்கு விஞ்ஞானத்தன்மை சூட்டப்பட்டது; புதிய திருத்தங்களும் உதயமாயின. ஆனால் நமது அனுபவ முதிர்ச்சியால் நூற்றல் தொழில் மங்கையர் கடமையாய்த் தானிருக்க வேண்டுமென்று தெரிந்து கொள்கிறோம். இவ்வாறான முடிவுக்குவர வேறு நல்ல காரணங்களுள. நூற்பதென்பது அமைதியாகவும் சாந்தமாகவும் நடைபெறவேண்டிய வேலையாகும். பெண்கள் தியாகத்தின் தனிவடிவம். எனவே சாத்வீக வாடை அவர்களிடம் வீசுகின்றது. அவர்கள் ஏற்றுக்கொள்ளும் எத்தொழிலும் போராட்டத்திற்கிடமாயிராமல் சாத்வீகத்தை உறுதி செய்வதாயிருக்கவேண்டும். நவீன நாகரிகத்தின் பயனாய் நாரியர் பலாத்காரப் போராட்டத்துக் கிழுக்கப்படுகின்றார்களென்பது உண்மை. ஆனால் அது நாகரீகத்துக்கு நலன் செய்வதாகாது. பலாத்காரம் பெண்ணியற்கைக்கு முற்றிலும் முரணானது. நாளடைவில் நவீனப் போக்கிலிருந்து பெண்ணுலகம் புரட்சிசெய்து வெளிக்கிளம்புமென்று நினைக்கிறேன். ஆடவரும் தாம்செய்த பெருந்தவறுக்காகப் பச்சாதாபப்படும் காலம் வரும். பால் சமத்துவ (ஆண் பெண் சமத்துவ)மென்பதால் தொழில் சமத்துவ மேற்படவேண்டுமென்று பொருளில்லை. பெண்ணொருத்தி வேட்டையாடுவதிலோ வேலாயுதத்தைச் சுழற்றுவதிலோ சட்டப்படி ஆக்ஷேபணையில்லாமலிருக்கலாம். ஆனால் உணர்ச்சிவழி நின்று பார்த்தால் அவள் புருஷனுக்குகந்த ஓர் தொழிலையே மேற்கொள்கிறாள். இயற்கைத் தாய் ஆடவரையும் பெண்டிரையும் ஒருவர் குறையை மற்றவர் நிரப்பும் முறையில் சிருஷ்டித்திருக்கிறாள். அம் மனிதரும் தத்தம் சரீர இயற்கைக்கொத்த கருமங்களையே மேற்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அதிகமான சாட்சியங்களை எடுத்துக்கூற வேண்டாமென்று நினைக்கிறேன். நமது நாட்டில் லட்சக்கணக்கான பெண்கள் நூற்றல் தொழில் தங்கட்குத்தானுரியது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் காரியக் கமிட்டியின் தீர்மானம் ஆடவரிடமிருக்கும் ஒரு சுமையைப் பெண்களிடம் மாற்றிவைத்து, அவர்களின் ஆர்வத்தைப் பரிசோதிப்பதாகும். எனது எதிர்கால சேனையில் ஆடவரைவிடப் பெண்கள் மல்கியிருக்க விரும்புகிறேன். போராட்டகாலத்தில், ஆடவர் தொகை மல்கியிருந்தால் எவ்வளவு ஆர்வத்துடன் அவர்கள் ஒத்தாசையை நாடுவேனோ, அதைவிட மிகுந்த குதூகலத்தோடு அப்பெண்கள் பெருகிய ஓர் சேனையை விரும்புவேன். ஆடவன் பலாத்காரகுணம் என்னை அச்சுறுத்துகிறது. பெண்கள் நிச்சயமாகச் சாத்வீகத்துக்கு உறுதி நிற்பார்கள் என்பது என் நம்பிக்கை.

—ஹரிஜன்: (டிசம்பர் 2, 1939)

புதிய தமிழ் இலக்கணம்

7. ஆய்தம் (ஃ)

கந்தப்புலவர் எப்போதும் இலக்கணமாகப் பேசுவார். ஒருநாள் தமது **எஃ**குப் பேனாவால் திண்ணையில் எழுதிக்கொண்டிருந்தார். உள்ளே '**இஃ, பஃ**' என்று சத்தம் கேட்டது. ஓடினார் புலவர். மனைவி அரிசி தீட்டிக்கொண்டிருந்தாள். "பெண்ணே ஒன்**பஃ**து தடவை சொன்னேனே, ஆய்தம் குறிலுக்குப் பின்னும், வல்லின உயிர் மெய்க்கு முன்னும் வருமென்று. மீண்டும் '**இஃ பார்**' என்று **அஃக** வுரைத்ததேனோ? **இஃ**கு, **பஃ**கு, என்று சொல்" என்றார். "**அஃ**துண்மை உலக்கைக்கு இலக்கணந் தெரியுமா?" என்றாள் மனைவி.

இக்கதையில் வரும் ஆய்த எழுத்தைக் கவனி. ஃ சூலவடிவா யிருப்பதால் ஆய்தம் என்பர்; அது தமிழுக்கு ஒரு ஆயுதம் போன்றது. அதனால் பல புதிய ஒலிகளை ஆக்கலாம். உதாரணமாக,

ஃஅ = ஹ
ஃப் = F
ஃஜ = Z
ஃக = ஃக (உருது)

(இதைப்பற்றித் "தமிழ் எழுத்தின் தனிப் பெருமை" என்னும் நூலில் விரிவாகக் காண்க).

ஒரு குறில், ஒரு வல்லின வுயிர்மெய் இரண்டிற்கும் இடையே ஆய்தம்வரும். க ச ட த ப ற, இவை வல்லின உயிர்மெய். உதாரணம் : அஃது, எஃகு, கஃசு, (ஒரு எடையளவு), பஃறி (ஓடம்), பஃறுளி ஆறு.

ஆயுத எழுத்தை முப்புள்ளி, தனிநிலை என்றும் சொல்லுவர்.

8. இன எழுத்துக்கள்

நீ, உன் அண்ணன், தம்பி, மாமா, எல்லாரும் ஒரு இனம். இனத்தாரெல்லாரும் ஒருவருக்கொருவர் உதவவேண்டும். அன்பாயிருக்க வேண்டும். தமிழரெல்லாரும் ஒரே இனத்தார். ஏனென்றால் எல்லாரும் தமிழ்த் தாயின் பிள்ளைகள், தமிழே பேசுவோர். இதே மாதிரி எழுத்துக்களிலும் இனம் உண்டு. பிறக்கும் இடம், உச்சரிக்கும் முயற்சி, அளவு, பொருள், உருவம் இவற்றில் ஒத்த எழுத்துக்களை இனஎழுத்து என்பர்.

அஆ; இஈ; உஊ; எஏ; **ஐஇ**; ஒஓ; **ஔஉ** (இவை ஒலியால் இனமானவை) கங; சஞ; டண; தந; பம; றன (இவை வல்லின மெல்லின இனம்) இவை இவ்விரண்டு ஒரே இனமாக வருகின்றன. இவை இனஎழுத்துக்கள். இடையினம் ஆறும் ஒரே இனம்.

ஐ = அ + இ, ஔ = அ + உ. ஐக்குஇ, ஔக்குஉ இனவெழுத்தாம்.

9. உச்சரிப்பு

எழுத்துக்களை அழுத்தந் திருத்தமாக உச்சரிக்க வேண்டும். தாராளமாக மூச்சு வாங்கிப் பேசவேண்டும். ஒரு புல்லாங்குழலில் பாடகன் விடும் மூச்சுப் புகுந்து ஏழு ஓட்டைகள் வழியே புகுந்து பாட்டாகிறது. இப்போது உன் மூக்கை அழுத்திப் பிடிக்கிறேன். பேசு; 'னொன ஞொண' என்று பேசுகிறாய். வாயையும் அடைக்கிறேன். உன்னால் பேச முடியவில்லை. ஏன்? மூச்சுப்போக வழியில்லை. நாம் எப்படிப் பேசுகிறோம்? கவனி. முதலில் உள்ளிருந்து மூச்சுக் கிளம்புகிறது. அது, மார்பு, கழுத்து, மூக்கு, மண்டை ஆகிய நான்கு இடத்திலும் தாக்குகிறது. உதடு, நாக்கு, பல், மேல்வாய் இந்த நான்கு உறுப்புக்களும் அம்மூச்சினால் எழுத்துக்களை உச்சரிக்கின்றன. எந்தெந்த எழுத்து எங்கெங்கே பிறக்கின்றது என்று சொல்லுகிறேன்; உச்சரித்துச் சரிபார்!

1. **உயிரெழுத்தும் இடையின மெய்யெழுத்தும்** கழுத்தில் பிறக்கும்.
2. **மெல்லினம்** மூக்கில்; "
3. **வல்லினம்** மார்பில் "
4. **அ, ஆ** அங்காத்தலால் "

5.	இ, ஈ, எ, ஏ, ஐ	அங்காந்து, அடிநாவிளிம்பு மேல்வாய்ப் பல்லைப்பொருந்தலால்
6.	உ, ஊ, ஒ, ஓ, ஔ	உதடு குவிதலால்
7.	க ங	அடிநாக்கு மேல்வாயடியைச் சேர்தலால்
8.	ச ஞ	நடுநாக்கு மேல்வாயை நடுவைச் சேர்தலால்
9.	ட ண	நுனிநாக்கு மேல்வாய்க் கடையைச் சேர்வதால்
10.	த ந	நுனிநாக்கு மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருந்தி
11.	ப ம	மேலுதடும் கீழுதடும் பொருந்தி
12.	ய	அடிநா மேல்வாயடியைப் பொருந்தி
13.	ர ழ	மேல்வாயை நா நுனி வருட
14.	ல ள	மேல்வாய்ப் பல்லின் அடி, மேல்வாய் இரண்டையும் நாவிளிம்பு தடித்துப் பொருந்தித் தடவுதலால்
15.	வ	மேல்வாய்ப் பல்லைக் கீழ்உதடு பொருந்தி
16.	ற ன	மேல்வாயை நுனிநாக்கு நன்றாகப் பொருந்தி
17.	ஃ	அங்காத்தலால் தலையில்

சார்பெழுத்துக்கள் தமது முதலெழுத்துக்களை ஒத்திருக்கும். குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும், நடுத்தரமாகவும் உச்சரிக்கலாம். அப்போது ஓர் எழுத்தே சிறிது வேறாக உச்சரிக்கும். உதாரணம்: தந்தது, கங்கணம்.

அடியில் வரும் வாக்கியங்களைத் திருத்தமாக உச்சரி :—

தமிழ் நாட்டில் அறப்போர் நடக்கிறது; போர்ப்பறை முழங்குகிறது; 'விர்விற்' என்று கணைகள் பறக்கின்றன. 'சட சட' வென்று ஈட்டிகள் பொருதுகின்றன. வீர மைந்தர் வீறுகொண்டு போரில் முன்னேறுகின்றனர். வீரத்தாய்மார் தம் மைந்தர் நாட்டிற்காகச் சமர் புரிவதை விரும்புகின்றனர். கோழைகளை வெறுக்கின்றனர். ஒரு வீரத்தாய் நேற்றே தன் கணவனைப் போரில் இழந்தாள். எனினும் தனது ஒரே மகனைத் தலைவாரி முடித்துக் கையில் வாளீந்து "மகனே களஞ் செல்; செய் போர்" என்று அனுப்புகிறாள். வீரமகன் தாயின் ஆசிபெற்று நாட்டுக்காகப் போர் புரிகிறான்.

10. போலி (Resemblant)

காவூரில் **போலிக்**கதர் நடமாடியது. அதை ஒழிக்கக் குஞ்சன் "சுத்தக் கதர் நெய்வேன்" என்றான். போன **நா**யிற்றுக்கிழமை தான் அவன் அணிகலனை **வைச்சு** ஐந்நூறு ரூபாய் **கடம்** வாங்கி நெசவுத் தறி **வைச்சா**ன். அதற்காக வாசல் மதி**லை** ஒட்டி ஒரு பந்தர் அமைத்தான். அஞ்சு நாளைக்கெல்லாம் செதிள் பிடித்துக் கம்பரில் சிகப்பு மண்ணேறியது. குஞ்சன், "பசலே, துடைப்பங் கொண்டா செதிளை நசுக்குவோம்" என்று தன் மகனைக் கூப்பிட்டான். மகன் துடைப்பமும், முறனும் எடுத்து வந்து "அப்பா, உயிர்களை நசுக்க வேண்டாம்; பாவம். இதோ இந்த முறத்தில் செதிளைப் பிடித்து அதோ கற்றாழையில் கொண்டு கொட்டி விடுகிறேன்" என்றான். "நசுக்காவிட்டால் மறுபடி வருமடா பயலே" என்றான் குஞ்சன். "குழந்தை சொல்லுவதே நியாயம். உயிர்களைக் கொல்லக் கூடாது. நிலனைக் கெட்டியாகப் பூசித்து கம்பரில் தாரும் அடித்தால் செதிள் வராது" என்றாள் மனைவி. "ஆம் அஹிம்ஸா தர்மம் கதரணிக்கு அவசியம்" என்றான் குஞ்சன்.

இக் கதையில் சில வார்த்தைகளை எழுத்து மாறி உச்சரிக்கிறோம். உதாரணமாக ஐந்தை அஞ்சு, மதிலை மதிள், ஞாயிறை நாயிறு, பந்தலை பந்தர், பையலை பயல் என்கிறோம். சாதாரணமாகப் பேசும்போது பந்தர் பந்தல் இரண்டிற்கும் பொருள் ஒன்றே. ஆனால் "ல்" "ர்" ஆனது. ஒரு எழுத்தைப் போல இன்னோரெழுத்து வந்தது. இப்படி வருவதற்குப் 'போலி' என்று பெயர். ஒன்றைப்போல வருவது போலி. குழந்தை அப்பா **போலிக்**கையாயிருக்கிறான் என்கிறோம். இது நல்ல கதரில்லை. **போலிக்** கதர் என்கிறோம். **போலிகளைக்** கண்டு ஏமாறக் கூடாது என்கிறோம். இப்போது பருத்தி நூலாலே நெய்ததைக் கொண்டு போலிப் பட்டு செய்கிறார்கள். இதேமாதிரி சொற்களிலும் போலிகள் உண்டு. இப்போலிகள் மொழியின் முதலிலும் வரும், நடுவிலும் வரும், முடிவிலும் வரும்.

இந்த அட்டவணையில் போலி எழுத்துக்களை உதாரணத்துடன் குறிக்கிறேன்.

போலி மொழி	சரியான மொழி	போலி எழுத்து	சரியான எழுத்து	விதி
கடை				
நிலன்	நிலம்	ன்	ம்	அஃறிணைப் பெயர் இறுதியில் ம-வுக்கு ன போலியானது
பந்தர்	பந்தல்	ர்	ல்	,, ,, ,, ல ,, ர ,,
மதிள்	மதில்	ள்	ல்	,, ,, ,, ல ,, ள ,,
சுரும்பர்	சுரும்பு	அர்	பு	,, ,, ,, உ ,, அர் ,,
இடை				
ஐஞ்ஞூறு	ஐந்நூறு	ஞ்	ந	ஐ-க்குப்பின் வந்த ந ,, ஞ ,,
செய்ஞலூர்	சேய்நலூர்	ஞ	ந	ய ,, ,, ந ,, ஞ ,,
நேயம்	நேசம்	ச	ய	,, ,, ய ,, ச ,,
கயம்	கசம்	ச	ய	ய ,, ச ,,
அஞ்சு	ஐந்து	ஞ்சு	ந்து	ந, த ,, ஞச ,,
பித்து	பிச்சு	த்து	ச்சு	த ,, ச ,,
அரைசு	அரசு	ரை	ர	ச-முன் அ ,, ஐ ,,
அரையர்	அரயர்	ரை	ர	ய-முன் அ ,, ஐ ,,
இலஞ்சி	இலஞ்சி	லை	ல	ஞ ,, அ ,, ஐ ,,
பழைமை	பழமை	ழை	ழ	அ ,, ஐ ,,
இளைமை	இளமை	ளை	ள	அ ,, ஐ ,,
குசவன்	குயவன்	ச	ய	ய ,, ச ,,
சிகப்பு	சிவப்பு	க	வ	வ ,, க ,,
நாயிறு	ஞாயிறு	நா	ஞா	ய முன் ஞ ,, ந ,,
பயல்	பையல்	ப	பை	,, ஐ ,, அ ,,
மைஞ்சு	மஞ்சு	மை	ம	ஞ ,, அ ,, ஐ ,,
பைசல்	பசல்	பை	ப	ச அ ,, ஐ ,,

கலியாணப் பந்தரில் அஞ்சு பசல்கள் நிலன் அதிரக் கம்பரைச் சுற்றிச் சுற்றி விளையாடுகிறார்கள். இவ்வாக்கியத்திலுள்ள போலிகளுக்குச் சரியான மொழிகளைச் சொல்லு.

(215-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளப்பில் ஒரு விருந்தளித்தனர். காந்தியடிகளைப் பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும், பக்கிரிகளைப் பற்றியும் ரசமான கேள்விகள் கேட்டனர். பழமையான நாகரிகமுடைய இந்திய நாடு விரைவில் சுதந்தரம் பெறத் தாங்கள் பிரார்த்திப்பதாகக் கூறினர்.

வல்கியாகோஸ்கி வாழ்க்கை எனக்கு மிக உற்சாகமாயிருந்தது. பின்லந்தை விட்டு வரும் பொழுது எனக்கு உண்மையிலேயே வருத்தந்தான். தங்களின் சுதந்தரத்திற்காகப் போராடும் வீரம் நிறைந்த பின்லாந்து வெற்றி பெற நாம் பிரார்த்திப்போம்.

சூரியன்

(தினகரன்)

நட்சத்திரக் கூட்டங்கள் வானில் பவனி சென்று சென்று மறைகின்றன. காலை $5\frac{1}{2}$ மணி வரைக்கும் இப்பவனி நடக்கிறது. பிறகு கிழக்கு வெளுக்கிறது. உலகம் ஒருபுதிய மகிழ்வுடன் விழித்தெழுவதைக் காண்கிறோம். மந்தமாருதம் வீசுகிறது; அதில் ஒரு இனிய மணம் கலந்து வருகிறது. காலைமலர்கள் மணமணக்கின்றன. அம் மலர்களில் வண்டுகள் பாடிக்கொண்டே தேன் சேர்க்கின்றன. அவற்றைப் போலவே நாமும் மகிழ்வுடன் வேலை செய்யவேண்டும். நான்கு மணிக்கெல்லாம் கோழி கூவுகிறது. 'பொழுது புலர்ந்தது' என்று. உலகம் காலை நம்மைச் சுற்றியுள்ள செடி கொடி மரங்கள், மலர்கள், கனிகள், வயல்கள், பசுக்கள், குழந்தை முகம்—எல்லாம் புதிய அழகுபெற்று விளங்குகின்றன. புட்கள் எவ்வளவு மகிழ்வுடன் இங்கு மங்கும் "ஜிவ்" என்று தாவிப்பறந்து கலகல வென்று தமது மொழியில் பேசுகின்றன. நம்மிடையே அந்தமாதிரி அன்பும் நட்பும் இருக்க வேண்டும். இடையர்கள் புல்லாங்குழல் ஊதுகின்றனர். பசு வளர்க்கும் வீடுகளினின்று மத்தோசை வருகிறது. குழந்தைகள் எழுந்து மழலை பேசுகின்றன. கன்றுகள் "ஹம்மா" என்று கூவித் தாயிடம் துள்ளி வருகின்றன. தாய் தனதுசேயைப் பிரியமுடன் கொஞ்சிப் பால் கொடுக்கிறது. விவசாயிகள் வயலில் வேலைசெய்கின்றனர். தோட்டக்காரர் ஏற்ற மிறைக்கின்றனர். கடவுளன்பர் பஜனை செய்கின்றனர். பாடகர் அகாரசாதனம் செய்கின்றனர். கோயில்மணி யடிக்கிறது. காலைவழிபாடு நடக்கிறது. அடியார் பாடுகின்றனர். வீடுகளில் தாய்மார் அவரவருக்குத் தெரிந்த பாட்டைப் பாடிக்கொண்டே சுற்றுக் காரியம் பார்க்கின்றனர். உலகம் நாதமயமாகிறது. சிலர் குளிக்கச் செல்கின்றனர். ஆறு குளங்களிலெல்லாம் "தொப் தொப்" என்று வேட்டி புடவை துவைக்கும் சத்தமும், ஜனங்கள் குளிக்கும் சலசலப்பும் கேட்கின்றன. சிலர் குளித்துப் பூசி அதோ! உட்கார்ந்து ஜபம் செய்கின்றனர். ஆ! அந்த ஆசாரசீலரின் காட்சி எவ்வளவு அழகா யிருக்கிறது.

கமலங்கள் மட்டும் இன்னும் குவிந்துள்ளன. அருணோதய மாகிறது; கிழக்குவான் பொன்னிறமாகிறது; செந்நிறமாகிறது. அந்தக் காட்சி மனத்திற்குச் சாந்த மளிக்கிறது. பிறகு ஒரு பெரிய சென்னிறப் பந்துபோல் சூரியன் உதிக்கிறான். மெல்ல மெல்ல ஆகாயத்தில் ஏறுகிறான். மேலே செல்லச் செல்லச் செந்நிறம் வெண்ணிறமாகிறது. அவன் கதிர் பரவுகிறது. தாமரை மலர்கிறது; உலகெல்லாம் அவனை வரவேற்கிறது. அவனாலேதான் உலகம் நடக்கிறது. உலகை மேல்பார்த்து, அதன் வாழ்விற்கு வேண்டியதெல்லாம் தரும் கருணை மன்னன்போலக் கதிரவன் வருகிறான். அவனைக் கண்டதும் இரவு ஓடிப்போகிறது; நட்சத்திரங்கள் அவன் ஒளியில் மங்கி மறைகின்றன.

இக்கதிரவனைப் பார்க்கப்பார்க்க நமக்கு அன்பும், நன்றியும், வியப்பும் அதிகரிக்கின்றன. கதிரவனை நாம் கடவுளின் பிரதிநிதியாக வணங்குவோம். அவனின்றி உலகில்லை. எல்லை யில்லா வானில், 12 மணிநேரம் நடக்கும் இந்த மௌனச் சுடரொளியே உலகை வாழ்விக்கிறது. அணுகமுடியாத உயரத்தில், சாட்சியா யிருந்து, கதிர்களை வீசி உலகைக் காக்கும் இவ்வொளியை வணங்குவாம். நமது உடலில் உயிர்க்கனல் இருப்பது அவனாலேதான். அவன் தனது சூடான கதிர்களால் கடல்நீரை ஆவியாக்குகிறான். கடலாவி மேகமாகிறது; குளிர் காற்றுப்பட்டதும் மேகம் மழைபெய்கிறது. அந்த மழையால் மண் வளம்பெற்றுப் பயிர் வளர்கிறது; பயிர்களுக்கு நிறமும், வெப்பமும் அளிப்பவன் சூரியனே. அவன் ஒளியில்லாமல் பயிர் வளராது. பயிரை உண்டு உயிர்கள் ஓங்குகின்றன. சூரியன்—தந்தை; மழை—தாய்; இரண்டும் சேர்ந்து நில மகளை வளர்க்கின்றன. சூரியன் காலச்சக்கரம். அவனாலேதான் பருவ காலங்கள் உண்டாகின்றன. உலகின் நடுப்பாகத்தில் வெப்பம் அதிகம்; வடக்கும் தெற்கும் போகப்போகச் சூடு மந்தமாய்க் குளிர் அதிகரிக்கும். எல்லாம் பூகோளத்தில் இரவிக்கதிர் பரவும் வேறுபாட்டால் உண்டாவன. தனது கவர்ச்சித் திறனால் சூரியனே பூகோளத்தைத் தாங்குகிறான். பூமி சூரியனைச் சுற்றிவருகிறது. சூரியனை உலகின் மௌனச் சிற்பி என்னலாம். பகலெல்லாம் உலகைக் காத்து, உடல் சிவந்து சூரியன் அஸ்தமிக்கிறான். உலகை இருள் மூடுகிறது. அச்சமயம் மறைந்த

சூரியன் தனது நண்பனை அனுப்புவதுபோலச் சந்திரன் உதிக்கிறான். சூரியனிடமிருந்தே சந்திரனுக்கு ஒளிவருகிறது. சூரியன் உலகின் உயிர், உலகின் காவலன்.

சூரியன் நமக்கு ஒரு வெள்ளித் தட்டுபோலத் தோன்றுகிறது; ஒரு குடையினால் அதை மறைக்கிறோம். இயல்பாகச் சூரியன் மிகப் பெரிது. ஒரு பெரிய மாதுளம்பழம் சூரியனானால் பூமி ஒரு முத்தைவிடச்சிறியதாகும். ஒருகடுகிற்கும் பெரிய நாரத்தம் பழத்திற்கும் பருமனில் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ளது. சூரியன் பூமியைவிட 12,80,000 கன அளவிற் பெரிது. அதன் குறுக்களவு 8,60,000 மைல். மிகத் தொலைவிலுள்ள பொருள்களைப் பார்க்கத் '**தொலைநோக்கி**'(Telescope) என்னும் ஒரு கருவி யுள்ளது. அதனால் பார்த்தால் சூரியன் கரடுமுரடாகத் தெரிகிறது. சூரியனில் கறுப்புப் புள்ளிகளிருக்கின்றன. இப்புள்ளிகள் அடிக்கடி மாறும். 17,000,000 ஆண்டுகளுக்குப் பிறகு சூரியன் வடிவிற் குறைந்து சூடணைந்து, குளிர்ந்துபோகும்; பிறகு உலகமும் அற்றுப்போகும். உயிரேயிராது என்று ஹெல்மோல்த் (Helmholtz) என்னும் ஜெர்மன் பூதநூலறிஞர் கூறுகிறார். 60,00,000 ஆண்டுகளே உலகில் மனிதவர்க்கம் வாழு மென்கின்றனர் ஆராய்ச்சியாளர். அதற்குள் பூமி மிகவும் குளிர்ந்து போகுமாம்.

சூரியன் ஒருபெரிய நெருப்புருண்டை. அதன் ஓரங்கள் மிகப் பிரகாசமானவை. 9,300 மைல் உயரத்திற்கு ஒரு வட்டத் தீக் கொழுந்தோங்கி எரிவதுபோன்றதுசூரியன். சூரியன்சூடு 7000°C சூரிய உஷ்ணத்தில் $\frac{1}{2000000}$ தான் நமக்கு வருகிறது. விநாடிக்கு 1,86,000 மைல் போகும் ஒளி 8 நிமிஷம் 17விநாடியில் பூமிக்கு வருகிறது. சூரியனைச் சுற்றி ஒளிமிகுந்த ஆவிப்படலம் சூழ்ந்துள்ளது. பூமியினின்று சூரியன் 9,29,00,000 மைல் தூரம் இருக்கிறது. சூரியனும் ஒரு நட்சத்திரமே. நமக்கு அதுவே அருகில் உள்ளது. அதனாலேதான் மற்ற நட்சத்திரங்களைவிட அது சற்றுப் பெரிதாகத் தோன்றுகின்றது. சூரியனுக்கு அடுத்த நட்சத்திரம் நமது பூமியிலிருந்து 250,000,00,000 மைல்கள் உள்ளது. மற்ற நட்சத்திரங்கள் இதைவிடப் பல மடங்கு அதிக தூரத்தில் உள்ளன. அதனாலேதான் அவை சிறியதாகக் காண்கின்றன.

கிரகங்கள்

சூரியன் காந்தசக்தி யுள்ளது. அதன் கவர்ச்சியால் ஒன்பது கிரகங்கள் அதைச் சுற்றி ஓடுகின்றன. அவையாவன:—புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்த்யூன், புளூடோ (Pluto). 1781-ம் ஆண்டு யூரானஸையும், 1846-ல் நெப்த்யூனையும் கண்டுபிடித்தனர். புளூடோ என்னும் கிரகத்தை 1930-ஆம்ஆண்டே கண்டுபிடித்தனர். நமது முன்னோர்கள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய நவக்கிரகங்களைக் கொண்டு சோதிடம் பார்க்கின்றனர். நாம் காணமுடியாத எத்தனையோ கிரகங்கள் உள்ளன. தற்காலம் பெரிய தொலைநோக்கிகளால் வானொளிகளை ஆராய்கின்றனர். சூரியனைப் பார்க்கக் கறுங்கண்ணாடி யிணைத்த தொலைநோக்கி யுள்ளது. ஒவ்வொரு கிரகத்தையும் சுற்றிவரும் உபக்கிரகங்களுண்டு. சந்திரன் பூமியைச் சுற்றிவரும் உபக்கிரகம். பெரிய பொருள் சிறிய பொருளைக் கவர்ந்திருக்கும். எல்லாக் கிரகங்களினும் சூரியன் பெரிது; அதன் கவர்ச்சியும் அதிகம். அதனாலேதான் எல்லாம் சூரியனைச் சுற்றிச் செல்கின்றன. சூரியனும் ககோளத்தில் ஒரு நட்சத்திரமே. அதுவும் அந்தரத்தில் சுழல்கிறது. அதன் பாதைக்குச் **சூரியவழி** (Ecliptic) என்பர். ஒவ்வொரு கிரகமும் தனது வழியே சூரியனைச் சுற்றுகிறது. அவ்வழியைக் கோளப்பாதை (Orbit) என்போம். கோள் = கிரகம். இக்கோள்கள் சூரியனிடமிருந்து ஒரே தூரத்திலில்லை; வெவ்வேறு தூரத்தில் உள்ளன. (1) சூரியனிடமிருந்து ஒவ்வொரு கிரகமும் எவ்வளவு தூரம் உள்ளது? (2) சூரியனை ஒவ்வொன்றும் எத்தனை நாட்களில் அல்லது எத்தனை ஆண்டுகளில் சுற்றிவரும்? (3) ஒவ்வொன்றிற்கும் எத்தனை சந்திரர் உண்டு? என்பதை அடியிலுள்ள அட்டவணையிற் காண்க:—

எண்	கிரகம்	தூரம் மைல்	சூரியனைச் சுற்றும் காலம்	சந்திரர்
1	புதன்	3,60,00,000	88 நாள்	,,
2	சுக்கிரன்	6,72,00,000	225 ,,	,,
3	பூமி	9,29,00,000	365¼ ,,	1
4	செவ்வாய்	14,15,00,000	687 ,,	2
6	வியாழன்	48,33,00,000	12 ஆண்டு	5
6	சனி	88,61,00,000	29½ ,,	8
7	யூரானஸ்	178,28,00,000	84 ,,	4
8	நெப்த்யூன்	279,35,00,000	165 ,,	1
9	புளூடோ	464,40,00,000	245 ,,	,,

நமது பூமி சூரியனைச் சுற்றும் ஒரு சிறு கோளம். பூமி சூரியனைச் சுற்றிச்செல்லும் வழி ஒரியவட்டாமனது (oval). அதனாற் சிலகாலம்

(மாசி) அது சூரியனுக்குச் சமீபத்திற்செல்லும்; அப்போது சூரியன் பெரிதாகத் தோன்றும். சில காலம் (ஆடி) தூரச்செல்லும். அப்போது சூரியன் சற்றே சிறுத்துத் தோன்றும். பூமியைவிடச் சூரியனுக்கு 28 மடங்கு கவர்ச்சி அதிகம். சூரியமண்டலத்தில் நிறுக்கும் பொருள் பூமியில் நிறுப்பதைவிட 28 மடங்கு அதிகக் கனமாயிருக்கும்.

கிரகங்களைப் பற்றி அடுத்த பாடத்தில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு கிரகத்தினின்றும் சூரியன் எவ்வளவு பெரிதாகத் தோன்றும் என்பதை இப்படத்திற் காண்க. (படம் 8)

சூரியனுக்கும் கிரகங்களுக்கும் உள்ள தூர அளவைப் படம் 9-ல் காண்க.



படம் 8. கிரகங்களினின்றும் காணும் சூரியன் அளவு.



படம் 9. சூரியனுக்கும் கிரகங்களுக்கும் உள்ள தூரம். விவரம் அட்டவணையிற் காண்க.

(234-ம் பக்கத் தொடர்ச்சி)

XVI. சாது முருகன்

தேனூரின் இயல்வளமும் ஜனங்களின் பக்தி சிரத்தையும் அவர் மனத்தைக் கவர்ந்தன. தேனூருக் கருகே ஒரு பெரிய திடல்; அதில் நெடுநாள் சாகுபடியில்லை; காரணம் முன்னொரு காலத்தில் அதில் கலப்பை நாட்டியவன் கண் போயிற்றாம். நமது சாமியார் அங்கே தான் ஊன்றிக் கொண்டார். தானே சுவரெடுத்து, கீற்றுக் குடிசை போட்டார். வருகிறவர்களுக்கு நன்மொழிகள் கூறி நல்லவழி காட்டினார். நோய்களைத் தீர்த்துச் சுகவழி சொன்னார். எல்லாரிடமும் அன்புடன் பேசினார். ஊரெல்லாம் அவரை நம்பி வழிபட்டன. அவர் ஒரு பள்ளிக் கூடம் ஏற்பாடு செய்தார். மனித தர்மத்தைப் போதித்தார். மேன்மேலும் அன்பர் பெருகினர். அவர்களைக் கொண்டு, ஒரு தோட்டம் போடத் தொடங்கினார். அந்தத் தோட்டத்தில் விளையும் தேங்காய், வாழை, காய் கனிகளே அவரது உணவு. அவருடன் இருந்த துறவிகளும் அவரையே பின்பற்றினர். சுமார் 1000 ஏக்கர் தர்காஸ்து வாங்கிக் கஞ்சிக்கில்லாத ஏழைகளை அங்கே குடியேற்றி அத்தனையும் பொன்னும் பச்சையும் குலுங்கச் செய்தார் சாமியார். அவரைச் சுற்றி நாலுமைல் வட்டம் அருளாட்சி விளங்கிற்று. சுமார் 4000 அன்பர் யோக்கியமாக உழைத்துப் பிழைத்தனர். அவர்களுக்கெல்லாம் எழுதப் படிக்கத் தெரியும்; பெரியார் வாக்குகள் மனப்பாடம். பயிர், நெசவு, தச்சு, பானை சட்டி வனைதல்—முதலிய எதாயினும் பயனுள்ள தொழில்கள் தெரியும். அத்தனை பேர்களும் கைத் தொழிலிலும், கருத்தைக் கடவுளிடமும் வைத்தவர்கள். வாழ்வையே யோகமாக்கின துறவிகள்.

இவர்களிடையே தான் **முருகனைக்** காண்கின்றோம். அன்புச்சாமிக்கு அடுத்தபடி முருகனுக்குத்தான் அங்கே மரியாதை. முருகன் நாளெல்லாம் ஓயாது பாடுபடுவான்; இரவில் அன்புச்சாமியாரின் உபதேச மொழிகளை எல்லாருக்கும் எடுத்துச் சொல்லுவான். அன்புச்சாமியே தாய்தந்தை. அந்த அன்பு நிலயத்தில் இருப்பவர்களெல்லாம் அவன் சகோதரர். முருகனுக்கு அன்பே சாமி, அன்பே உலகம்; அன்பே பெற்றோர், அன்பே உற்றார், அன்பே உறவினர், அன்பே குரு; அன்பே மதம்; அன்பே தொழில்! அன்பே இன்பம்! **சாது முருகன்**—இதுவே அன்புச் சாமியார் அவனுக் கீந்தபெயர்.

தார்

வாசனைத் திரவியத்தின் தாய்

[ஸ்ரீ ல. காமேச்வர சர்மா, எம். ஏ. பி. எச். டி.]

தாரிலிருந்து ஆயிரக்கணக்கான வர்ணப் பொருள்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன என்று முன் கட்டுரையில் பார்த்தோம். வர்ணப் பொருள்கள் மாத்திரமல்லாமல், இன்னும் அநேக விதமான விசித்திர விளைவுகளை உண்டு பண்ணக்கூடிய பொருள்கள் அடங்கிய ஓர் பெரும் களஞ்சியம்போல் தார் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமான மருந்துகள் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். மருந்துகள் மனிதன் பிரமிக்கத்தக்க விளைவுகளை உண்டு பண்ணுகின்றன.

ஆப்ரிகா தேசத்தில் விசேஷமாக பாதித்து வரும் மஞ்சள் ஜுரத்தைத் (yellow fever) தணிப்பதற்கு தால்லின் (Thallin), கெய்ரின் (kairin) என்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளைத் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். இம்மருந்துகள் ஜுரத்தைத் தணிப்பதில் மிக உபயோகமாக இருந்தாலும் அவைகளே விஷத்தன்மையனவா யிருப்பதால், உடலுக்கு அவற்றால் பின் வரும் தீங்கு மஞ்சள் ஜுரத்தைக் காட்டிலும் கொடுமையாக இருக்கிறது. களைப்பைத் தீர்க்கவும், ஆழ்ந்த தூக்கத்தை உண்டுபண்ணவும் சல்ஃபொனால் (sulphonal) போன்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளும் தாரிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. இம்மருந்துகளுக்கு அதிசய விளைவுகளை உண்டுபண்ணக்கூடிய சக்தி இருந்தாலும், அவ்விளைவுகள் நிலைத்திருப்பதில்லை. அதனால் மனிதன் இடைவிடாது அம்மருந்துகளையே அண்டியிருக்க வேண்டி யிருக்கிறது. சாராயத்தைப்போல், இவைகளும்மனிதனைத்தங்களுக்கு அடிமையாக்கி பின் அவன் உய்யச் சிறிதும் சக்தி இல்லாதபடி செய்து விடுகின்றன. இம்மருந்துகளின் பின் விளைவுகள் இம்மாதிரி இருந்தும் ஏன் மனிதன் ஏராளமாக அவைகளை உபயோகிக்கிறான்? இதற்கு சாதாரண மனிதனின் அறிவின்மையும், மனப்பான்மையும்தான் காரணம். இம்மருந்துகளைத் தயாரித்து விளம்பரம் செய்பவர்கள் பண வரும்படியை உத்தேசித்து, இம்மருந்துகளின் பின்விளைவுகளைப் பற்றிச் சிறிதும் பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை. மேலும் மனிதனின் மனம் நோயினால் வரும் துன்பத்தை நியாயமான பரிகார முறைகளாகிய இயற்கை வழிகளில் தீர்த்துக்கொள்ள உடன்படுவதில்லை. பரிகார முறையை அனுஷ்டிப்பதால், காலதாமதமாவதோடு, மனிதன் இந்திரிய சுகங்களைச் சிறிது காலமாவது நாடாதிருக்க வேண்டியிருக்கின்றது. மேற்சொன்ன மருந்துகளைக் கையாளும் செயற்கை வைத்தியர்கள் பத்தியம் முதலான கட்டுப்பாடுகள் ஒன்றுமே இடுவதில்லை. கடுந் தலைவலி வந்தால், காபி ஆஸ்பரின் ஒரு பில்லை போட்டுக்கொண்டால் வலி உடனே நின்று விடுகின்றது. பட்டினி இருக்கவேண்டிய அவசியமே இல்லை, பத்தியமும் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. இம்மருந்துகளின் விஷத்தன்மையைப் பற்றித் தெரிந்திருந்தாலும் குடியனுக்குச் சாராயத்திலிருக்கும் மோகம் மாதிரி, மனிதனைத் திருப்பித், திருப்பி, அம்மருந்துகளையே நாடச் சொல்லும். இம்மருந்துகளைத் தயார் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இவைகளினால் பெரும் தனலாபம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மனித உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டமட்டில் அவைகள் மனிதன் செல்வத்தைப் பறிப்பதற்கான சாதனங்கள் என்றே கொள்ளவேண்டும். பொருட் செல்வம் போனால் பரவாயில்லை; ஆனால் சமூகத்தின் ஆரோக்கியம் என்ற மகத்தான செல்வம் போய் விட்டால், நாளடைவில் மனித வம்சமே அழிய நேரிடும். இம்மாதிரி மருந்துகளைத் தற்காலம், மனிதன் ஏராளமாக உபயோகித்து வந்தும் அவன் சீக்கிரம் அழிவதாகக் காணோம். இது தான் அதிசயிக்கத்தக்கது. இதற்கும் காரணம் உண்டு. அதைச் சொல்லப் புகுந்தால் விரியும்.

இனி, தார் வைத்தியத் துறையில் வேறு எந்தெந்த வழிகளில் உபயோகிக்கப் படுகின்றன என்று கவனிப்போம். உடலின் வெளிப்பாகங்களில் சஸ்த்ரப் பிரயோகம் செய்யும்பொழுது உடலில் வலி தெரியாமல் இருப்பதற்காக வைத்தியர்கள் ஸ்டோவெய்ன் (stovaine), கொக்கேய்ன் (cocaine), நொவோ கொக்கேய்ன்

(novo-cocaine) போன்ற மருந்துகளை உபயோகிக்கிறார்கள். இவைகளும் தாரிலிருந்தே தயார் செய்யப்படுகின்றன. ஒரு சிறுமிக்கு சஸ்த்ரப் பிரயோகத்தினால், வயிற்றில் சிறுகுடலும் பெருங்குடலும் சேரும் இடத்தில் உள்ள வெர்மிபாரம் அப்பெண்டிக்ஸ் (vermi form appendix) என்ற கருவியைப் பிரித்தெடுக்க வேண்டியிருந்ததாம். அவளுடைய உடல் நிலை அப்பொழுது க்ளோரோபாரம் (chloroform) கொடுக்கக் கூடியதாக இல்லையாம். இதற்காக அவளுடைய மேருதண்டத்தில், இடுப்பண்டை இருபது துளிகள் ஸ்டோவெய்ன் மருந்தை ஊசிமூலம் செலுத்தினார்களாம். பத்து நிமிடங்களில் மார்புக்குக் கீழே அவள் உணர்ச்சியை இழந்தாளாம். அவளுடைய உடலுக்குக் குறுக்கே ஒரு திரை வைத்து சஸ்த்ரப் பிரயோகம் செய்து முடித்தார்களாம். குழந்தை இது சமயம் பேசிக்கொண்டும், படித்துக்கொண்டும் இருந்தாளாம். தாரின் உதவி யில்லாவிட்டால் மேல் விவரித்தது போன்ற காரியங்களை மனிதனால் சாதித்திருக்க முடியாது. ஆனால் சஸ்த்ரப் பிரயோகமே அவசியமா, என்பதைக் கவனிக்க வேண்டும்.*

தற்காலத்தில் உடலிலிருந்து இரத்தம் வெளியாகாதபடி சஸ்த்ரப் பிரயோகம் செய்கிறார்கள். இதற்கு அட்ரினலின் (adrenaline) போன்ற வஸ்துக்களை உபயோகிக்கிறார்கள். இவைகளை ஊசிமூலம் உடலில் ஏற்றி விட்டால், எந்த இடத்தில் சஸ்த்ரப் பிரயோகம் செய்யவேண்டுமோ அப்பிரதேசத்திலிருந்தே இரத்தத்தை இம்மருந்தானது விரட்டிவிடுகின்றது. பின் இரத்த நஷ்டமில்லாமலே சஸ்த்ரப் பிரயோகம் செய்ய ஏதுவாகிறது. அட்ரினலின் மருந்தைக் கொஞ்சம் எடுத்து அதிக நீரில் கரைத்து அதில் ஒரு சொட்டைச் சிவந்திருக்கும் நீரில் தடவினால், உடனே அவ்விடம் வெளுத்துவிடும். இனித் தாரிலிருந்து கிடைக்கப்பெறும் பொருள்களில் முக்கியமாகிய சாக்கரினைப் பற்றிக் கவனிப்போம்.

சாக்கரின் (saccharine) என்பது உணவுப் பொருள்களுக்குத் தித்திப்பு ஊட்டக்கூடிய ஒரு செயற்கை வஸ்து. இது சாதாரண கரும்புச் சர்க்கரையைக் காட்டிலும் 500 மடங்கு தித்திப்பாக இருக்கக்கூடியது. வெள்ளையர் நாடுகளில் பழங்கள், தின்பண்டங்கள், ஜெல்லிகள், ஜாம்கள், இவைகள் போன்ற உணவுப்பொருள்களைக் கிருமிகள் அணுகாதபடி காப்பாற்றி வெகு தூரத்திலுள்ள நாடுகளுக்கு அனுப்ப இதை உபயோகிக்கிறார்கள். சாக்கரினுக்குப் பதிலாக சாதாரண சர்க்கரையை உபயோகித்தால் உணவுப்பொருள்கள் சீக்கிரம் கெட்டுவிடுகின்றன. ஒரு டன் சாதாரண சர்க்கரை உபயோகிக்க வேண்டிய இடத்தில் 4 பவுண்டு சாக்கரின் உபயோகித்தால் போதுமாம். சாக்கரின் தயார் செய்வதற்கும் அதிக செலவாவதில்லையாம். பெரும் வெளிச்சமானது எப்படிக் கண்ணிற்குச் சிறிது நேரம் பார்வையே இல்லாதிருக்கும்படி செய்கிறதோ அதே மாதிரி ஒரு துளி சாக்கரின் நாக்கில் பட்டால் நாக்கிற்குச் சுவைக்கும் சக்தியே சிறிது நேரம் இல்லாமலிருக்கிறது. இப்பேர்பட்ட சாக்கரின் ஃபால்பெர்க் (Fahlberg) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொருளின் சரித்திரமும் முன் கட்டுரையில் குறித்த 'மோவை'ப் போன்று ருசிகரமாக இருக்கும். அதை ஈண்டு தருவோம்.

ஒரு சமயம் ஃபால்பெர்க் (Fahlberg) என்ற இளைஞர், ஜான் ஹாப்கின்ஸ் சர்வகலாசாலையிலிருந்து (John Hopkin's University) ஐராரெம்ஸென் (Ira Remsen) என்ற நிபுணரின் மேற்பார்வையில் ஆராய்ச்சிகள் நடாத்திக்கொண்டிருந்தார். இவர் தாரிலிருந்து பிரித்தெடுக்கக் கூடிய பொருள்களைச் சோதனைக் குட்படுத்திக் கொண்டிருந்தார். ஃபால்பெர்க்காவது அவருடைய உபாத்தியாயராவது தங்கள் சோதனைகளின்பலனாக ஒரு பெரிய தொழில் கிளம்பும் என்று கனவிலும் நினைக்கவே இல்லை. அவர்கள் பொருள்களின் உண்மை நிலையை ஆராயவேண்டுமென்ற நோக்கத்துடனேயே உழைத்துவந்தார்கள். ஒரு நாள் ஃபால்பெர்க் சோதனைக் கூடத்தில் அதிக நேரம் உழைத்துவிட்டுத் தேநீர் அருந்த வீடு சென்றார். அச்சமயம் அவர் சாப்பிட்ட ரொட்டியும் வெண்ணையும் தித்திப்பாக இருந்தன. அவருக்குச்சாதாரணமாகத்தித்திப்புப் பண்டங்களை பிடிக்காது. தன் ஆகாரத்தில் தித்திப்பு எப்படி வந்ததென்று சமையற்காரியை அழைத்துக் கேட்டார். அவள் தான் சர்க்கரையொன்றும் ஆகாரத்தில் கலக்கவில்லை என்று சொன்னாள். பின் ஃபால்பெர்க் தன் கைகளையே சந்தேகித்து விரல்களை நக்கிப்பார்த்தார். அவைகள் சர்க்கரையைக் காட்டிலும் அநேக மடங்கு தித்திப்பாக இருந்தன. வெகு தித்திப்பான ஒரு ரசாயனப் பொருள் தன் கையில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அப்பொருள் அசாதாரணத் தித்திப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டு மென்றும் தீர்மானித்தார். சோதனைக் கூடத்தைவிட்டு வெளிவரும்போது

* இவ்விஷயம் தனிக் கட்டுரையில் விவரிக்கப்படும்.

தன் கைகளை நன்கு கழுவி இருந்தார். அப்படியிருந்தும் அப்பொருளினுடைய தித்திப்பின் வேகம் நிரம்பவும் அதிகமாக இருந்தது. ஃபால்பெர்க் பரபரப்போடு உடனே சோதனைக் கூடத்திற்குச் சென்றார்; அங்கு தான் உபயோகித்த கண்ணாடிச் சாமான்களையும் தட்டுகளையும் சுவைத்துப் பார்த்தார். கடைசியாக ஒரு பாத்திரத்தில் இருந்த பொருள் அதிகத் தித்திப்பாக இருந்தது. இம்மாதிரி சாக்கரின் கண்டுபிடிக்கப்பட்டது. சீக்கிரம் ஃபால்பெர்க் (fahlberg) சாக்கரினைப் பேரளவில் தயாரிப்பதற்காகத் தொழிற்சாலைகள் நிறுவினார். சிறிது காலத்திற்குள் இயற்கைச் சர்க்கரைத் தொழிலுக்கு ஆபத்து வந்தது. உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் உள்ள அரசாங்கத்தார்கள் செயற்கைச் சர்க்கரையாகிய சாக்கரினை இயற்கைச் சர்க்கரைக்குப் பதிலாக உபயோகப்படுத்தாமல் இருப்பதற்கு வேண்டிய வழிகள் தேடலானார்கள். சாக்கரினை மருந்துகள் செய்யமாத்திரம் அனுமதித்தார்கள். நீரிழிவு நோய்க்காரர்கள் சாதாரணச் சர்க்கரைக்குப் பதிலாக சாக்கரினை உபயோகிக்கலாமென்று மேல் நாட்டுச் செயற்கை வைத்தியர்கள் கூறுகிறார்கள். சாக்கரின் தன் சுய நிலை மாறாமலே உடலை விட்டு வெளிவருகிறதென்று அவர்கள் கருதுகிறார்கள். இப்பொருளின் விற்பனையானது மருந்து வியாபாரிகளிடம் இருக்கிறது. வைத்தியத்திற் கல்லாமல் வேறு வழிகளில் ஜனங்கள் இதை உபயோகப்படுத்தாமல் இருப்பதற்காக, அரசாங்கத்தார் இதற்கு அதிக வரி போட்டிருக்கிறார்கள். இதனால் ஜனங்கள் எல்லைச் சுங்கத்தாரை (customs authorities) ஏமாற்றி திருட்டுத்தனமாக சாக்கரினைக் கொண்டுபோக எத்தனிக்கிறார்கள். இனி தாரிலிருந்து கிடைக்கக்கூடிய மற்ற முக்கியமான சாமான்களைப் பற்றி கவனிப்போம்.

வர்ணப்பொருள்கள் போல, தாரிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைச் சாமான்களும் இயற்கையிலுள்ள புஷ்பங்களிலிருந்து கிடைக்கும் வாசனைப் பொருள்களோடு போட்டி போடக் கூடியதாகவே இருக்கின்றன. தாரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பொருள்களில் ஒன்றாகிய 'குமாரின்' (coumarin) என்பதிலிருந்து Dr. **பெர்க்கின்** என்பவர் ஒருவிதமான புற்களிலிருந்து வரக்கூடிய வாசனையைப் போல் மணம் வீசக்கூடிய பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். முன் காலத்தில் மோரிஷஸ் (Mouritius), ஃகார்டிலெராஸ் (Cordilieras) முதலிய தேசங்களில் வனில்லா அவரை (vanilla bean) என்பதிலிருந்து ஒரு உயர்ந்த வாசனைச் சாமான் தயார்செய்து வந்தார்கள். தற்சமயம் இத்தொழில் அழிந்துபோய், தாரிலிருந்து எடுக்கப்படுகிற வனில்லின் (vanillein) என்ற பொருள் வழங்கப்பட்டு வருகிறது. தாரிலிருந்து வாசனைச் சாமான்கள் உற்பத்திசெய்யும் தொழிலில் ரசாயன சாஸ்திரி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறான் என்றால், ரோஜாப் புஷ்பத்திலிருந்து பிரித்தெடுக்கக்கூடிய இருபது வாசனைச் சாமான்களையும் லீப்ஸிக்கில் (Leipzig) உள்ள தொழிற்சாலைகளில் தயார் செய்கிறார்கள். இதோடல்லாமல் மல்லிகை போன்ற அநேக விதமான புஷ்பங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வாசனைச் சாமான்கள் அவ்வளவும் தற்காலம் தாரிலிருந்து தயார் செய்கிறார்கள். தற்சமயம் ஜெர்மனியிலிருந்து மாத்திரம் வருடம் ஒன்றுக்குச் சுமார் 2 லக்ஷம் பவுன் பெறுமான வாசனைச் சாமான்கள் உற்பத்தி செய்கிறார்களாம்.

நாகரிக மனிதனின் இன்பவாழ்விற்குக்காரணமாக இருக்கிற பல பொருள்களும் தாரிலிருந்து எடுக்கிறார்கள் என்று பார்த்தோம். இதே தாரிலிருந்து மனிதனுக்குத் துன்பத்தையும், நாசத்தையும் விளைவிக்கக்கூடிய வெடி மருந்துகளும் தயார் செய்கிறார்கள். லிட்டைட் (Lyddite) என்ற வெடிகுண்டு ஒரு மலைச் சாரலில் பட்டால் அநேக பெரும் பாறைகள் பறப்பதைக் காணலாம். இதிலிருந்து தாரில் எவ்வளவு அபரிமிதமான சக்தி பதிந்து கிடக்கிறதென்று தெரிய வரும்.

நாகரிக வாழ்விற்கு வேண்டியிருக்கிற மைகள் (inks), ஒளிப்படம் எடுக்கும் தொழிலில் உபயோகப்படுத்துகிற அநேக விதமான டெவெலப்பர்களும் (developers) பலவிதமான வார்னீஷ்களும், ஆம்பர்களும் (ambers), மின்சார அல்பவாஹிகளும் (electrical insulators), தாரிலிருந்து தற்காலம் தயார் செய்கிறார்கள். ஃபினைலையும், மரத்தைக் காய்ச்சுவதினால் கிடைக்கிற கிளைப் பொருளாகிய ஃபார்மால் டிஹைட்டையும் சேர்த்து பலவிதமான அமிலங்களினால் அரிக்க முடியாத ஷெல்லாக்குகளும், வார்னீஷ்களும், உறுதியான அல்பவாகிகளும் தயார் செய்கிறார்கள். தற்காலம் கடைகளில் விற்கப்படும் பேக்லைட் சாமான்களும் இம்மாதிரி தயார் செய்யப்பட்டவைகளே. இவைகளில் சில வார்ப்பு இரும்புபோல் அவ்வளவு உறுதியாக இருக்கின்றன. பளிங்கு போலவும், திரவங்களில் கரையக்கூடாததாகவும், உருகாததாகவும், 300°C உஷ்ணநிலை வரைக்கும் தாங்கக்கூடியதாகவும் உள்ள பேக்லைட் கிடைக்கின்றது. மேலும்

பேக்லைட் ஸெல்லுலாய்ட் மாதிரி தீப்பற்றிக் கொள்ளாதது. பேக்லைட் சாமான்களைத் தற்காலம் இந்தியாவிலேயே பல ஊர்களில் உற்பத்தி செய்கிறார்கள்.

இவ்வளவு விதமான தொழில்களுக்கும் காரணம் Dr. எபர்கின், 'மோவ்' என்ற பொருளை கண்டு பிடித்ததேயாகும். தாரைப் பற்றின ஆராய்ச்சியில் முதன் முதலாக உழைத்தவர் ஃபாரடே (Faraday) என்பார். இவர் பென்ஸீன் என்ற பொருளைத் தாரிலிருந்து பிரித்தெடுத்தாரெனப் பார்த்தோம். இன்னும் லண்டனில் உள்ள அரச ஆராய்ச்சி நிலயத்தில் (Royal Institution) ஃபாரடே தயார் செய்த பென்ஸீன் ஒரு சிறு புட்டியில் வைத்திருக்கிறார்கள்.

சுமார் 70 வருடங்களுக்கு முன் இங்கிலாந்தில்தான் வர்ணத் தொழில் ஆரம்பிக்கப் பட்டது. இத்தொழில் சுமார் 20 வருடங்கள் செழித்து ஓங்கி, பின் ஜர்மனியில் பரவிற்று. தற்காலம் இங்கிலாந்தில் இத்தொழில் குன்றிப் போய், ஜர்மனி அதிசீக்கிரம் முன்னேறி உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களிலேயும் தங்கள் சாமான் விற்பனையாகும்படி செய்து விட்டார்கள். இதற்குக் காரணம் இங்கிலாந்திலுள்ள சர்வ கலாசாலையார்கள் தொழிற்சாலையார்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளாததுதான். இங்கிலாந்தில் தொழிற்சாலைகளுக்கு நல்ல அறிவாளிகளும்,புத்திகூர்மையுள்ளவர்களும்,ஆராய்ச்சித் துறையில் உழைக்க அவா உள்ளவர்களும் வருவதில்லை. இங்கிலாந்தில் கிரமப்படி பரீக்ஷைகளிலெல்லாம் தேறின பிறகுதான் ஆராய்ச்சித் துறையில் இறங்க அனுமதிப்பார்கள் என்று ஒரு ஆங்கில நிபுணர் எழுதுகிறார். இதனால் இங்கிலாந்தில்ஒருவனுக்கு ஆராய்ச்சித் துறையில் இறங்கு முன் அதிக வயதாகி விடுகிறது. தன் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொள்ளப் போதுமான வருவாயும் ஆராய்ச்சியாளருக்குக் கிடைப்பதில்லை. ஜர்மனியில் இதற்கு மாறாகச் சர்வ கலாசாலை மாணவர்களே தங்கள் உபாத்தியாயருடன் அவர் நடாத்தும் ஆராய்ச்சியில் கலந்து கொள்ளுகிறார்கள். இதனால் மாணவர்களுக்கு கிரமப்படி பரீக்ஷை இல்லாமலே டிப்ளோமாக்களும் கிடைக்கின்றன. ஆராய்ச்சியும் அதிகச் செலவில்லாமல் நடக்கிறது. இப்பயிற்சியுடன் டிப்ளோமா பெற்று வெளிச்செல்லும் மாணவர்கள், சுலபமாகத் தொழிற்சாலைகளில் நல்ல உத்தியோகம் பெறுகிறார்கள்.

ஆராய்ச்சியில் கிரமப்படி பரீக்ஷைகளில் தேறி வந்தவர்களுக்குத்தான் பலன் கிடைக்குமென்றும் அப்படி அல்லாதவர்களுக்குக் கிடைக்காதென்றும் நாம் நினைப்பதற்கில்லை. 'X Rays' என்கிற அதிசய ஒளிக்கதிர்களைக் கண்டுபிடித்து உலகிற்குதவிய விஞ்ஞானி ரேங்கன்(Rontgoen) என்பவர் சர்வகலாசாலைப் பிரவேச பரீக்ஷையில் கூட தேறவில்லையாம். இந்தியாவிலேயும் தற்சமயம் இதே நிலைமை இருந்து வருகிறது. இந்தியச் சர்வகலாசாலை அதிகாரிகளும், இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்தில் அக்கரையுள்ளவர்களும், மாணவர் கல்வியபிமானிகளும், ஜர்மனியில் சர்வகலாசாலைப் படிப்பு, ஆராய்ச்சித் துறை, தொழில்கள், இவைகளுக்குள் உள்ள சம்பந்தத்தை நன்கு ஆராய்ந்து, இந்தியக் கல்வி முறைகளை இந்தியாவின் வளர்ச்சிக் கேற்பத் திருத்தி அமைக்கவேண்டும்.

ஏழை முருகன்

(வீராசாமி)

I. பிச்சைக்காரன்

பிச்சைக்காரன்:—"ஐயா, வயிறு பசிக்கிறதே! இராக்காலப் பிச்சை!"

மல்லப்பன்:—"அடிடா மூஞ்சியிலே தண்ணீரை! பிடிவிலே பஞ்சம்! வேலே செய்து பிழை போ!"

*   *   *

தங்கராஜா அப்பா சொல்லே மீறமாட்டான். உடனே ஒரு லோட்டாத் தண்ணீரை பிச்சைக்காரன் மீது அபிஷேகம் செய்து விட்டான்.

——"அட அநியாயமே, பனிகாலம். துவ்வானம். கந்தலும் நனைந்து போச்சுதே. இது தருமமா! தெய்வமே!"

——"போ பேசாமல்! இல்லாவிட்டால் மொச்சைக்கொட்டைப் பாராவில் அடைக்கச் சொல்லுவேன்!"

*   *   *

பிச்சைக்காரன் அழுது கொண்டு சென்றான்.

சபாஷ்டா தங்கரா....ஜ்....ஜா....மணி— என்று **மல்லப்பன்** தனது செல்லக் குழந்தையைக் கட்டி முத்தமிட்டான்.

——"அப்பா நான் மாமா மாதிரி, போலீஸ் வேலே பார்ப்பேன்!"

——"ஆமடா துரையே, உன் ஜாதகத்திலேகூட அப்படித்தான் இருக்கு!"

II. ஏழையின் கருணை

——"யாரண்ணே, இங்கே வா. எனக்குள்ள கஞ்சியிலே நீ கொஞ்சம் குடித்துப் போ! தலேயிலே கட்டிக்கொண்டு போவதென்ன!"

——"ஐயா! புண்ணியவான்! நல்லா யிருக்க வேண்டும்!"

*   *   *

பிச்சைக்காரன் **முருகன்** சிறுகுடிலில் நுழைந்தான்.

——"ராமாயி, கூழும் இரண்டு மிளகாய்த் துண்டமுங் கொண்டுவா!"

விருந்தாளியைக் கண்டதும் ராமாயி உற்சாகமாக ஒரு தடுக்கெடுத்துப் போட்டு உட்காரச் சொன்னாள். உடனே கேப்பைக் கூழும், வெஞ்சனமும் வந்தன.

முருகன்: "அண்ணே, நல்லா சாப்பிடுங்க! பசி எல்லாருக்கும் ஒன்று தானே."

பிச்சை: "மஹராசனு யிருக்க வேணும். அந்தப்பாவி வீட்டிலே பிச்சைகேட்டேன்; சள்ளென்று விழுந்து தண்ணீரை அடித்து இருக்கிற கந்தையையும் நனைத்து விட்டான்."

முருகன்: "அதற்கென்ன, அண்ணே! இந்தாங்க, இந்த முண்டாசு எனக்குத் தேவையில்லே, உடுத்திக் கொள்ளுங்கள்!"

முருகன் செய்யும் உபசாரத்தில் பிச்சைக்காரன் திகைத்துப்போனான்.

கஞ்சிக் கவலே தீர்ந்தது. இருவரும் காலவர்த்தமானங்கள் பேசினர். "அண்ணே, தங்களே மறக்கமாட்டேன்; அந்தப் பாவியை விடமாட்டேன்!" என்று தன் பேச்சிற்கு முத்தாய்ப்பு வைத்துப் பிச்சைக்காரன் விடைபெற்றுக் கொண்டான்.

III. போர் பஞ்சம்

தமிழ் நாடெங்கும் வெள்ளப் பஞ்சம்; பயிரும் உயிரும் சேதம். பணத்திற்கு எட்டு மரக்கால் விற்றது, மரக்காலுக்கு நாலுபணமானது. பசியின் கொடுமை, கொடுமை, கொடுமை; தூங்கும் மனேவியை விற்றுண்ணும் கணவனுமிருந்தான். நல்லதங்காள் சகோதரிகளும் இருந்தனர். ஏழை எளியவர்கள் 'கஞ்சித் தொட்டி எங்கே எங்கே' என்று தேடியலேந்தனர்.

இந்த வெள்ளப்பாழை விடக் கொடியது போர்ப்புயல். சென்ற ஆண்டு தான் ஹைதராலியின் துருப்புகள் வந்து ஊர்களேக் கொள்ளேயடித்தன. இந்த ஆண்டு திப்பு சுல்த்தான் திண்டுக்கல்லில் கோட்டை கட்டிப் போர்புரிகிறான். கொஞ்சம் பசையுள்ளவர் பொருளெல்லாம் அவன் படைகளுக்குப் போகின்றன.

அம் மட்டுமா! அத்துடன் பாஞ்சாலங் குறிச்சிப் போரும் நடந்தது.

IV. கருமி மல்லப்பன்

மல்லப்பன் இந்தப் பஞ்சத்தில் சந்தோஷமா யிருந்தான். அவன் அரைக்காசுக்கு ஆறுநாழி மல்லாடுவான். இம்மி வட்டி விடமாட்டான். "மல்லப்பன் நெஞ்சு கல்லப்பா" என்றொரு பழமொழியுண்டு. வெள்ளப் பஞ்சம் வரப்போகிற தென்று இக்ஷணி சொல்லிற்றோ என்னமோ தெரியவில்லை; மூன்று வருஷத்திற்கு முன்னமே, அவன் தன் பெரிய களஞ்சியத்தை நிரப்பி விட்டான். இந்தப் பிடிவிலே பஞ்சத்திலே அத்தனையும் பவுனும் மோகராவுமானது. அவன் நெல், வியாபாரத்துடன் வட்டிக் கடையும் வைத்தான். சுக்கிரதசை அடித்தது. அக்கருமி பை பையாக பணத்தைக் கட்டிக் கட்டித் தன் மனையில் ஒரு இரகசியமான சுரங்கத்தில் வைத்து, மேலும் மேலும் சுவர்ண புஷ்பம் ஸமர்ப்பித்து பூஜை செய்து வந்தான். அந்த அறையில், அவன் தனது ஸம்ஸாரத்தைக் கூட விடுவதில்லை. ஸ்திரீகள் ஆசாபிண்டமாம்; நகை நாணயங்கள் கேட்பார்களாம். மூலஸ்தான சுயம்புலிங்கம் மாதிரி மல்லப்பனின் பண மூட்டை இருந்த இடத்தை விட்டு ஒரு அங்குலம் கிளம்பாது. பாவம்! லக்ஷிமிதேவி எத்தனை கருமிகளிடம் இப்படி சிறைப்பட்டு வருந்துகிறாள்! மல்லப்பனுக்கு வயது சுமார் அறுபதை எட்டிப் பார்க்கிறது. எமதர்மன், தனது வழக்கப்படி முகத்தில் வெள்ளி முத்திரைபோட்டு இடுப்பையும் வளைத்து விட்டான்.

அவனுக்கு நெடு நாளாகப் பிள்ளையில்லை. சுமார் நான்கு தாரங்களை அடுத்தடுத்து விவாகம் செய்துகொண்டும், பலனைக் காணோம். ஐந்தாவதுதான் **பாலம்பாள்**. பிள்ளையில்லாக் குறை பெண்களுக்குப் பெருங்குறையா யிருக்கும். பிள்ளைகுட்டி பெற்றுச் சந்ததி பெருகுவதே வாழ்விற்கு இன்பமாம். பாலாம்பாள் தூண்டுதலால் இதற்காக மல்லப்பன் சிறிது பணமும் செலவிட்டு, காசி, ராமேஸ்வரம், நாகப்ரதிஷ்டை, அஸ்வத்த ப்ரதக்ஷணம்—எல்லாம் பார்த்து, முடிவில், ஒருவழியாகத் **தங்கராஜா** பிறந்தான். தங்கமே தனது தெய்வமானதால் மல்லப்பன் தன் செல்லப் பிள்ளைக்கு இப்பெயரிட்டான். தங்கராஜா மூன்று வயதிலேயே வெடுக் வெடுக் கென்று சுண்டக்காய் கடித்தாற் போலப் பேசுவான். மல்லப்பனிடம் கவிபாடி வயிறு வளர்க்கும் வித்வான்கள் வந்தால் காது கேளாது, சல்லி புரளாது. தங்கராஜாவின் சுண்டக்காய்ப் பேச் சென்றால் முன் சொன்னபடி பரமானந்தப் பட்டு இப்படிப்பட்ட பிள்ளை பெற்றதற்காக, மனைவிக்கு நகை நாணயங்கள் கூடத் தரத்துணிவான். மற்றைப்படி அவன் எச்சிற்கையால் ஈ கூட ஓட்ட மாட்டான்.

ஆனால் மல்லப்பன் பையவிழ்க்க கடவுள் ஒரு வழி விடாமலில்லை. கானூரில் சர்க்கார் உத்தியோகஸ்தர் யாராவது வந்துவிடவேண்டும்; அன்று அமளி. மல்லப்பன் தாண்டுகால் போட்டு உபசரிப்பான். சோடசோபசாரங்களும் செய்து உச்சிமுதல் உள்ளங்கால் வரையிற் குளிரவைத்து அனுப்புவான். ஒரு தஹஸில்தார் நமது மல்லப்பருக்கு '1220-ம் பசலிக் கர்ணன்' என்றும் பட்டம் கொடுத்து விட்டார். இதிலும் காரிய மில்லாமலில்லை. அதிகாரிகள் சலுகை சாமானியமா? மல்லப்பன் எது சொன்னாலும் மேலாவிலே செல்லும். ஒருவனை மாட்டிவைக்கவோ, பொய் வழக்கு ஜோடித்துப் பாராவில் போடவோ மல்லப்பனால் முடியும். அவன் தனது பந்துக்களுக்கெல்லாம் நல்ல உத்தியோகம் வாங்கித் தந்திருக்கிறான். பாலாம்பாள் அண்ணன் முத்துவுக்கு டாணவில் அதிகாரி வேலை. மல்லப்பனுக்கு அடிக்கும் வேட்டைதான் என்னே! ஊரெல்லாம் மல்லப்பன் என்றால் நடுக்கம்.

V. முருகன்

மல்லப்பன் வீட்டுக் கொல்லைப்புறம் **முருகன்** சிறுகுடில் இருந்தது. தங்கை, தமக்கை, குழந்தைகள் வீடு நிறைய உண்டு. இத்தாலியில் பிறந்திருந்தால் முஸலோனி இக்குடும்பத்திற்கு முதல் வெகுமதி தருவார். இந்த அடிமை நாட்டில் குழந்தை பிறந்தால் நெஞ்சில் குணுக் கென்கிறது. தங்கைகணவனுக்குப் பண்ணைச் சேவகம். தமக்கை **ராமாயி** கணவன் பினங்கில் தோட்ட வேலை பாக்கிறான். தம்பி வடிவேலுக்குப் பரிசம்போட்டிருக்கிறது. அவன் ஆடு மாடு மேய்த்து வருகிறான். பலபீமனை ராமமூர்த்தி மார்பில் யானையைத் தாங்குவது வியப்பல்ல; முருகன் இக்குடும்பத்தைத் தாங்குவதுதான் வியப்பு.

முருகன் மகாபலசாலி; அஞ்சா நெஞ்சம் படைத்தவன். மாசற்ற நடையுள்ளவன். ஆள் ஆறடி எட்டங்குலம்; மார்பு 54 அங்குலம் சுற்றளவு; மலைபோலத் தோள்கள்; கொல்லன் சம்மட்டிபோலக் கைகள்; உரத்துப் பெருத்து இறுகித் தடித்துக் கட்டுமஸ்தான பயில்வான்

சரீரம். வாள், சிலம்பம், குஸ்தி, ஓட்டம், எதிலும் யாரும் முருகனை மிச்சங் கொண்டுபோக முடியாது. பதக்கமும், விளம்பரமுந்தான் இல்லை; அவனுக்கு மற்றைப்படி தகுதியெல்லாம் உண்டு. ஒரு காரியம் வந்தால் அவன் சமயோசிதமாக நடந்து கொள்ளுவான்; நல்ல பரோபகாரி; 'கூடப்பிறந்தவர் குடும்பம் பிழைத்தால்போதும், நமக்கொரு கால்கட்டு வேண்டாம்' என்று கண்ணாளம் செய்து கொள்ள மறுத்துவிட்டான்.

முருகன் காட்டில் விறகு வெட்டிப் பெரியசுமை கொண்டுவருவான், பனையோலை சீவுவான், கீற்றுமுடைவான், சுவர் வைப்பான், தோட்டம் போடுவான், குடும்பத்திற்குத் தன்னைக் கட்டும்படி பாடுபடுவான். தம்பி மாடு மேய்ப்பான்; பால் தயிர் கிடைக்கும். பொங்கல், தீபாவளிக்கு நாலுமுழ லேஞ்சிகள்வரும். ஜல்லிக்கட்டுமாடுகளை விடாது பிடித்து அதில் கொஞ்சம் வரும்படியும் துண்டுகளும் வரும். அவற்றை ராமாயி மூட்டிப் பெண்களுக்கு இரண்டு சுற்றுச் சிற்றுடையும் சேலையுமாகத் தைப்பாள். பெண்கள் எருமுட்டை தட்டி விற்பர், அரிசி குத்துவர், நூற்பர். வீட்டில் கேப்பை, கிடைத்த காய்கறி, கடித்துக் கொள்ள மிளகாய்த் துண்டம்—இவைதான் மாமூல் உணவு. அதுவும் இரண்டு வேளைதான். மீன் ஊன்—எதுவும் கிட்ட வரக்கூடாது; முருகன் கண்டிப்பு. அவன், காலை நீராகாரம் உண்டு, சில குழந்தைகளைக் காட்டிற்கு அழைத்துச் சென்று, விறகு வெட்டிச் சிறுசிறுசுள்ளிக்கட்டுகளை அவர்கள் தலையில் ஏற்றி அரைப்பணத்திற்கு விற்று வரச் சொல்லுவான்; தானும் நாலு பணம் பெறக் கூடிய விறகுக் கட்டைச் சுமந்து செல்வான். ஐந்து மணிக்கு விற்றதைக் கொண்டு வருவான் அதன் பிறகுதான் இத்தனை பேருக்கும் கஞ்சி வைப்பாள் ராமாயி. முருகன் வேர்வை போக ஆவாரங் குழை யரைத்துக் குளித்து, உவர் மண் போட்டு வேட்டியை வெளுத்து உலர்த்தி மொருமொரு வென்று உடுத்தி, முருகையா கோவிலை எட்டுத்தரம் சுற்றிக் கும்பிட்டு, 'முருகா, முருகா, என்று 1000 தரம் உருவேற்றி ஒரு சூடனைக் கொளுத்தி வைத்து, "ஏழையால் முடிந்தது இவ்வளவுதான். என்னைக் கண்பார் முருகையா" என்று மனங் குழைந்து வீடு திரும்புவான்.

வழியில் அதிதி பரதேசிகளைக் கண்டால், தன்னுடன் அழைத்து வந்து தனக்குள்ளதை அவர்களுக்கும் தருவான். குடும்பம் முழுதும் இதே ஒழுங்கில், இதே அச்சில் வார்க்கப்பட்டது; சோற்றுக் கவலைதான் இடையிடையே; வேறு கவலையில்லை. கிராமச் சவுக்கத்தில் காந்த புராணம் நடக்கும். அக்காலம் கம்பராமாயணம் அடிக்கடி நடக்கும்; காந்த புராணம், விஷ்னு புராணம், பாரதம் முதலியன நடக்கும். இவையெல்லாம் கேட்க கேட்க முருகன் அறிவு பெற்றான். அவனுக்குத் தாயுமானவர் பாடம் மனப்பாடம்; வேறு எழுத்து வாசனை கிடையாது. இருந்தாலும் இயலறிவு மிகுதி.

முருகனுக்கு பெரிய பெரியஎண்ணங்களுண்டு. நாட்டின் நடப்புகளெல்லாம் அவனுக்குத் தெரியும். தொண்டமான் சேனை இங்கிலீஷ்காரருக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிற தென்றால், முருகனைக்கேட்கலாம். இப்போது அஞ்ஞுதுரை (Colonel Agnew) எந்தக் காட்டில் முகாம் போட்டிருக்கிறார் என்றால், முருகனைக் கேட்கலாம். சிவகங்கைச் சீமையில் சின்ன மருது, பெரிய மருது ஊமைத் துரைமார்கள் என்ன செய்கிறார்களென்றால் மருள் வந்தவன் மாதிரி சொல்வான்.

இப்படிப்பட்ட முருகனைக் கண்டால் மல்லப்பனுக்கு மனதில் திகில்தான்; இந்தப் பயலை எப்படியாவது தனது அடிமையாக்க வேண்டுமென்று அக்கருமி கஜகர்ணம் போட்டுப் பார்த்தான். "அடிமை" என்றால் முருகனுக்கு வெகு எரிச்சல் வரும். நமக்கெல்லாம் மேலே ஆண்டவன் இருக்கிறான்; அவன் எல்லாருக்கும் படியளக்கிறான். ஏதோ அவனை நம்பிப் பாடுபட்டு அவரவர் பிழைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அடிமை யென்ன? "நாமார்க்கும் குடி யல்லோம். நமனை யஞ்சோம்" என்று அவன் தைரியமாகச் சொல்வான். இருந்தாலும் சமயங்களில் வேண்டுமானால் தேகப்பிரயாசைப் படப் பின்வாங்க மாட்டான். முருகனிடம் அகங்காரமில்லை; சுதந்திர உணர்ச்சி அதிகம். "முருகா வைத்தியரைக் கூட்டிவா; அடுத்த ஊருக்குச் செய்தி கொண்டு போ; சந்தையில் சாமான் வாங்கிவா" என்றால் செய்வான். இப்படி மல்லப்பனுக்குப் பல தடவை உதவியிருக்கிறான். அப்போது பாதி அழுகின பழங்கள், ஊசல் பணியாரங்கள், புளித்த காடி, கட்டிக் கழித்த கந்தைகளைக் கொடுத்து, "இந்தாடா பயலே பிழைத்துப்போ. எஜமானனிடம் விஸ்வாசமாயிரு!" என்று தாராளமாய்ச் சொல்வான் மல்லப்பன். அவற்றையும் ஏழை **முருகன் சகாயம்** என்று பெற்றுக்கொண்டு வந்து வீட்டில் தருவான்.

VI. வறுமை, வறுமை

ஐப்பசி கார்த்திகை அடைமழை. வைகை வழிந்து பயிர்களையும் உயிர்களையும் வாரிச் செல்லுகிறது. கானூரெல்லாம் கசகச வென்றிருக்கிறது. ஆள் வெளியே தலைகாட்ட முடியாது.

விறகு வெட்டப் போவதெப்படி? ஆறுநாளாக வீட்டில் பலாத்காரஏகாதசி.முருகன் யாரிடமும் கையேந்த மாட்டான். "முருகன்செயல் நடக் கட்டும்" என்று தான் இருந்தான். ஆறுவது நாள்; குழந்தைகள் அழக்கூட ஜீவனில்லாது கிடக்கின்றன. "முருகா, ஒரு வேலையு மில்லாது, தொந்தி சுமக்கும் அநியாய மல்லப்பனுக்கு அவ் வளவு பணமும் அமுதும் கொடுத்தாய்! ஒரு பாவ மும் அறியாது, பாடு படும் எளியவரை என் பட்டினி போடுகின்றாய்?" என்று மனமுடைந் தான்.

அன்று தீபாவளி; ஊரெல்லாம் சீனி வெடி சுட்டு நரகாசுர யுத்தம் படபடக்கிறது! மல்லப் பன் வீட்டில் சம்பந்திகள் வந்திருக்கிறார்கள். உப்பட்டும், வெள்ளையப்பமும், போண்டாவும், ஜிலேபியும், உக்கரையும் காப்பியுமாகப் போட்டு நிரப்பி, மல்லப்பன் உறவினரோடு தமாஷாகச் பேசிக் கொண்டிருக்கிறான். இந்த வருஷம் எல்லாருக்கும் வெண்பட்டு. தங்கராஜாவுக்கு ஏராளமானவெடிக் கட்டுகள் "பட்டுப் பட பட் புட படபசட்" என்று படாரமடித்துக் காசு கந்தகப் புகையாகப் போகிறது. அப்போது முருகன் தோன்றினான். "என்னடா முண்டா; இன்றைக்கு வேலையில்லை; இங்கே வந்து தொங் காதே; போ!" என்று கருவமாகப் பேசித் தன் காரியத்தைப் பார்த்தான். கருமி தங்கராஜாவும் ஒரு யானைவெடியைக் கொளுத்தி எறிந்தான். "கடவுளே, ஏழைமுகம் பார்க்க யாருமில் லையா?" என்று முருகன் வீடு திரும்பிப் பல யோசனைகள் செய்தான்.

VII. நாடகம்

அன்றிரவு மூன்று மைலுக்கு அடுத்துள்ள **செம்பனூரில்** தஹசில் தாமோதரம் ஏற்பாட்டில் பார்வதி கல்யாணம் நாடகம் நடக்கிறது. வித் வான் பாஸ்கரம் பரமசிவன்; சபாரஞ்சிதம் சாமண்ணா பார்வதி; குயில் குப்பண்ணா ரதி; ஜோர் செல்லப்பா மன்மதன்; பலே கிட்டண்ணா குண்டோதரன்..................எல்லா ரும் சாஸ்திரம் படித்தவர்கள்; பெரிய கவிராயரிடம் பாடங் கேட்டவர்கள். பல சமஸ்தானங்களில் தோடாப் பெற்றவர்கள். கேட்க வேண்டுமா? சிவன் கோயில் மண்டபத்தில் எள்ளுப்போட இடமில்லை கூட் டம். காரியங்களெல்லாம் வீரத்தேவன் பார் வையில் நடந்தன. மல்லப்பனுக்குத் தனி உப சாரங்களுடன் அழைப்பு வந்தது. நாலு மைலைக் காளை வண்டிகளுடன் வீரத்தேவன் வந்து நின்றான். வீட்டை வெகு கவனமாகப் பூட்டி முத்திரை வைத்துவிட்டு மல்லப்பன் குடும்பத் தோடு நாடகம் பார்க்கப் போய்விட்டான். விடிய நாலு மணிக்குத்தான் கைலாசத்தில் சகல தேவரும் புடை சூழப் பரமசிவன் பார்வதிக்கு மாங்கல்யதாரணம் செய்தான். "நமப்பார்வதி பதயே—ஹரஹரமஹாதேவ! மங்களம்! மங்களம்! மங்களம் பவந்துதே மங்களம் மங்களம்" என்று வெண்கலத் தொண்டை கிருஷ்ண பாகவதர் சுருட்டியில் ஒரு பிர்க்கா வாங்குகிறார்! மத்த ளம் கிட்டண்ணாவுக்கு ஏகப்பட்ட அப்ளாஸ்! சுண்டல் விநியோகம்....மல்லப்பனும் விழித்துக் கொண்டான்.

VIII. உதவி

முருகனுக்கு உறக்கமில்லை; உலகில் நல்லோர் வருந்துவதும், பொல்லோர் செல்வச் செருக்கில் ஏழைகளை நசுக்குவதும் என்ன நியாயம்? கடவுள் ஒருவர் இருந்தால் உலக நீதி இவ்வாறு வக்கரிப்பானேன்? தான் இன்று குடும்பத்துடன் பட்டினி கிடப்பானேன்? "முருகா உன்னை நம் பினேன்; பாடுபட்டு உழைக்கிறேன். இந்த ஆறு நாளாக் வேலையில்லை; கொன்றாலும் வேறொரு வரைக் கேட்கமாட்டேன். எல்லாருக்கும் படி யளக்க நீ யிருக்கையில் யாரைக் கேட்பேன்? முருகா உன்பெயர் சொல்லி இப்படியே குடும் பத்தோடு சாகிறோம்" என்கிறான் ஏழை. பிறகு தனது குடும்பத்தைத் தேற்றினான்.

மூன்று மணிசுமார்; முருகன் அன்றாயினும் விறகு வெட்டச்செல்லலாம் என்று வானத்தைப் பார்க்கவெளியே வந்தான். காலில் ஏதோ தடுக்கி யது! என்ன? என்ன ஆச்சரியம். ஒரு கூடை நிறையப்பணிகாரங்களும் கட்டுச் சோறும்! அது மட்டுமா! ஒரு பையில் ரூ. 100, அதனுள் "முரு கன் துணை" என்று ஒரு சீட்டிருந்தது! என்ன ஆச்சரியம்! எல்லாரும் எழுந்து, பல் விளக்கி, கடவுளை நினைத்துக்கும்பிட்டு பசிப்பிணியைத்தீர்த் துக் கொண்டனர். ஆனால் முருகனுக்குப் பணத் தைத் தொடச் சந்தேகம். தான் சம்பாதிக்காத பொருளைக் கடவுளே "இந்தா" என்று கொடுத் தாலும் அவன் விரல் போட்டுத் தொடமாட் டான். ஆதலால் அதைக் கட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டான். புலன் விசாரித்துக் கொடுத்து விடுவோம், என்று எண்ணினான். "ஆண்டவன் இருக்கிறான்; அன்பரைக் காக்கிறான்" என்று நம்பினான். இறைவன் கருணையை நினைந்து நினைந்து மனங் கசிந்துருகினான் அன்பன்.

IX. மல்லப்பன் பாய்ச்சல்

கதிர் எழுந்தது; வானம் வெளி வாங்கியது; பூமாதேவி பசுநகை குலுங்குகிறாள். மாந்தர் உள்ளமெல்லாம் இரவிக்கு வந்தனங் கூறுகிறது;

தொழிலுலகம் சுறுசுறுப்பாக நடக்கிறது. மணி ஏழிருக்கும்; முருகன் சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு கோடரியுடன் விறகு வெட்டக் கிளம்பினான். விறகுவிற்றுத்தான் அன்று பிழைப்பு. ராமாயியும் செல்லாயியும் வேறு வேலையில்லாததால், கைவசமிருந்த கொல்லைப்பருத்தியை வில்லடித்துத் திரித்து நூற்கத் தொடங்கினர். தம்பி மாடுமேய்க்கச் சென்றான். "வேல் முருகன் சகாயம்" என்று நமது முருகன் வாசலில் வந்தான்.

"நில்லடா, முண்டா! எங்கே ஓடிப்போகிறாய்! உன்னை விடமாட்டேன்! சொல் உள்ளத்தை!" என்று வெறிபிடித்தாற்போல வந்தான் மல்லப்பன்; பின்னால் டாணாமுத்து பரிவாரங்களுடன் வந்தான். இதென்ன இது? முருகனுக்கு ஏதும் விளங்கவில்லை. "என்ன செய்தி? ஏழைமீது ஏன் இத்தனைப் புலிகளுடன் பாய்கிறீர்?" என்றும் தைரியமாகக் கேட்டுவிட்டான். பிடித்தது சனி; "இவனைக் கட்டுடா முத்து! வீடுசோதனை செய்யலாம்" என்றான் மல்லப்பன். இத்தனை பேரையும் ஒரு முண்டு முண்டி இரண்டில் ஒன்று பார்த்துவிட முருகனுக்குப் பலம் உண்டு. என்றாலும் "கடவுள் உண்டு; நம்மீது பிசகில்லை, தரும நியாயப்படி எல்லாம் நடக்கும்" என்றெண்ணிப் பொறுத்திருந்தான். "நான் ஒரு குற்றமும் அறியேன். வீட்டைத் தாராளமாய்ச் சோதனை போடுங்கள்; ஒன்றுமட்டும் சொல்லிவிடுகிறேன். இரவு மூன்று மணிக்கு வெளியே வந்தேன். காலில் ஏதோ பட்டது; பார்த்தேன். ஒரு கூடையில் உணவும், ஒரு பணமுடிச்சும் இருந்தது; உணவைச் சாப்பிட்டோம், இதோ பணமுடிச்சு; நான் மனதார உழைக்காதது எனக்கு வேண்டாம் வாங்கிக்கொள்ளுங்கள்; வேறு எதுவும் நானறியேன்; கடவுளுக்குப் பொதுவாகச் சொல்லுகிறேன்" என்றான். மல்லப்பன் ஆவலாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு "முத்து, காரியம் நடக்கட்டும்" என்றான். உடனே போலிஸார் ஏழைக்கு விலங்கு மாட்டித் தள்ளிக்கொண்டு சென்றார்கள். அதிகம் சொல்வானேன். முருகன் செம்பனூர் டாணாவில் ஒரு இருட்டறையில் 144-வது எண் கைதியானான். என்னகாலம்!

X. திருட்டு

ஊரெல்லாம் அமளி; செம்பனூருக்கு நாடகம் பார்க்கப் போனவர்கள் காலை 5-மணிக்குத்தான் கானூருக்கு வந்து சேர்ந்தார்கள். மல்லப்பனுக்கு உடல்தான் நாடகமண்டபத்தில்; உயிர் முழுதும் இங்கே பணப்பையில் இருந்தது; வீட்டில் அடியெடுத்து வைக்கும்போதே தங்கராஜா "நச்" சென்று தும்மினான். மற்றவர் தும்மியிருந்தால் ஒரு ஸஹஸ்ரநாமம் நடந்திருக்கும். நமது குழந்தையே என்று சும்மாவிட்டான்.

வாசல் பூட்டைத் திறந்தார்; கதவு திறக்கவில்லை; உள்ளே பலமாகத் தாழ்ப்பாள் போட்டிருக்கிறது. தூக்கி வாரிப்போட்டது! 'ஐயையோ உள்ளே யாரோ புகுந்து தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு, கொள்ளையடிக்கிறார்' என்று ஒரே கூக்குரல்; ஊர் இரண்டாகிறது. டாணாமுத்து மாமா தைரியம் சொன்னார். எல்லாரும் கொல்லைப்புறம் போய்ப் பார்த்தார்கள்; கன்னம் வைத்திருந்தது; மல்லப்பனுக்கு உயிர்துடித்தது; 'லபோ லபோ' என்று நெஞ்சிலே அடித்து அலறினான்.

டாணாக்காரர் கதவை நெம்பிக்கொண்டு வீட்டுக்குள் சென்றனர். வீடு காலி; மல்லப்பன் தனது இரகசிய அறைக்குச் சென்றான்; "ஐயையோ! போச்சே போச்சே!" என்று விழுந்தடித்து அலறினான். "நான் தோண்டிய பணக்குழி என் பிணக்குழியாகட்டும்; பணம் போனபின் இனி உயிர் வைத்திருக்க மாட்டேன்," என்று மூர்ச்சித்தான். டாணாக்காரர் பரிசோதித்தனர். ஒரு மூலையில் ஒரு பணமும் ஓலைச்சீட்டும் இருந்தன. ஓலைச் சீட்டில் "கருமித்தனம் பண்ணாதே; இந்தா உன் வாய்க்கரிசிக்காக ஒரு பணம் வைத்திருக்கிறது. ஆண்டவன் செயல்" என்று எழுதியிருந்தது!

XI. தீர்ப்பு

முருகனே மோசஞ் செய்தான்; கூட்டுக்களவாணிகளைச் சொல்லமாட்டேனென்கிறான் என்று மல்லப்பரும் டாணா முத்தண்ணாவும் சந்தேகித்தனர்.

முருகன் நகக்கண்களில் ஊசியேற்றினர்; முதுகில் சூடுபோட்டனர்; பட்டினி போட்டனர்; "சொல் உண்மை!" என்றனர். "உண்மைதான் சொல்லுகிறேன்; நான் ஏதும் அறியேன்; என்னை நம்பாவிட்டால் செய்வது செய்யுங்கள். தெய்வம் உள்ளது!" என்றான் முருகன். மல்லப்பனின் செல்வாக்கினால் ஒருதலைப் பட்சமாக விசாரணை நடத்தப்பட்டு முருகன் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

XII. கொள்ளை

கட்டை பொம்ம நாயக்கன் என்னும் கருத்தய்யா. அவன் உடன்பிறந்த சிங்கம் குமாரசாமி என்னும் ஊமையன்; வயது 26 தான்.

வாய் பேசாது என்றால் கையும் மூளையும் வட்டி போட்டுச் செயலால் பேசும். அவனுக்கு மஹா சக்தி உபாசனை. பாண்டிய நாடெங்கும் இவர்கள் தூண்டிய கலகந்தான். வில்லடிச்சாங் கோயில், தெருக்களில் காளியாட்டம், சின்னி பொம்மையாட்டம், பிச்சைக்காரர் பாட்டு முதலிய பல வழிகளில் இவர்கள் ஜனங்களுக்குத் தமது கருத்தை அறிவித்தனர். பக்குவம் பார்த்துக் கட்டைபொம்மு வரிகட்ட மறுத்துவிட்டான். "வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கை ஏதுக்கடா?" என்ற பல்லவியுடன் சுதந்திர வரிசைகளைத் தொடங்கினன். இராமநாதபுரம் கலெக்டர் நேரே ஆஜராகும்படி வாரண்டு அனுப்பினர். சகோதரர் சென்றனர். அங்கே தந்திரமாகத் தப்பி வெளியேறி இரண்டு அரசாங்க ஊழியரையும் கொன்று, பாஞ்சாலக் குறிச்சிக்குத்திரும்பி வந்து கொடியை உயர்த்தினர். மேஜர் பானர்மான் பாஞ்சாலக்குறிச்சியை முற்றுகை போட்டான்; இருதரப்பிலும் வலுத்த சண்டை, சேதம். கோட்டை தகர்ந்தது. கட்டைபொம்மு, ஊமயன் வகையருக்கள் தந்திரமாகத் தப்பியோடி சிவகங்கைக் காடுகளில் மறைந்தனர். ஒரு அம்பலக்காரர் துணையால் கட்டைப்பொம்மு பிடிபட்டு 1799-ல் தூக்கிடப்பட்டான். ஊமைத் துரையும், அவனுக்கு வலது கையாக உதவிய சுப்பிரமணியப் பிள்ளை என்பவரும் பாளையங்கோட்டையில் பலமான காவலில் வைக்கப்பட்டனர்.

ஊமைத் துரை பாளையங்கோட்டையினின்று எப்படியோ தப்பி, பாஞ்சாலக் குறிச்சிக்கு வந்து, அண்ணன் கட்டிய கோட்டையைவிட, பலமான கோட்டை 26 நாட்களில் கட்டி முடித்துக் கொடி நாட்டினன். அவனிடம் ஒரு காந்த சக்தி உண்டு; ஆள் நெட்டை, ஒல்லி; வசீகரமான முகம். அவன் சாடைகாட்டினல் போதும். காந்தம்போல் அவனைப் பின்பற்றினர் வீரர். 1801-ல் கர்னல் அஞ்ஞூதுரை வெகு பாடுபட்டு பாஞ்சாலக் குறிச்சியைப் பிடித்து விட்டார். ஊமையனைத் தேடினர் பகைவர். ஊமைச் சிங்கம் ஓசைப் படாமல் ஓடிப்போயிற்று; எங்கு? சிவகங்கைக்கு. அங்கென்ன?

மற்ளுெரு கதை; சின்னமருது, பெரிய மருது என்ற பல பீமர்கள் ஊமைத் துரையைக் குதூகலமாக வரவேற்றனர். இந்த மருது சகோதரர் உடையனத் தேவருக்கு அடைப்பக்காரராயிருந்தனர்; பெரிய மருது அசகாய சூரன்; போரிற்புலி; அவனது திறமையை ஆங்கிலேயரே வியந்தனர். அவன் கைதூக்கினல் ஊர் கிடுகிடுக்கும். தமது வீரத்தால் மேலோங்கி இந்த மருது சகோதரர் நாட்டுத் தலைமை வகித்தனர். நினைத்தபோது 10,000 வீரமறவர் படை அவர்கள் முன் நிற்கும். தீயோடு காற்றும் சேர்ந்தாற்போல ஊமைத்துரையும் இவர்களுடன் சேர்ந்தால் கேட்கவேண்டுமா? திருமயத்தில் ஊமையன் பெரிய கோட்டைகட்டிப்போர்த் தொடுத்தான். திருமயம், திருப்பத்தூர், சிறுவயல், கண்ணங்குடி, காளையார்கோயி லெல்லாம் அக்காலம் போரரங்கங்கள். அஞ்ஞூதுரையின் படைகளுக்கும் புதுவைத் தொண்டமான் படைகளுக்கும் கண் மூடாது வேலை; புரட்சிக்காரர் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதே கடினம். காளையார்கோவில் காடுகளில் அக்காலம் ஆயிரக்கணக்கான ராபின்ஹூட்டுகளைக் (Robin Hood) காணலாம். இக்காட்டை வெட்டித்தான் அவர்களைப் பிடிக்க முயன்றனர். ஒரு புதரில் கை வைத்தால்—டபார்! ஆள் அந்தரம்! புதர்களில் வெடி மருந்துகள்! அந்தக் கதை இத்துடன் நிற்கட்டும்; நமது கதைக்கு வருவோம்.

செவ்வானத்தில் இருள் படருகிறது; குளிர் காலம்; பூமி தேவி கருப்புக் கம்பளி போர்த்துச் சத்த மடங்கியிருக்கிருள். டாணு வீரர் இனிப் பயமில்லை என்று அங்கு மிங்கும் உட்கார்ந்து, கட்டமுதுண்டனர். சிலர் தீவட்டிகளுடன் கஜானுப் பெட்டியைக் காத்தனர்.

'தடார் தடார்' என்று சத்தங் கேட்டது; 'பளார் பளார்' என்று டாணு வீரர் முதுகில் விழுந்தது. என்ன இது! முருகன் கட்டு அவிழ்ந்தது; ஒரு கொள்ளைக் கூட்டம் இவர்களை வளைத்துக் கொண்டது. முத்துமாமா குத்துசுரானர். "ஐயா, ஒரு தடி கொடுங்கள். இத்தனை பேரையும் செலம்பம் வீசி ஒட்டுகிறேன்" என்றான் முருகன். மறுத்து விட்டார்கள். துப்பாக்கிகள் போன விடம் தெரியவில்லை; பல டாணு வீரர் கட்டுண்டனர்; முருகன் மாயமானன்; சில டாணுக்காரர் மதுரைக்கு ஓடினர், மேலதிகாரிகளுக்குச் செய்தி கொடுக்க. கஜானு போனவிடம் தெரியவில்லை. எல்லாம் அரைமணிக்குள் நடந்த அமளி!

XIII. வீரய்யா

நள்ளிருள்; நடுக்காடு; அதனிடையே ஒரு வெளி; அதில் அங்குமிங்கும் குடிசைகள்; அவற்றில் விளக்குகள் மின்னுகின்றன. சுமார் 200 முண்டர்கள் அங்கே கூடிக் குதூகலமா யிருக்கின்றனர். அவர்களிடையே முருகன் காண்கிறுன். "சபாஷ் வீரய்யா நல்ல போடு போட்டாய். கானூர் பணமும் கசானுவும் உண்டெனக் கிடைத்துவிட்டன. இனி நமது

மருதப்பனுக்கும் குமரப்பனுக்கும் (ஊமையன்) சயந்தான். தொண்டியிலிருந்தும் அரிசி மூட்டை வந்திருக்கிறது." இதுவே அவர்கள் பேச்சின் சாரம். வீரய்யா யார்? பார்த்தான் முருகன். ஆ, பிச்சைக்காரன்! இவனு மல்லப்பன் வீட்டில் கொள்ளையடித்தவன்! உண்மை தெரிந்தது. பண்டமொரு பக்கம் பழியொரு பக்கம்—இதென்ன விதி!

எல்லாரும் சற்றுக் கண்ணயர்ந்தனர். வீரய்யா முருகனைத் தனியே அழைத்துப் பேசினுன்.

வீர: என்னைத் தெரிகிறதா?

முரு: நல்லா; நம்ம விருந்தாளி யல்லவா?

வீர: நூறு ரூபாயும் கட்டுச்சோறும் கிடைத்ததா?

முரு: அண்ணே தாங்களா வைத்தீர்கள்? ஆ! அதனுல்தான் எனக்குக் கடுங்காவல் கிடைத்தது.

வீர: மல்லப்பனுக்கு எழுதிவைத்த சீட்டைப் படித்தாயா?

முரு: கச்சேரியிலே படித்தார்கள்; கேட்டேன். கருமிக்குச் சரியான தண்டனைதான் இருந்தாலும்......

வீர: இருந்தாலுமென்ன, செத்தாலும்—அவனை விடுவேனே? செம்பூரில் நான்தான் வீரத்தேவனைத் தூண்டி நாடகம் ஏற்பாடு செய்தது. நான்தான் மல்லப்பன் வீட்டை அன்றே பொட்டலாக்கியது. பணமெல்லாம் நம்ம ராஜாவுக்குப் போகிறது. மறுபடியும் இன்றைக்கு கானூர் முகாம் நடக்கிறது!

முரு: ஆ! அப்படியா: அவர்கள் கண்டு பிடிக்க முடியவில்லையே.

வீர: நடக்குமா? அண்ணே தாங்கள் நல்ல பலசாலி; தங்களுக்கு வேண்டிய ஆதாயம் கிடைக்கும்; எங்களோட சேர்ந்திடுங்கள்.

முரு: விடிந்து யோசிப்போம். ஆனல் நான் ஒரு யோசனை சொல்லுகிறேன் கேளும். தொண்டமான் கை வலுவாயிருக்கிறது. நாளை என்ன நடக்குமோ தெரியாது. எப்படியும் உங்கள் வேலை பலியாது. இப்படி ஊரைக் கொள்ளையடிப்பதும், திருடுவதும், காட்டில் ஒளிந்து கலகம் பண்ணுவதும் நன்ருயில்லை வாருங்கள் என் பின்னே, ஒரு பெரிய நிலம் வாங்கி உழுது சாகுபடி பண்ணி மானமாகப் பிழைப்போம்.

வீர: அப்படித்தான் எனக்கும் யோசனை. ஆனல்.....

திடீரென்று முரசொலி கேட்கிறது. தீவட்டிகள் ஆயிரக்கணக்காக வந்தன.

கலகக்காரர் நாலாபுறமும் ஓடிப்போயினர். செய்தி மட்டும் முருகனுக்குத் தெரிந்தது :—"தொண்டமான் ராஜா ஊமையனைப் பிடித்துக் கொடுத்து விட்டார். பெரிய மருது திருப்பத்தூரில் தூக்கிலிடப் பட்டான். அஞ்ஞு—துரைக்கு வெற்றி! ஒரு பிள்ளை துப்புச்சொல்லி விட்டான்; கானூரைக் கொள்ளையடித்தவர்கள் பெயர் ருசுவாயிற்று. அவர்களைப் பிடிக்கச் சிப்பாய்கள் வருகிறுர்கள்! உடனே தப்பித்துக் கொள்ளாவிட்டால் தலை தப்பாது."

XIV. விடுதலை

சிப்பாய்களும் ஆங்கில வீரரும் காட்டை வளைத்துக் கொண்டு சுட்டனர். திருடர்கள் பலர் பட்டனர்; மீதி எல்லாரும் பிடியுண்டனர். வீரய்யாவை விலங்குமாட்டி செம்பனூருக்குக் கொண்டு போனர்கள். முருகன் மட்டும் தப்பிக் கொண்டு கானூர் சேர்ந்தான். அங்கு மல்லப்பன் பண ஏக்கம் பிடித்து இறந்து போனுன். டாணு முத்துவும் மதுரை ஆஸ்பத்திரியில் இறந்து போனுன். மல்லப்பன் சம்ஸாரம் வீட்டை விற்று வந்ததை எடுத்துக்கொண்டு திருப்பரங் குன்றத்தில் பிறந்த வீட்டில் வசித்தாள். தங்கராஜா அங்கே பள்ளிக்கூடத்தில் படித்தான். முருகன் வீடு, வெள்ளத்தால் விழுந்து விட்டது. குடும்பம் போன இடம் தெரியவில்லை. 'நேற்றிருந்தவர்களை இன்றைக்குக் காணேம்; உலக வாழ்வு இப்படி யிருக்கிறது. இனி நாம் யாராயினும் பெரியாரை அண்டித் தொண்டு செய்து கொண்டு கடவுளன்பில் காலங்கழிப்போம்' என்று பட்டது முருகனுக்கு. முதலில் தன் மீது மல்லப்பன் சுமத்திய பழியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அவன் அதற்காகத் தைரியமாகச் செம்பனூர் டாணுவிற்கு வந்தான்.

கானூர் கொள்ளை விசாரணை நடக்கிறது. வீரய்யாதான் கொள்ளைத் தலைவன் என்று ருசுவானது. அப்போது முருகன் வந்து முன்னின்ருன். இவ்வாறு துணிந்து பேசினுன் :—

"சர்க்காருக்கு ஒரு விண்ணப்பம். எனக்கு எழுத்துத் தெரியாது; வக்கீல் பிடித்துப் பேசவும் பணமில்லை. மனத்தில் உள்ளதை ஒளிக்கா

மல் சொல்லி விடுகிறேன். என்னைக் குற்றவாளி என்று பிடித்தீர்கள். இந்தக் கொள்ளை நடந்தது கூட எனக்கு மறுநாள் தான் ஊரார் சொல்லத் தெரியும். இங்கு வந்துதான் அதன் விவரம் தெரியும். இதோ நேருக்கு நேராகக் கேளுங்கள். இவர்களில் யாருடனாவது நான் சம்பந்தப்பட்டதுண்டா என்று. என் வாழ்வில் எப்போதாவது திருட்டு பொய் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தால் இப்போதே தூக்குப் போடுங்கள். மானத்தைவிட உயிர் பெரிதல்ல!"

நீதிபதி விசாரித்தார்.

"வீரய்யா, கொள்ளையில் முருகன் சம்பந்தம் உண்டா?"

வீர: அந்தப் புண்ணியவான் இப்படிக் காரியங்கள் செய்யமாட்டான்.

நீதி: பின்னே பிரதிவாதி வீட்டில் அகப்பட்ட 100 ரூபாய் எப்படி வந்தது?

வீர: மழைகாலம், முருகையா வீடு பட்டினியிருக்கிறதென்று தெரிந்து, நான்தான் ரூபாய் 100-யும் ஒரு சோற்றுக் கூடையையும் அவன் வீட்டுத் திண்ணையில் வைத்தேன். அதில் முருகன் துணை என்ற சீட்டும் வைத்தேன்.

நீதி: எத்தனை மணிக்கு?

வீர: இரவு 2-மணிக்கு.

நீதி: ருசு சரி; மணலூர் கஜானா வழிப்பறிக் கலகத்தில் முருகன் கூட்டு உண்டா?

இல்லவேயில்லை. அவரை நாங்கள் கட்டித் தூக்கிச் சென்றோம். கொள்ளைத் தொழில் விட்டு விவசாயம் செய்து பிழைக்கும்படி எங்களை அவர் தூண்டி நல்லபுத்தி சொன்னார்.

நீதி: சரி முருகா, உன் மீது குற்ற மில்லையென்று ருசுவாயிற்று; விடுதலை; நீ போகலாம். நல்ல பலசாலியா யிருக்கிறாய். உனது யோக்கியதைக்காகவும், நீ வீண் குற்றம் சுமத்தப்பட்டு வருந்தியதற்காகவும் பரிகாரமாக ஒரு தலையாரி வேலை ஒப்புக்கொள்ளுகிறாயா.

முருகன்: வேண்டாமையா போலீஸ் வேலை! இனி நான் கடவுளை நம்பிப் பிழைக்கிறேன். உத்தரவு; போய் வருகிறேன்! வேல்முருகன் துணை.

XV. அன்புச்சாமி

தேன் பொழியும்தேனூர்; வைகைப் பாசனம்; அத்துடன் நல்லேரியிலும் ஏராளமான தண்ணீர் உண்டு. அங்கே **அன்புச்சாமி** பெயர் விசேஷம். அவர் சொந்தப் பெயர் ஊர் யாருக்கும் தெரியாது. அவரது அன்பு மிகுதியால் எல்லாரும் "அன்புச்சாமி" என்று அழைத்தனர். அவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர்; நீண்டகாலம் அங்கே தவம்புரிகிறார். சக்தி வாய்ந்தவர்; அருள் பெற்றவர். தனது தவ சக்தியைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்கிறார். அவரைத் தரிசித்தாலே குற்றவாளிகள் திருந்துவர். குடிப்பவர் கள்ளை மறப்பர்; திருடர் உழைத்துப் பிழைக்கத் தொடங்குவர். வேசையர் தமது தொழிலை விடுத்து ஒழுங்காக மணம் புரிந்து இல்லறத்தில் வாழுவர். ஊனுண்பவர் ஊன் மறுத்துச் சைவமாவர். பிச்சை யெடுப்போர் உழைத்துப் பிழைக்கத் தொடங்குவர். அன்புச்சாமியார் 8-வயதிலேயே உலகை வெறுத்துத் துறந்தவர். அவருக்கு சாதி சமய வேற்றுமை கிடையாது. பெரியோர்கள் எங்கிருப்பினும் அவர்களை யண்டித் தொண்டு செய்து, அவர்கள் உபதேசங்களைப் பின்பற்றித் தன் வாழ்வை சுத்தப்படுத்திக்கொண்டார். பிற துறவிகளைப் போல அவர் பிச்சை யெடுப்பதில்லை; தான் உழைக்காமல் எதையும் அனுபவிப்பதில்லை. 8-வயதில் அவர் வீட்டை விட்டுக் கிளம்பினார்; பெற்றோர்கள் தேடிப் பார்த்தும் காண முடியவில்லை. முதலில் அன்புச்சாமி மதுரையில் ஒரு பாதிரியாரிடம் வளர்ந்தார். நல்ல கல்வி கற்றார். பைபிளில் அவருக்கு நல்ல நம்பிக்கை யுண்டு. "உனக்குள் உள்ள வானரசை அடை; மற்றதெல்லாம் தன்னால் வரும்" என்ற மஹா வாக்கியம் அவர் மனத்தில் ஊன்றிப்போனது. அந்தக் கடவுளரசைப் பற்றியே அவர் சிந்திப்பார். தாம் முதலில் ஆத்ம சித்தி அடையவேண்டுமென்று தக்க குருவைத் தேடி அங்கு மிங்கும் அலைந்தார். யானை மலையில் ஒரு ஜைனத்துறவியிடம் வடமொழியும், தத்வார்த்தமும் பயின்றார்; பழநியில் ஒரு பண்டாரத்திடம் தமிழும் சைவ சித்தாந்தமும் கற்றுத் தேர்ந்தார். ஸ்ரீரங்கத்தில் பிருந்தாவனதாஸ் என்னும் ஹரி பக்தரிடம் நாலாயிரப் ப்ரபந்தமும் பக்திமார்க்கமும் பயின்று வடக்கே சென்றார். காசியில் வேதம் படித்தார்; ஹ்ருஷீகேசத்தில் சச்சிதானந்த ஸ்வாமிகளிடம் அமர்ந்து யோக ஸாதனம் செய்து, மனோ ஜயமும், ப்ரம்ம ஞானமும் பெற்றுத் தாய்நாடு திரும்பினார். வறுமை, மடமையால் மக்கள் படுந் துயரத்தைக்கண்டு சகியாமல் அவரது சொந்த முத்தியைக் கருதாது, பிறர்க்கென வாழ முற்பட்டார்.

(22-2ம் பக்கம் பார்க்க)

இனி நாம் செய்ய வேண்டியது யாது?

[மொழிபெயர்ப்பு : ஸ்ரீ பிரம்மசாரி விசுவநாதன்]

நான் ஏதோ அவளுடைய பிழைப்பைக் கெடுக்க வந்ததாகக் கருதிச் சந்தேகத்துடன் அவள் பேசியதால் அவளிடம் இரக்கத்திற்குப் பதிலாக வெறுப்புண்டானது. சிறுமியைக் காக்க வேண்டுமாயின் தாயை நல்வழிப் படுத்த வேண்டும். அல்லது பலாத்காரமாய் அப் பெண்ணை வேறிடங் கொண்டுபோக வேண்டும். தாய் மகளுக்கு நன்மை செய்வதாகவே எண்ணியிருந்தாள். இத்தகைய வாழ்வைப் பலர் ஆதரித்தும் வருகிறார்கள்.

விவாகமும் செய்துகொள்ளாமல் பாடுபட்டும் உழைக்காமல் புருஷர்களின் காமத்திற் கிரையாகிப் பிழைக்கும் இவர்கள்தான் இப்படியிருக்கிறார்களோவெனின் நாகரிகமான குடும்பப் பெண்டிராகக் கருதப்படுவோரும் இவ்வாறுதான் வாழ்ந்து வருகிறார்கள். வீட்டு வேலைகளைச் செய்யாமலும் தங்கள் கடமைகளை யுணராமலும் இவர்கள் சோம்பேறிகளாய்க் காமுகிகளாய் வாழ்கின்றனர். தங்கள் புத்திரிகளையும் மனமார நாடகச் சாலைகளுக்கும் நர்த்தன மண்டபங்களுக்கும் கூட்டிக் கொண்டுபோய்த் தங்கள் தீய பழக்கங்கள் அவர்களுக்கும் பிடிபடச் செய்கின்றனர். புருஷர்கள் ஸ்திரீகளுக்குச் சோறிட்டுத் துணிமணி கொடுத்துக் காக்கவேண்டுமென்றும் அதற்குப் பிரதியாக ஸ்திரீகள் புருஷர்களின் காமத்தைத் திருப்தி செய்ய வேண்டுமென்றுமுள்ள ஒரே அபிப்பிராயமே வேசைகளுக்கும் இவர்களுக்கு மிருக்கிறபடியால் இவ்விரு சாராரும் சமானமானவர்களே.

அத்தியாயம் 9

ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளையும் சிறுவர்களையும் பாழாகாது காக்க விரும்பி அவர்களிற் பலரைப் பார்த்தேன். பன்னிரண்டு வயதுப் பையனொருவனை, அவன் புத்திக் கூர்மைக்காகப் பிரியப்பட்டு வீட்டிற்குக் கொண்டுபோய் ஒரு வாரம் என் சமையற்காரனுக்கு உதவியா யிருக்கச் சொன்னேன். பின்னொரு நாள் ஒரு குடியானவன் அப்பையனைத் தன்னுடன் தோட்ட வேலைக்கு அனுப்பும்படி கேட்டான். நானும் அவனை அவ்வாறே அனுப்புவதாயிருந்தேன். ஆனால் அவன் இந்த சமாசாரந் தெரிந்ததும் ஓடிவிட்டான்; சத்திரத்தில் தேடியும் அவன் அகப்படவில்லை. மிருகக் காக்ஷிசாலையில் யானையை நடத்திக்கொண்டு போகும் வேலையில் அவன் அமர்ந்துகொண்டான்.

நான் அவனைப் பார்க்கச் சென்றபோது என் கண்ணிற் படாமல் விலகிக்கொண்டான். சோம்பேறியாய் வாழ்வது சுகம் என்றெண்ணி இவன் கெட்டுப் போனான். பணக்காரனான நானும் அவனைப் போன்றவனே. அவனைத் திருத்தும் எண்ணத்துடன் அவனை வீட்டிற்குக் கூட்டி வந்தேன். என் வீட்டில் அவன் பார்த்தது என்ன? என் மக்கள் யாவரும் தாங்கள் வேலை செய்யாது பிறருக்கு ஓயாது வேலை கொடுத்த வண்ணமிருந்தனர். ஆகவே பாடுபடாது பிறரை வேலை வாங்கிக்கொண்டு நன்றாகச் சாப்பிட்டுச் சுலபமாய்க் காலந் தள்ளுவதே சுகமென அவன் கற்றுக் கொண்டான்.

என் மக்கள் லத்தீன் கிரேக்க பாஷைகளைக் கற்று வந்தது ஒரு வேளை அவனுக்குத் தெரிந்திருக்காது; தெரிந்திருந்தால் இன்னுங் கெட்டுப் போயிருப்பான். ஏன்? லத்தீன் கிரேக்க பாஷைகள் படிப்பது வருங் காலத்திலும் உழைக்காது சுகமாய்க் காலந் தள்ளுவதின் பொருட்டன்றோ? இதையும் அவன் தெரிந்து கொண்டிருந்தால் அவனது அபிப்பிராயம் திடப்பட்டிருக்கும்.

ஆகவே குடியானவனுடன் சென்று பாடுபட்டுழைத்து எளிய உணவுண்டு வாழ்வதைவிட வேலை செய்யாமல் சுகமாய் அதிகம் சம்பாதித்தலே மேல் என்று அவன் எண்ணிக்கொண்டான். எனது சொந்த மக்களைச் சோம்பேறிகளாகவும் சுகப் பிரியர்களாகவும் வளர்த்து வரும்போது பிறர் மக்களைச் சீர்திருத்த உத்தேசித்தது என்ன மதியீனம்! சத்திரத்திலிருந்தோரிற் பெரும்பாலர் தங்களுக்கும் பிறர்க்குப் உபயோகமான காரியங்களைச் செய்து வந்தமையால், அவர்கள் என்னைவிட மேலானவர்களே.

எத்தனையோ அனாதைக் குழந்தைகளும் வேசைகளின் ஆதரவற்ற மக்களும் அங்கேயிருந்தனர். ஆனால் என் வாழ்க்கையை நான்

சீர்திருத்திக்கொள்ளாதமட்டும் பிறரைத் திருத்துவதோ பரோபகாரஞ் செய்வதோ முடியாதென்று தெரிந்து கொண்டேன். இக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் சோறுந் துணியுமளித்துப் பல விஷயங்களைக் கற்றுக்கொடுக்கலாம். ஆனால் நான் பாடுபட்டுச் சம்பாதிக்காமல் சுகமாய்க் காலந்தள்ளும் வரை இவர்களுக்கு உழைப்பைப்பற்றி யுபதேசிப்பது பயனற்றதேயாகும்.

ஒரு நாய்க் குட்டியைக் கொஞ்சிச் சோறு போட்டு வளர்த்து அதைப்பார்த்து சந்தோஷிப்பது சாத்தியமான காரியம். ஆனால் ஒரு மனிதனுக்கு உணவும் உடையும் அளித்து எழுத்தறிவிப்பதோடு நின்றுவிடுவது சரியல்ல. வாழும் முறையைக் கற்பிப்பதே யாவற்றினும் அவசியம். உலகத்தாரிடமிருந்து தான் பெற்றுக்கொள்வது சொற்பமாயும், பிறருக்குத்தான் உதவுவது பன்மடங்கு அதிகமாகவும் இருக்கவேண்டும்.

அத்தியாயம் 10

ஒரு நாள் சத்திரத்திற்குப் போய்ப் பண வுதவி வேண்டியவர் யாரென்று பார்த்ததில், இருவர் அகப்பட்டனர். ஒரு கிழவி உணவுக்கு வழியின்றி, வேலைசெய்யவும் முடியாமல் எலும்புந் தோலுமாயிருந்தாள். இரண்டு நாட்களாய் ஒன்றும் சாப்பிடவில்லை யென்று அவள் சொன்னதைக் கேட்டு, ஒரு ரூபிள் அவளுக்குக் கொடுத்து வெளியேறினேன். பிறர் நான் கொடுத்ததைக் கவனித்தது பற்றி அகமகிழ்ந்தேன்.

இன்னுமொரு கிழவிக்கும் திரவிய சகாயஞ் செய்தேன். இதைக் கண்டதும் என்னைச் சுற்றிப் பெரிய கூட்டங் கூடிவிட்டது; அதிற் குடிகாரர் பலரிருந்தனர். எல்லோரும் என்னை நெருக்கவே கையிலுள்ள பணத்தை யெல்லாம் தராதரம் பாராது தாறுமாறாகக் கொடுத்துவிட்டேன். பத்து ரூபிளுக்குச் சில்லரை மாற்றி மறுபடியும் வேறு பலருக்குக் கொடுத்தேன். இது வெல்லாம் மடமை யென்று பார்த்தவர் பலருங் கருதினர். நான் சத்திரத்திற்குப் போகும் போதெல்லாம் இவ்வாறு பெரிய கூட்டம் என்னைச் சூழ்ந்து கொள்ளும். பழகப்பழக இவ்வாறு உதவி செய்வதெல்லாம் நிலைத்த பயனென்றுந் தராதென்று தெரிந்துகொண்டேன்.

ஜனத்தொகைக் கணக்கெடுக்குந் தினத்தன்று நாங்கள் சுமார் இருபது பேர்கள் அந்தச் சத்திரத்திற்குப் போனோம். நகரத்துக் கனவான்களும், போலீஸ்காரர்களும் நியாயாதிபதிகளும் ஓயாமல் இவ்வேழைகளைப் பிடிப்பதுந் தண்டிப்பதும் வழக்கமாதலால், எங்களைப் பார்த்ததும் ஏதோ அபாயம் வந்துவிட்டதென்று பயந்தனர். கணக்கெடுப்பதற்காகக் கதவுகளைத் தாளிட்டதும் இன்னும் அதிகமாய்ப் பயந்தனர். நாய்கள் தங்களுக்கு நன்மை செய்ய வருமென்று முயல்கள் என்றும் நம்ப மாட்டா. அவ்வாறே இவர்கள் எங்களைப் போன்றவர்களைக் கண்டு சந்தேகப்படாமலிரார்.

ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு, அறை யறையாகப் பார்த்துச் சென்றோம். குடிவெறியோடு ஆண்களும் பெண்களும் விவஸ்தையின்றிப் படுத்திருப்பது கண்டோம். எல்லோருடைய உடையும் கந்தைத் துணிகளே; எங்குப் பார்த்தாலும் அழுக்கும் குப்பையுந் துர்நாற்றமுந்தான்.

இதற்கு முன் நான் சத்திரத்திலுள்ளவர்களைப் பார்த்தபோது எனது நிலைமை பயங்கரமான புண்ணுள்ள ஒருவனைப் பார்த்து, இவ்வளவு காலம் இதை சுகப்படுத்தாதிருந்து விட்டோமே என்று விசனித்து, ஆனால் இனி சௌக்கியப் படுத்தி விடலாம் என்னும் நம்பிக்கையுடனிருக்கும் ஒருவனது நிலைமையை நிகர்த்திருந்தது. ஆனால் இப்போதோ மூடத்தனமாய்ச் சித்திரவதை செய்துவிட்டு, ஐயோ! இனிமேல் இதைக் குணமாக்க முயற்சிப்பது வீணேயென்று நம்பிக்கை யிழப்பவன் போலானேன்.

மதிப்புரை

நீதிநூற் கோத்து: வெளியிட்டோர் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், பவழக்காரத் தெரு, சென்னை. விலை அணா 4.

நந்தமிழ் மூதறிஞர்களின் அறவுரைகளான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், அறநெறிச் சாரம் எல்லாம் ஒருங்கே ஒரு சிறிய கையடக்கமான புத்தகத்தில் அமைந்திருக்கின்றன. இப்புத்தகம் ஒழுக்கங்குன்றிப் போயிருக்கும் இக்கால மக்களுக்குப் பெரிதும் உபயோகப் பெறுமென்பதில் ஐயமில்லை.

பாரதமாதா: புதுச்சேரியிலிருந்து வெளிவரும் 'பாரதமாதா' தீபச்சுடர் என்னும் படிவம் வரப் பெற்றோம்.

'ஜன நாயகம்' என்ற கொழும்புவிலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகையின் முதல் மூன்று இதழ்கள் வரப் பெற்றோம்.

ஹிந்துஸ்தானில் — இன்ஷ்யூர் செய்யுங்கள் பிரதிநிதிகளா யிருங்கள்

இக்கம்பெனிக்குச் சமமான அனுபவம் வாய்ந்த
ஆபீஸுகளுக்குள் மிகப் பிரதானமான லைப் ஆபீஸ்

அபிவிருத்தியின் புள்ளி விவரங்கள்

புதிய வியாபாரம் (1938—39)	3	கோடி	14	லக்ஷத்திற்கு மேல்
அமுலில் இருக்கும் பாலிஸிகள்	16	,,	34	,,
ஆயுள் நிதி	2	,,	96	,,
மொத்த ஆஸ்தி	3	,,	36	,,

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷுரன்ஸ் சொஸைடி லிமிடெட்

ஹெட் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
சுரேந்திரனாத் பானர்ஜி ரோட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
170, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

தமிழ் நாடெங்கும் வெற்றி!

ஸ்ரீ சாட்டர்ஜியின் ஒப்பற்ற
ஒலிப்பதிவு!
உயரிய நடிப்பு,
நாட்டியம், சங்கீதம்,
இயற்கைக் காக்ஷிகள்
ஒருங்கே அமையப்பெற்றது!

கிராதா அர்ஜுனா அல்லது அர்ஜுனன் தவம்

மகாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி—அர்ஜுனன் திருக்காரவாசல் சுப்புலக்ஷ்மி—ஊர்வசி
K. பவானி (சாம்பமூர்த்தி) —நாரதர் T. M. ராமசாமி —சிவகிராதன்

தயாரிப்பு :—**வீனஸ் பிக்சர்ஸ்,** ராயப்பேட்டை, சென்னை.

'சக்தி'—விற்பனையாளர்கள்

சென்னை	—	மதராஸ் நியூஸ் ஏஜன்சி, மவுண்ட் ரோடு.
சென்னையிலும் ரயில்வே நிலைய புத்தகசாலைகளிலும்	—	ஹிக்கின்பாதம் புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.
திருச்சிராப்பள்ளி	—	திரு என். ஜி. உபயதுல்லா நியூஸ் ஏஜண்டு, தஞ்சாவூர் ரோடு, திருச்சி டவுன்.
காரைக்குடி	—	பாரதி பிக்சர் பாலேஸ், கல்லுக்கட்டி.
திருநெல்வேலி	—	திரு R. V. பதிராவ், நியூஸ் ஏஜண்டு, திருநெல்வேலி ஜங்ஷன்.
கோயமுத்தூர்	—	திரு C. N. நாராயணன், நியூஸ் ஏஜண்டு.
ராபர்ட்ஸன்பேட்டை	—	திரு T. R. P. சாரதி அன் கம்பெனி, ஊர்காம்.
கொடுமுடி	—	திரு அபுதுல் அஸீஸ்கான், நியூஸ் ஏஜண்டு.
நாகர்கோவில்	—	திரு V. ராமச்சந்திர அய்யர், நியூஸ் ஏஜண்டு.
வேலூர்	—	திரு K. ஸ்ரீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்சி.
புதுச்சேரி	—	திரு E. S. ரெட்டியார், நியூஸ் ஏஜண்டு.
தேவகோட்டை	—	திரு PL. முத்தையா, ஸ்ரீ ஜெயம் அன் கம்பெனி.
ராமச்சந்திரபுரம்	—	அன்பு நிலையம்.
யாழ்ப்பாணம்	—	ராஜா பொடிக்கடை, நியூஸ் ஏஜண்டு.
கண்டி	—	திரு K. A. M. P. மீராசாகிப், நியூஸ் ஏஜண்டு,
கொழும்பு	—	திரு M. K. பொன்னையா பிள்ளை, நியூஸ் ஏஜண்டு.
இரங்கூன்	—	திரு V. B. சாஸ்திரி, ஜெனரல் நியூஸ் ஏஜன்சி, பேயர் தெரு.
கோலாலம்பூர்	—	திரு T. சிவகுரு அன் பிரதர்ஸ், 108, டிரிக் பீல்டு தெரு, Post Box 2[illegible]5.

இன்னும் மற்ற எல்லா இடங்களுக்கும் விற்பனை
செய்யவும், சந்தா, விளம்பரம் சேர்க்கவும்
ஏஜண்டுகள் தேவை. விபரங்
களுக்கு எழுதவும்.

'சக்தி' காரியாலயம்,

52, அரண்மனைக்காரத் தெரு,

சென்னை.

வெளிவந்து விட்டது! பிரதிகளுக்கு முந்துங்கள்!!

நகைச்சுவை நிறைந்த இனிய சமதர்ம நாவல்

இளிச்ச வாயன்

(LAUGHING MAN)

புலவர்மணி விக்தர் ஹ்யூகோவின் (L' Homme Gui Rit) இளிச்ச வாயன் எனும் இந்த நாவல், பல சுதந்திர வீரருக்கு ஆவேசமளித்திருக்கிறது. ஜார் ஆட்சியில் நாடுகடத்தப் பெற்ற லெனின் (Lenin) சிலகாலம் பாரிஸில் வசித்தார். அப்போது அவர் ஏராளமான நூல்களைப் படித்தார். அவர் மனதைக் கவர்ந்த நூல்களில் இளிச்சவாயன் தான் முதன்மையானது.

சுவாமி சுத்தானந்த பாரதியார் தமது அழகிய, இனிய தமிழில் தமிழருக்கு மொழிபெயர்த்து அளித்திருக்கிறா ரென்றால் இதன் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

இதன் விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:

சக்தி பிரஸ் லிமிடெட்

52, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை.

ஸண்டே டைம்ஸ் லிமிடெட்,
எர்ரபாலு செட்டி தெரு,
சென்னை.

அன்பு நிலயம்,
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா.

BUILT *to* LAST

"Remington"

TYPEWRITER YOUR BEST INVESTMENT

These models have proved their stamina and mechanical superiority under all climatic conditions. Whether used or abused, they remain the most compact, durable and altogether satisfactory Machines ever made. They have the world-famous Remington quality of meeting every demand. And they are within everybody's means Fill in Coupon below and post to-day, without any obligation, for terms of easy payment system.

REMINGTON NOISELESS

In the hot weather, when nerves are frayed, Efficiency comes with silent speed when you use Remington Noiseless Portable—the supreme typewriter. To typewriter users, accustomed to the metallic clatter of ordinary machines, this Portable is an amazing revelation. In short, to superlative writing performance is added the pleasing advantage of QUIET. You do more and better work because you can concentrate.

REMINGTON RAND MODEL 1

Remington Model No. 1 Portable Typewriter is a great son of a great family. To modern-to-the-minute improvements and refinements are added efficiency features possessed by no other standard Portable . . . Writing on this Model is an entirely pleasant experience . . . it lifts "Remington" to a yet higher level of satisfactory service, however strenuous.

REMINGTON NOISELESS PORTABLE.

REMINGTON RAND MODEL 1.

COUPON

TO

REMINGTON RAND INC.

(Incorporated in U.S.A. with limited liability).

"BOSOTTO BUILDINGS", P. B. 370, MADRAS.

Please let me have full particulars of your plan by which I can obtain a Remington Portable on easy terms.

NAME...

ADDRESS...

....

MORE REMINGTONS BUILT AND SOLD THROUGHOUT THE WORLD IN 1938 THAN ANY OTHER MAKE.

சென்னை, 52, அரண்மனைக்காரத் தெரு, 'சக்தி' பிரஸ் லிமிட்டெடில் (சாந்தி பிரஸ்) அ. கிருஷ்ணமூர்த்தியால், அச்சிட்டு வெளியிடப் பெற்றது. நிருவாக ஆசிரியர் : வை. கோவிந்தன்.